
# விரல்



மேலாண்மை பொன்னுச்சாமி

கங்கை புத்தக நிலையம்

கங்கை

# விரல்

மேலாண்மை பொன்னுச்சாமி

கங்கை புத்தகநிலையம்

23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : மே, 1995
இரண்டாம் பதிப்பு : (கங்கை) டிசம்பர், 2003
© உரிமை : ஆசிரியர்

விலை ரூ. **45.00**

- Title **VIRAL**
- Author **MELANMAI PONNUSAMY**
- Edition Second Edition, December, 2003
- Pages 184
- Published By **Gangai Puthaga Nilayam** T.Nagar, Chennai-17.
- Price Rs. **45.00**

---

Laser Typeset by: Sivaa Graphics, Ph: 56152070

Printed at : Nathan & Company, Chennai - 42.

# சமர்ப்பணம்

*செம்மலர் ஆசிரியரும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எனும் ஆலமரத்தை நிறுவி வளர்த்தவரும், நாவல், விமர்சனத் துறையில் அழுந்தக் கால் வைத்தவரும், கிராமத்துப் பாமரத்தனத்துடன் எழுதத் துவங்கிய என் கதைகளை விருட்சம் சுமக்கும் விதையென முன்னுணர்ந்து காத்து, வளர்த்து என்னை எனக்கும் உலகுக்கும் அறிமுகப்படுத்தியவரும், என் போன்ற எத்தனையோ படைப்பாளிகளுக்கு ஆதர்சத் தலைவராகவும் பாசமிகு தோழராகவும் விளங்கிய என் இனிய தோழர் கே. முத்தையா அவர்களுக்கு...*

# முன்னுரை

**கி**ராமங்களின் உற்பத்தி முறையும், சாகுபடி விதமும் நவீனமாகியிருக்கிறது. உழைப்பை மட்டுமே சார்ந்து நின்ற உற்பத்தி முறைமை.. இப்போது உழவு, நவீன விதைகள், ரசாயன உரம், ஊடுருவிப் பாய்கிற பூச்சி மருந்துகள் என்று பணச் செலவுகள் செய்து விளைச்சல் காணுகிற புதிய முறைமையாக மாறியிருக்கிறது.

இந்த மாறுதல், விவசாயிகளுக்கும், விவசாயம் சார்ந்த கூலி மக்களுக்குமான உறவுகளையும் நிறமாற்றம் செய்திருக்கிறது. கிராமங்களுக்கேயுரித் தான மனித நேயம் மிகுந்த அந்நியோன்யம், கொடுக்கல்வாங்கல் எல்லாமே நிறமாற்றம் பெற்றிருக்கிறது.

விவசாய வீட்டுப் பிள்ளைகள் விவசாயத்தை நேசிப்பது என்கிற இயல்பான தன்மைகளும் இயல்பு மாறுகின்றன.

இந்த மாறுதல்கள் கலாசாரத்திலும் நிகழ்கிறது. தெம்மாங்குப் பாட்டுகள், தாத்தா பாட்டிக் கதைகள், வியர்வைக் கலையான வீரம் செறிந்த கிராமீயக் கலைகள் யாவும் மங்கி வருகின்றன. தூரம் தூரமாகின்றன.

எங்கள் சின்னஞ்சிறு குக்கிராமத்தில்கூட ஆகாய வழியில் வலை வீசிக்கொண்டு நிற்கின்ற 31 ஆண்டனாக்கள். காதுகுத்து- கல்யாணம்—பூப்புனித நீராட்டு போன்ற குடும்ப விழாக்களில்கூட டெக்—டி.வி. சினிமாக்களின் ஆக்ரமிப்பு, காட்டு வெளியில் மேய்கிற ஆடுகளைப் பார்த்துக் கொண்டு வெயிலில் நிற்கிற ஆட்டுகாரனின் உதடுகளில்கூட சினிமாப் பாட்டின் சிணுங்கல்கள்...

இதெல்லாம்... கிராமங்களின் புதிய பூச்சுகள். புதிய நிறங்கள். புதிய தோற்றங்கள்.

இவையெல்லாம் ஆரோக்கியமான மாற்றங்களா...? முன்னோக்கிய வளர்ச்சியா? அல்லது வளர் சிதைவுகளா? என்பது ஆய்வுக்குரிய விஷயம்.

உறவுகளிலும், கலாசாரத்திலும், மனிதப் பண்பாட்டுச் சாயல்களிலும் ஏற்பட்டிருக்கிற இந்தப் புதிய சலனங்களை என் கதைகள் பதிவு செய்கின்றன.

வாழ்க்கை நிகழ்வுகளால் மனிதப் பண்புகள் மாறுவதும், மானுட ஒற்றுமையான செயல்களால் வாழ்க்கையின் முகமே மாறுவதுமாக... வரலாறு முன்னோக்கி நகர்கிறது.

இந்த நகர்வின் உள் வேதனைகளையும், ரணங்களையும், திசைகளையும் என் கதைகள் உணர்த்துகின்றன.

வானம் பார்த்த பூமியான கரிசல் பகுதி மக்களின் அருமைகளையும், பெருமிதத்துக்குரிய உயர் பண்புகளையும் மட்டுமே என் கதைகள் சொல்வ தில்லை. அதற்கும் ஆழத்தில் அதிர்கிற சிறுமை

களையும், கசப்பூட்டும் துயரங்களையும், சிதைவுகளை யும் சேர்த்தே பதிவு செய்கின்றன.

வாழ்வின் சமகாலப் புதிய முகங்கள் என் கதைகளில் வெளிப்பட்டிருக்கின்றன.

இதெல்லாம்... ஏன் முன்னுரையில் சொல்கிறேன்? காரணம் இருக்கிறது.

முற்போக்காளர்கள் மீது பொதுவாக ஒரு குற்றச்சாட்டு இப்போது சொல்லப்படுகிறது. 'ரொம்ப அதிநவீன வாதிகளை'ப் போல தம்மைப் பகட்டிக் கொள்கிற சமகால உருவவியல் வாதிகளால் மட்டுமே அந்தக் குற்றச்சாட்டு கூறப்படுகிறது. அது என்ன குற்றச்சாட்டு?

"முற்போக்காளர்களின் யதார்த்தம், மொண்ணை யான யதார்த்தம். வாழ்வின் மேலோட்டமான சம்பவங்களை மொண்ணையான யதார்த்த பாணி யில் கதை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்."

இதுதான் அந்தக் குற்றச்சாட்டு.

இது... கொஞ்சம்கூட உண்மைக் கலப்பற்ற— அப்பட்டமான—அவதூறு.

வாழ்வின் மேலோட்டமான சம்பவங்களையல்ல... புறவாழ்வின் மிகப் புதிய சலனங்களையும்—மனித உறவுகளின், உணர்வுகளின் நிறமாற்றங்களையும் முற்போக்காளர்கள் பதிவு செய்வு செய்து வருகிறார்கள் என்பதே நிஜம்.

அது மட்டுமல்ல... அவற்றையும் கூர்மழுங்கிப் போன 'மொண்ணையான' யதார்த்தமாகச் சொல்வ தில்லை. ஆழ்ந்துணர்ந்த மன உலக வெளிப்பாடு

களாக—ஆகவே கலைத் தரமிக்க வகையில்—சொல்கிறார்கள். வாழ்வின் நிகழ்வுகள் மன உலக யதார்த்தமாக உணர்வுலகில் கலந்து சங்கமித்து ததும்பிய வெளிப்பாடுகள்தான்... முற்போக்காளர்களின் படைப்புகள் அதனால்தான்... அவர்கள் படைப்புகள் யதார்த்த வடிவத்திற்கே புதிய பரிமாணம் தந்து கொண்டிருக்கின்றன.

சமூக அக்கறையில் எந்த அளவுக்கு ஆழமும் அழுத்தமும் அசலாகவும் முற்போக்காளர்கள் இருக்கிறார்களோ... அதே அளவுக்கு இலக்கிய அக்கறையும் கொண்டிருப்பார்கள். உள்ளடக்க அக்கறையின் அளவுக்கு வடிவ அக்கறையும் இருக்கும்.

'இலக்கியம் மக்களுக்காக' என்பதில் அழுத்தமானவர்கள், முற்போக்காளர்கள். இலக்கிய உள்ளடக்கம் மக்களின் உணர்வுகளாக இடம் மாற்றம் பெற்றாக வேண்டும், அதற்கு வடிவம் மிகமிக முக்கியம் என்பதை அழுத்தமாக உணர்ந்திருப்பவர்கள்.

ஆகவே... 'மொண்ணை' யான யதார்த்தத்தை மனசின் ஆழத்திலிருந்து வெறுப்பவர்கள், முற்போக்காளர்கள். யதார்த்த வடிவத்திலேயே புதிய புதிய சோதனைகள் செய்து வெற்றி கண்டு யதார்த்த வடிவத்தையே சிருஷ்டிப்புத் தன்மைமிக்க வளரும் யதார்த்தமாக்கி... அதைப் போற்றி பாதுகாப்பவர்கள்.

இது... பொய்யல்ல... நிஜம்.

இந்த நிஜம்தான்... இலக்கிய உலகில் முற்போக்காளர்கள் மென்மேலும் செல்வாக்கு பெற்று வருகிற உண்மைக்கான காரணம்.

இது... இன்றைய நிஜம் மட்டுமல்ல... எல்லாக் காலத்து உண்மையும் இதுதான்.

வாழும் காலத்திலேயே விரிந்து பரந்த செல்வாக்கு பெற்றிருந்த புதுமைப்பித்தன் 'காஞ்சனையின் கனவு,' 'கடவுளும் கந்தசாமிபிள்ளையும்,' 'கயிற்றரவு' போன்ற பல கதைகளில் யதார்த்த தளத்தில் ஆழ மாகக் காலூன்றி நின்றுகொண்டே வடிவப் பரி சோதனைகள் செய்து வெற்றி கண்டிருக்கிறார்கள்.

இதில் இடம் பெற்றுள்ள கதைகளில் 'விரல்' எனக்கு மிகவும் பிடித்த கதை. உள்ளடக்கத்திலும், வடிவத்திலும் எனக்குப் பிடித்தமான கதை. அதே போல... புஞ்சை, பலிபீடம் கதைகளும் பிடித்த மானவை.

இக் கதைகளை தொகுப்பாக சிறந்த முறையில் அழகான வடிவத்தில் நூலாக வெளியிடுகிற புகழ் மிக்க 'வானதி பதிப்பக' உரிமையாளர் திருநாவுக்கரசு அவர்களுக்கு எனது இதய நன்றிகள்.

இதோ... உங்கள் கையில் எனது நூல். எனது படைப்புகள். வாசித்து முடித்தவுடன் மவுனத்தில் ஆழ்ந்துவிடாமல்... ஒரு கடிதம் போடுங்கள். படைப்பு பற்றிய உங்கள் பாராட்டுகள் என் பேனாவுக்கு மையூற்றும்; விமர்சனங்கள் என் பேனாவை இன்னும் தீட்டிக் கூர்மையாக்கும். இரண்டுமே என்னை வளர்க்கும்.

நன்றி !

என்றும் உங்கள்
மேலாண்மை பொன்னுச்சாமி

**16.1.1995**
மேலாண் மறைநாடு
**626127**
காமராசர் மாவட்டம்

# உள்ளே...


1. விரல் 10

2. வேறு வேறு 26

3. புஞ்சை 42

4. இந்தியா 53

5. கோடை மழை 60

6. பலி பீடம் 73

7. ஈரம் 89

8. ஜீரணம் 103

9. கிடங்கு 117

10. கட்டிப் புரளு! 127

11. +1 உலகம் 144

12. கறிவேப்பிலை 153

13. ஊர்ச்சோறு 171

1

# விரல்

வெள்ளைய நாயக்கர் ஈரத்துணியாய் துவண்டு விட்டார். கிழிந்த கந்தல் துணியாக, கிறுக்குப் பிடித்த வரைப் போல காற்றில் அலைந்து கொண்டிருந்தார். ரொம்பக் கிழடு தட்டிவிட்டது. வயசு அறுபதுக்கும் மேலே. சாவு வரமாட்டேங்குதே என்று ஏங்கித் தவிக்கிற அளவுக்கு நரகாவஸ்தையாகிப் போன முதுமை.

கட்டிலில் 'சட்டடியாய்' படுத்து விட்டார்.

மல்லாக்கப் படுத்துக் கொண்டு, பானைபோல உப்பிப் போயிருந்த தன் வயிற்றையே உற்றுப் பார்த்தார்.

'அப்பவும்... ஆம்பளைக்குக் கர்ப்பமாகுமா' என்ற சந்தேக நினைப்பே வரவில்லை அவருக்கு. 'இத்தனை வயசுக்குப் பிறகு, கிழட்டுக்கழுதைக்குக் கர்ப்பம் தரித்துவிட்டதே' என்ற வெட்கக்கேடுதான் அவரைப் போட்டுக் குழப்பி வாட்டி வதைத்தது. வெளியே தலைகாட்ட முடியாத கேவலக்கூத்து. பிடுங்கித் தின்கின்ற அவமான அவஸ்தை.

இன்றைக்கு என்னடாவென்றால்... கர்ப்பவயிறு தாறுமாறாக உப்பிக்கொண்டே போகிறது, காற்றடிக்கிற கார் டியூப் மாதிரி. விம்மி விம்மி உப்புகிற—ரோமம் படர்ந்த—வயிற்றைப் பார்க்கப் பார்க்க அவருக்குள் 'திக்,

திக்' கென்கிறது. பயத்தில் மூச்சுப் பிரிய மறுக்கிறது. மனத்திணறல். கண்களில் வந்து அப்பியிருக்கிற பீதி.

வெடித்துவிடுமோ என்ற நினைப்பு, திடுதிப்பென்று! 'வகுறு வெடிச்சுச் செத்த நாயக்கர்' என்று ஏழேழு தலைமுறைக்கும் நையாண்டி பண்ணிச் சிரிக்கிற கேலிக்கூத்தாகி விடுமோ என்ற பயம்.

பக்கத்தில் யாரோ நடந்து வருகிற உணர்வு. அழுத்தமாய் தடம் பதித்து வன்ம உணர்வோடு நெருங்குகிற பாதங்கள். கடைக்கண்ணால் மெல்லப் பார்த்தார். ஓங்கு தாங்கான ஆண் திரேகம். உடம்பு பூராவும் ரோம அடர்த்தி. வைரம் பாய்ந்த ஆண் உடற்கட்டு. கழுத்துக்கு மேல் மட்டும் பெண் முகம். வெறி கொண்டலைகிற பேய்க்கண்கள். பெண் முகம் முழுக்க வ்ன்மவெறி. விரிந்து கிடக்கிற ஈரக்கூந்தல். ஈரச் சொட்டடிக்கிற கூந்தல் நுனி.

ரோமம் அடர்ந்த ஆண் கையில் நீளமான வீச்சரிவாள், பளபளவென்று.

வெள்ளைய நாயக்கருக்குள் குலை நடுக்கம். வயிற்றை வெட்டி வகிர்கிற குரூரம் நிகழப் போகுதோ என்ற பதற்றம். மனசுக்குள் வியர்வை. தேகம் பூராவும் புல்லரித்தோடிப் பரவுகிற மரண பயம்.

பழிவெறி கொண்ட அந்தப் பெண் முகத்தின் பேய்க்கண்கள். தலைக்குமேல் நிதானமாக ஓங்குகிற அரிவாள்.

'ஐயய்யோ... என்னைக் காப்பாத்த ஒரு நாதியில்லையா?' அலற நினைத்தார். வாய்வரவில்லை. நெஞ்சுக்குள் உயிர்ப்பறவையின் தவிப்பு.

அதற்குள்—

சதக்கென்று விழுகிற வெட்டு, நாலாபக்கமும் சள்ளென்று தெறிக்கிற ரத்தம். பிளந்த வயிற்றிலிருந்து பொதுக்கென்று சரிகிற ஈரக்குடல்.

'செத்தேனே' என்ற பீதியில் நனைந்த அவல நினைப்பில் சரிந்த குடலை அள்ள வலது கையால் துழாவ... அது நாலாபக்கமும் வழிந்தோடும் நீராக மாயம் காட்ட....

## 2

'ஆஹ்... ஹ்.... ஹ்... ஹய்யய்யோ... ஹ்...' என்ற குழப்பமான கதறலோடு பதறிப்போய் கண்விழித்தார், வெள்ளைய நாயக்கர். சட்டென்று பதைப்போடு வயிறைப் பார்த்தார். நல்லவேளை! சேதாரமில்லாமல் ஒட்டிக் கிடந்தது. வெடித்து விடுவதைப் போல நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது, பயத்தில். உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. இன்னும் விலகாத மனப் படபடப்பு. தேகமெல்லாம் நடுக்கச் சிலிர்ப்பு.

"ச்சே! எம்புட்டுப் பயங்கரமான கனா. நெனைச்சாலே குலை பதறிக்கிட்டு வருதே!" வாய்விட்டு முணுமுணுத்துக் கொண்ட வெள்ளைய நாயக்கர், கண்ட கனாவை மறுபடியும் நினைத்துப் பார்க்க முயன்றார். தெளிவாகத் தெரியவில்லை. ஞாபகத்தில் பிடிபடாமல் நழுவிக் கொண்டோடிய மங்கலாகத் தெரிந்த ஒரே காட்சி! விரிந்த ஈரக் கூந்தலோடு பழிவெறி கொண்ட ஒரு பெண்முகம்.

சுற்றுமுற்றும் பார்த்தார். கனத்த இருட்டு. சுவர்க்கோழியின் ரீங்கரிப்பு 'ஙய்ய்ய்' யென்று.

உள்மனசின் மூலைகளிலும் 'நய்ய்ய்' யென்கிற இரைச்சல். மனசாட்சியில் சுயகுரல். 'என்ன இது...? தெனந் தெனம் இப்படி கெட்ட கெட்ட கனாவா வருது? செத்துச் செத்துப் பெழைச்ச பெழைப்பாய்ப் போச்சே... இந்த நரகத்துலே கெடந்து சீரழியுறதை விட, ஒரேயடியா செத்துத் தொலைஞ்சிட்டா... நிம்மதியாய்ப் போயிடுமே.'

மனஉளைச்சல். நச்சரிப்பான சுயபரிதாப நினைவுகள். காரணம் புரியாத மனப்புழுக்கம்.

மனசின் ஆழத்துக்குள் புதையுண்டு மக்கிப்போன ஞாபக நெடிகள். பழைய ஞாபகங்களின் உயிர்ப்பு. உளைச்சல். இவரது வக்ர மனசின் குரூரத்துக்கும், குரோதத்துக்கும் இரையாகி மடிந்த உயிர்களின் உக்ரப் பாய்ச்சல்கள்.

## 3

கிராமத்தின் விளிம்பைத் தழுவிக் கொண்டு வளைந்து கிடக்கிற ஓடை. நீர்ப்பிறப்பே கிடையாது. மூஞ்சி சிதைந்த பாறைக்காடு, ஓடை முழுக்க துருத்திக் கொண்டு நிற்கும் அடர்த்தியான வேலிமரக் காடு. அதைக் கடந்து...

ரெண்டு புஞ்சை தாண்டினால்... சேரி. பத்து நாற்பது கூரைக்குடிசைகள். கட்டை மண் சுவர்கள். வாலை யாட்டிக் கொண்டு 'உர்ர், உர்ர்' ரென்று உலாவும் பன்றிகள். கொடிகட்டி காயப் போட்டிருக்கிற மாட்டுச் சவ்வுகளின் வீச்சம்.

வெள்ளைய நாயக்கர் மட்டுமல்ல, மொத்த ஊர் ஜனமே இதைச் 'சேரி' என்றெல்லாம் சொல்ல மாட்டார்கள். 'தெற்குத் தெரு' என்பதுவும் கௌரவமாகிவிடுமே என்று

நினைப்பார்கள். வாய் கூசாமல் 'சக்கிலியக்குடி' என்று மூஞ்சியில் அடித்த மாதிரிச் சொல்வார்கள்.

சக்கிலியக்குடி ஜனம் என்றாலே ஊர் ஜனத்துக்கு இளப்பம் தான். மனுச மக்களைப்போல சமதையாக நினைக்க மாட்டார்கள். பன்றிகளை நடத்துகிற மாதிரித்தான். அண்டவிட மாட்டார்கள். தூரமாய் தள்ளிவைத்தே பேச்சு, காரியம் எல்லாம்.

வெள்ளைய நாயக்கர் இதில் பல படிகள் உசத்தி. அவருக்கு இளப்பம் மட்டுமல்ல, எரிச்சல் வரும். கிட்டத்தில் நெருங்க விடமாட்டார். பகையாளிகளைக் கண்ட மாதிரி இவருக்குள் ஒரு குலை நடுக்கம். ரொம்பப் பயப்படுவார். அந்தப் பயம்தான், வெறுப்பாக—குரோதமாக—வெளிமுகம் காட்டும்.

அதுக்கும் காரணம் இருக்கிறது.

சேரியை ஒட்டித்தான் அவரது புஞ்சை. சக்கிலியக் குடியின் தலைமாட்டில் புஞ்சை. நற்சதுக்கமாய் நாலு குறுக்கம். கிணறு, பம்ப் ஷெட் மோட்டார், சரளைக் கற்குவியல். தோட்டத்தில் எல்லாக் காலத்திலும் வேறு வேறு வெள்ளாமைகள்.

சக்கிலியக்குடி ஜனங்கள் அண்டிப் பழகவிட்டால், புஞ்சையில் அழிமானம் உண்டாகும் என்ற பயம், வெள்ளைய நாயக்கருக்கு. பயத்திலேயே அவர்களைப் பயமுறுத்தி வைப்பார். குரூரமான காரியங்களை நிறையச் செய்து அச்சுறுத்துவார்.

புஞ்சைப் பொழிகளில் விஷம் குழப்பிய கடலைப் புண்ணாக்கைப் போட்டு வைப்பார். புண்ணாக்கு வாசத்தில் ஈர்க்கப்படுகிற பன்றிகள் அதைத் தின்று விட்டு மல்லாந்து விடும்.

பன்றிகள் அவர்களுக்கு ஜீவனப்பிராணி. பணம் பெற்ற பன்றிகள் செத்துக் கிடக்கிற பாதரவைப் பார்த்து அந்த ஜனங்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுத அழுகைகள், கதறிய கதறல்கள், கொதித்த மனசிலிருந்து பீறிட்ட சாபங்கள், வேறு என்ன செய்துவிட முடியும்?

பொழி ஓரங்களில் ஊன்றப்பட்டு, காய்ந்த முள் வேலியில் படர்ந்த கொடிகளில் வெளியே தொங்குகிற பீர்க்கை, சுரைக்காய்கள், பார்க்கிற யாருக்கும் எச்சில் ஊற வைக்கும். ஒரு சில சிறுமிகள் குழம்புக்கு ஆசைப் பட்டு பிடுங்கி விடுவார்கள்.

அம்புட்டுத்தான். வெள்ளைய நாயக்கருக்கு மிளகாயை அரைத்து அப்பிய மாதிரி பற்றிக் கொண்டு வரும். விசாரித்து அந்தச் சிறுமிகளைத் தேடிக் கண்டு பிடித்து சகட்டுமேனிக்கு அடித்துப் போடுவார். தாட்சண்யமில் லாமல் பின்னி எடுத்து விடுவார். வாய் கூசாமல் மானக்கேடாகக் கேட்பார்.

"உங்க ஆத்தா எனக்கு முந்தி விரிச்சா ஒன்னைப் பெத்தா? என்ன தைர்யத்துலே காய்கனிமேலே கைவைச்சே? சின்னச் சாதி நாயே."

அடிபட்ட பிள்ளைகள் பயத்தில் பாவாடையை நனைத்துவிடும். அழுகையில் துடித்தவழும். சகிக்க மாட்டாமல் சில தகப்பன்மார்களும் பணிவு குறையாமல் கொதிப்பார்கள். "மாட்டை அடிச்ச மாதிரி பச்சை மண்ணை அடிச்சிருக்கீகளே... சாமி, இது ஞாயமா?"

"களவாண்ட சிறுக்கிக்கு முத்தமா குடுப்பாக?"

"சின்னஞ்சிறுசுக தெரிஞ்சும் தெரியாம செய்ஞ்ச தப்புக்கு, எல்லாந் தெரிஞ்ச பெரியாள் நீங்க... இம்புட்டுப் பெரிய வார்த்தை பேசலாமா... சாமி?"

"ஏலேய் சக்கிலியப் பயலே... செய்றதையும் செய்ஞ்சுட்டு பேச்சுமா பேசுறே? ஊரு சரியில்லே... அதான் இந்தக் குதி குதிக்கீக? படுவா ராஸ்கல்... இப்படிக் களவாண்டு திங்கணுமோ? நாக்கு கேக்குதோ? ஒம் பொண்டாட்டியை 'கூட்டிவிட்டு' வாங்கித் திங்கலாம்லே?"

இப்படித்தான் வெள்ளைய நாயக்கர் மூர்க்கமாக நடந்து கொள்வார். நா கூசாமல் நரகல் வார்த்தைகளை வீசுவார். அந்த ஊமை மக்களின் தன்மானத்தை தாட்சண்யமில்லாமல் கிழித்துப் போட்டு, காலால் மிதிப்பார்.

அவ்வப்போது உறுத்துகிற மனசாட்சிக்கு நியாயப்படுத்தி முணுமுணுத்துக் கொள்வார். "இந்தக் கழுதைகளை இப்படி அரட்டி மிரட்டி 'வைக்கிற இடத்திலே' வைச்சாத்தான்... வசங்கியிருப்பாக. மிஞ்சவுட்டுட்டா... தோள்லே ஏறி காதைக் கடிக்க ஆரம்பிச்சுடுவாக."

# 4

இளவட்டமாக இருந்த நாளில் இவர் இம்புட்டு சாதி வித்தியாசம் பாராட்டவில்லை. தெரு ஜனத்தோடு ரொம்பச் சரசம். கூனைத்தோல் தைக்க, செருப்பு தைக்க, களத்து வேலைக்கு ஆள் சொல்ல, என்று வருகிற நேரங்களில் மட்டுமல்ல... எல்லா நேரங்களிலும் அங்கேயே கிடையாய் கிடப்பார்.

வாலிபமுறுக்கு. கறித்திமிர். வயசுக் கோளாறு. தெருப்பெண்டுகளோடு இளித்து இளித்துப் பேசுவார்.

குழைந்து குழைந்து பழகுவார். இசகுபிசகாக நடந்து கொள்வார்.

செக்கை கண்டதா, சிவலிங்கம் என்று கண்டதா... தெரு நாய்? அவரும் அப்படித்தான். வயசு வரைமுறையே கிடையாது. நடுவயசைத் தாண்டிய பெண்டுகளோடு கூடச் சகவாசம். அந்தத் தெருவில் இவர் ஜாடையில் ஒன்றிரண்டு பிள்ளைகள் உண்டு என்று ஊருக்குள் ஒரு பேச்சு,

இப்படியான சமயத்தில் தான்—

வருசநாட்டிலிருந்து வாழ்க்கைப்பட்டு வந்து இருந்தது ஒரு சிட்டு. ரொம்ப இளசு. தெருவுக்குப் பொருந்தாத அழகு. வீச்சரிவாள் மாதிரி கச்சிதமான திரேகக்கட்டு. மஞ்சள் கிழங்கு நிறம். சீலைக் கட்டும், சிங்காரிப்பும் நாகரீகப் பாங்காக...

மனிதர் கிறுகிறுத்துப் போனார். ஆணியடித்த பார்வையாக பார்த்தார். நஞ்சடித்த கெண்டையாக சுற்றிச் சுற்றி வட்டமடித்தார். கிழடுகட்டைகளை கைக்குள் போட்டுக் கொண்டு தூதுவிட்டுப் பார்த்தார். கதையாகிற மாதிரித் தெரியவில்லை.

மோகத்தீ திகுதிகுவென்று தகித்து அவரைத் தாறுமாறாக்கியது.

ஒரு நாள் நடுச்சாமத்தில்—

வீட்டுக்குள் நுழைந்து விட்டார், புருஷன் ஊரில் இல்லை என்ற தைர்யத்தில். இருந்திருக்கிறான். காரியம் கை மீறிப் போயிற்று.

அன்றைக்கு, அவருக்கு மூச்சுமுட்டச் 'சாப்பாடு.' வீட்டுக்குள்ளேயே போட்டு புருஷனும் பெண்டாட்டியும்

சேர்த்து 'மிதி, மிதி' என்று மிதித்து, கந்தர் கோளமாய் கிழித்துப் போட்டு விட்டனர்.

இவரால் வாய்விட்டுக் கத்தவும் வழியில்லை. ஊமை கண்ட கனா.

வருசநாட்டுக்காரி அத்தோடு விடவில்லை. விடிந்தவுடன் ஊர் நாட்டாண்மையிடம் பஞ்சாயத்துக்குக் கொண்டு வந்து விட்டாள். வெள்ளைய நாயக்கரின் மானம் அன்றைக்குக் கன்னங்கரேலென்று கறுத்துப் போயிற்று.

'சாமி, சாமி' என்று சொல்லிக் கொண்டு, அவ்வப்போது ரெண்டும் மூன்றுமாக ரூபாய் கறந்து கொண்டு, காலைச் சுற்றிக் கொண்டு, அந்தரங்கமாய் கிசுகிசுத்துக் கொண்டிருந்த கிழடு கட்டைகளெல்லாம் பஞ்சாயத்தில் இவருக்கு எதிராக சாட்சி சொல்ல...

மனிதர் ஆழமாய் அதிர்ந்து போய்விட்டார்.

அந்த அதிர்வே ஓர் அனுபவத் தழும்பாக... அத்தோடு சமூகக் கசடும் அவருள் ஒரு குணமாகப் படிய... அவரைச் சாதிவெறி கவ்விக்கொண்டது.

காலைப் பிடிக்கிற இதுகளை நம்பிவிடக் கூடாது. அசந்தால்... கழுத்தை பிடித்து விடுவார்கள் என்கிற பயமே... அவருள் நிரந்தர உணர்வாக—

பயம் என்பதே ஒரு புதர்தானே! அதில் வக்ர நாகங்களும், வெறுப்பு விஷ ஜந்துகளும்தானே அடையும்!

## 5

**வெ**ள்ளைய நாயக்கருக்கு வயசு அம்பது இருக்கும். பெண் பிள்ளைகளையெல்லாம் கட்டிக் கொடுத்து

விட்டார். மகனுக்கும் கல்யாணம் 'மூய்த்து' வைத்து விட்டார். அப்போது—

ஊருக்குள் கரண்டு வந்த புதுசு. வரிசை வரிசையாக மின்கம்பங்கள். ஆகாய வலைப் பின்னல்களாக குறுக்கு நெடுக்காக ஓடும் ஒயர்கள்.

கமலை, கூனை, உருளை எல்லாம் மூலை சேர்ந்து விட்டன. புஞ்சைக்கு பம்ப் ஷெட் மோட்டார். அந்த இரும்பு ஜென்மம் கிணற்றுத் தண்ணீரை அள்ளி ஊற்றுகிற மாய மந்திரத்தில் ஜனங்கள் அசந்து போய் நின்றார்.

அள்ளி ஊற்றுகிற நீரும் சாதாரண வேகமா? தலையந்துபோகிற ஸ்பீடு. உருக்கி வார்த்த வெள்ளிக் கற்றையாய்....

அதில் குளிப்பது என்றால்... ஊர் ஜனத்துக்கு ஒரே குஷி. இமயமலையை எட்டிப் பிடித்த சந்தோஷம். ஆனந்தப் பரவசம்.

"மோட்டார்லே தலையை குடுத்து குளிச்சிட்டா... அந்தச் சொகமே தனிதானப்பா. ச்சே! என்ன வேகம்! சப்சப்புன்னு அறையுதே.. குத்தால மெல்லாம் பிச்சை வாங்கணும்."

ஊர் ஜனத்தின் இந்த உல்லாசப் பேச்சுகளை சக்கிலியக்குடி ஜனம் ஆச்சர்யமாகக் கேட்பார்கள். மிட்டாய்க் கடையைப் பார்க்கும் ஏழைப் பையன்கள் மாதிரி ஏங்கித் தவித்துக் கேட்பார்கள். வேறு என்ன செய்ய?

மேல்சாதிக்காரர்களின் பம்ப்ஷெட் மோட்டாரில் போய் சக்கிலியன் குளித்துவிட முடியுமா? தொட்டிக்குள் இறங்கி நீர்க்கற்றையில் தலையைக் கொடுத்துவிட முடியுமா? தொலியை உரித்து உப்பு தடவி விடமாட்டார்களா.. என்ன!

அப்பத்தான்... ஒரு நாள்—

வெள்ளைய நாயக்கரின் பம்ப்ஷெட் மோட்டார் இரைச்சலுடன் இயங்கிக் கொண்டிருந்தது. வாய்க்கால் ததும்ப ஓடிய தண்ணீர், மிளகாய்த் தோட்டத்துக்குப் போய்க்கொண்டிருந்தது.

மிளகாய்ச் செடி அந்த வருஷம் திகிடு முகிடான வளர்ச்சி. இடுப்பு உயரத்துக்குச் செடிகள், கொம்பும் கொழையுமாக. பச்சைப் பசேரென்று கடலாய் அடர்ந்த செடிகள்... வெள்ளி மூக்குத்திகளை அள்ளிச் சிதறின மாதிரி பூக்கள். நிறைமாசக் கர்ப்பிணியாக காயும் பூவுமாகத் ததும்பி நின்ற வெள்ளாமை.

மகன்தான் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான், தூரத்தில், நடுவில் சோளப்பயிர், கரும்புத் தோட்டம் மாதிரி. மகன் நிற்கிற இடத்திலிருந்து பார்த்தால் பம்ப் ஷெட் தெரியாது.

வெள்ளாமைகளைப் பார்த்துக் கொண்டே பொழியில் நடந்து வந்தார், வெள்ளைய நாயக்கர்.

கன்னிப் பெண்ணாக திமிறிக் கொண்டு வளர்ந்திருந்தது சோளப்பயிர். அகலத் தோகைகளில் காற்றின் மெல்லிய உரசல். சலங்கை சிணுங்குகிற சங்கீதச் சப்தம். பால்பிடிக்கிற பருவம். சோளப் பாலின் மிருதுவான லாகிரி வாசம்.

வாய்க்கால் தண்ணீருக்குள் அவர் நடக்கிற போது... 'சளப், சளப்' பென்று ஒரு சுகமான சப்தம். தற்செயலாக அவரது பார்வை பம்ப்ஷெட்டை ஏறிட்டுப் பார்த்தது. தொட்டியில் யாரோ குளிக்கிற மாதிரி தோற்றம். நாலாபக்கமும் சிதறிக் தெறிக்கிற நீர்த்திவலைகள்.

பார்த்தால்... ஒரு பெண் போலத் தெரிகிறது. இன்னாரென்று பிடிபடவில்லை. வயதாகிவிட்டது. கண் பற்றவில்லை. சாயங்காலச் சூரியன் வேறு கண்ணைக் குத்திக் கூசவைக்கிறது. நெற்றிக்குக் கீழே கண்ணுக்குக் குடையாக உள்ளங்கையை வைத்து... உற்றுப்பார்த்தால்—

குளிப்பது ஒரு பெண்தான். நிறைமாசக் கர்ப்பிணி. ஈரச் சேலை படிந்த உப்பிய வயிறு. சக்கிலியக்குடிப் பெண் போல ஒரு தோற்றம்.

அவருக்குள் குப்பென்று பற்றிக் கொண்ட ஒரு தீ. கண்மூக்கு தெரியாத கோபவெறி.

ஓர் ஈங்குஞ்சைக்கூட அண்டவிடாமல் அதட்டி வைத்திருக்கிறார். வேலி போட்டிருக்கிறார். சின்னஞ் சிறுசுகளைக்கூட நெருங்கவிடாமல் அடி பின்னியெடுத் திருக்கிறார். பன்றிகளைக் கொன்றிருக்கிறார்.

இத்தனையையும் மீறிக் கொண்டு ஒரு பொட்டச்சி நுழைந்து விட்டாளா? அவளுக்கு அம்புட்டுத் திமிரா? பயமற்றுப் போயிற்றா? ஒரு சக்கிலிச்சி வந்து குளிக்கிற அளவுக்கு—தன் கிணறு இளப்பமாகி விட்டதா?

அவருக்குள் ஒரு தகிப்பு. தாங்க முடியாத ஆத்திரத்தில் மட்டியைக் கடித்தார். வேரோடு ஒரு சோளத்தட்டையை விருட்டென்று பிடுங்கினார். மளமளவென்று நெருங்கினார். அவரை முந்திக் கொண்டு அவரது கோபவெறி...

இவரை அவள் கவனிக்கவில்லை.

சக்கிலியருக்கு எட்டாக்கனியான மோட்டார் குளிப்பு. கர்ப்பிணிக்குரிய ஆசைவெறியில் வந்து விட்டவள். நியாயமான ஆசை. குற்றமில்லாத ஆசை.

ஆசைத்தீரக் குளித்தாள். காணாததைக் கண்டு விட்ட பரவசத்தில் மூழ்கித் திளைத்துக் குளிக்கிற குளிப்பு. மனசும் சேர்ந்து குளிக்கிற குளிப்பு. ஆசைப் புருஷனோடு பின்னிக்கிடக்கிற சுகமயக்கத்தில் லயித்துப் போய்— 'தன்னை மறந்து அனுபவித்து' குளித்துக் கொண்டிருந்தாள்.

கிட்டத்தில் போய்ப் பார்த்தார். அவருள் பற்றிய தீ... கற்றைகற்றையாய் ஜூவாலை நீட்டியது. அவரது சாதிவெறி, சொந்த வன்மமாயிற்று.

வருசநாட்டுக்காரியின் மகள். இருட்டு வீட்டுக்குள் தன்னைப்போட்டு மிதிமிதியென்று துவைத்தெடுத்தவளின் ரத்தத் தொடர்ச்சி.

அடிவாங்கிய அந்த வலி, கேவலப்பட்ட அந்த அவமானம், சாதிவெறி எல்லாம் கூடிக்கலந்து அவருள் ஒரு பிசாசாக இறங்க—

சாட்டை போன்ற பச்சைச் சோளத் தட்டையால் ஓங்கிய கை மாறாமல் அடித்தார். சுளீரென்று விழுந்த ஈரத்தட்டையடியின் உக்கிரம்.

பின்னிக்கிடந்த மயக்க சுகத்தில் திளைத்துக் கொண்டிருந்த அந்தக் கர்ப்பிணிப் பெண், இந்த அடியின் சுழற்சியில் மனசின் ஆணிவேர் வரை அதிர்ந்து போனாள். அவளைத் தூக்கிச் சுழற்றிப் போட்ட மாதிரி தோன்றியது. நடுங்கிப்போய் நிமிர்ந்து பார்த்தால்—

பிசாசாக இவர். மாறிமாறி சோளத் தட்டையைச் சுழற்றினார். பளிச்பளிச்சென்று மின்னலாய் வெட்டிய அடிகள், தட்டை பிய்ந்து நார்நாராகச் சிதைகிற வரைக்கும்!

அவள் கத்தவில்லை. கதறவில்லை. வாங்கிய அடியை யெல்லாம் தின்று செத்தவள் மாதிரி, பயத்தில் அப்படியே

உறைந்து போய் இவரைப் பார்த்தாள். மிரட்சியான பார்வை. வெலவெலத்துப் போன பார்வை. பேயடித்த மாதிரியோர் உயிரற்ற பார்வை!

நடக்கமாட்டாமல் நடந்துபோய் குடிசையில் விழுந்தாள். ராத்திரியே அவளுக்குக் காய்ச்சல். குக்கிராமம். சக்கிலியக்குடி ஜனம். ஏழ்மையோடு பின்னிய அறியாமை. நடந்ததை யாரிடமும் சொல்ல அவளுக்கு மதியில்லை.

'பச்சைத்தண்ணீரில் குளித்ததால்தான் காய்ச்சலாக்கும்' என்று நினைத்து கசாயம் போட்டுக் கொடுத்தனர். கைப்பக்குவம் செய்தனர்.

மறுநாள் குளிர்காய்ச்சல். உணர்வு தப்பிய புலம்பல். பயந்து பயந்து அலறிய காட்டுக்கத்தல்.

'பேய் பிடித்துவிட்டதோ... காற்று கறுப்பு அடித்து விட்டதோ' என்ற நினைப்பில் திருநீறு பூசினர். சாமி யாடியை வரவழைத்தனர். மந்திரித்தனர்.

மூன்றாவது நாள். செத்தே போனாள்!

## 6

'**நி**றைமாச கர்ப்பிணியின் சாவு' என்பது சக்கிலியக் குடியை மட்டுமல்ல... சாதி கடந்த மனித நேயத்தில் மொத்த ஊரையே ஒரு குலுக்கு குலுக்கிவிட்டது. "ஐயய்யோ பாதரவே" என்று சகல சனமும் அங்கலாய்த்தனர்.

வேலை ஜோலியையெல்லாம் நினைத்துக் கூடப் பார்க்காமல்... சகல சாதி ஜனமும் சேரிக்குள் வந்து விட்டனர். "ஐயோ கொடுமையே, இப்படியுமா ஒரு சாவு வரணும்" என்று ஆளாளுக்குப் புலம்பினர். கூடிக்கூடி

மனம் புழுங்கினர். அடிவயிறு பிசைய கண்கலங்கித் திகைத்தனர்.

சாவின் குரூரம் சாதியைப் பொய்யாக்கி, மானுடத்தை சத்தியமாக்கி விட்ட அதிசயம்...

சடபுடவென்று காரியம் செய்து புதைக்கவோ—எரிக்கவோ முடியாது. நிறைமாசக் கர்ப்பிணி. வயிற்றில் முழுக் குழந்தை. அப்படியே புதைத்தால் ஊருக்கு ஆகாது. ஊரே நாசக் காடாகிவிடும் என்றொரு ஐதீகம்.

வயிற்றில் கிடக்கும் குழந்தையை எடுத்து தனித் தனியாகத்தான் புதைக்க வேண்டும். பேய்பூத நம்பிக்கை நிறைந்த கிராமம். செத்துப்போன பிரேதத்தின் வயிற்றைக் கீறிக் கிழித்து, குழந்தையை எடுக்கிற தைர்யம் யாருக்கு வரும்?

என்ன செய்ய? எல்லா ஜனமும் கண்ணீரும் கம்பலையுமாய் பதைத்தனர். ஊர் ஜனம் பூராவும் வழி தொகை தெரியாமல் திகைத்துப் புலம்ப... சுற்று பட்டி பத்து ஊருக்கும் ஆட்கள் பறந்தனர், 'அப்படி தைர்யமான ஆள் கிடைப்பானா' என்று.

கடைசியில் ஒருத்தன் அகப்பட்டான். அவன் வந்து சேரச் சாயங்காலமாகி விட்டது. அவனும் மூக்குமுட்ட சாராயம் குடித்து விட்டு... அந்த போதைத் தைர்யத்தில்தான் 'தன்னை மறந்து' அந்த 'அறுப்புக் காரியத்தை' முடித்தான்.

மயானக்கரை வேலைகள் முடிந்து... எல்லா சாதி ஜனமும் வீடு திரும்ப பொழுது இருட்டி விட்டது. யாருக்கும் பசி ஞாபகமில்லை. எதுவும் பேசத் தோன்றவில்லை. கற்றைச் சோகம். துயரமிக்க மன இறுக்கம். 'இப்படியொரு சாவா' என்ற அதிர்விலிருந்து மீள முடியாத வருத்தம். கலக்கம்.

*ஆனால்—*

'இது ஒரு சாவு இல்லை, கொலை' என்பது வெள்ளைய நாயக்கருக்கு மட்டுமே தெரியும். இவர் அடித்த சோளத் தட்டையடியில் பதறிப் போய்த் தான்—அந்த மன அதிர்வில் தான்—இந்தக் கொலை பாதகம் என்ற சேதி, வேறு ஒரு சுடுகுஞ்சுக்குக் கூடத் தெரியாது.

'நீ ஒரு கொலைகாரன்' என்று யாரும் விரல் நீட்டிக் குற்றம் சொல்ல வழியில்லை. விரலை நீட்டவுமில்லை. ஆனால்—

இவருக்குள் ஒரு விரல். கத்தியாக நீண்டு உள்ளுக்குள் உறுத்துகிற விரல். குத்திக் குடைகிற விரல். மிச்ச ஆயுள் பூராவையும் நரகமாக்கி அவஸ்தைப்படுத்துகிற சுயவிரல். ரவ்வும் பகலும் ரணமாக்கி வாட்டி வதைக்கிற விரல்.

*பிறகென்ன?*

*(முதல் அத்தியாயத்தை மீண்டும் படித்தால் புரியும்!)*

***இதயம் பேசுகிறது, 20.11.94***
***வன்முறை எதிர்ப்புச் சிறுகதைப் போட்டியில்***
***முதல் பரிசு ரூ. 5000 பெற்ற கதை.***

◆ ◆ ◆

2

# வேறு வேறு

**உ**ச்சியிலிருந்து மேற்கில் சரிந்து விட்டது பொழுதுக் கால். நிழல்கள் கிழக்கில் நீளநீளமாய் நகர்ந்தன. அப்போது தான் வீடு வந்து சேர்ந்திருந்தாள் பூவனம்.

காலையில் எட்டு மணிக்கு கூலி வேலைக்குப் போனவள். ஊர்ப்பட்ட வெயில் பூராவும் அவள் தலையில்தான். மிளகாய்ச் செடிக்குள் குனிந்து குனிந்து, ஓடி ஓடி களை வெட்டியது, குறுக்கெலும்பு எல்லாம் குடைச்சலெடுக்கிற வலி. உடம்பின் ஒவ்வொரு இணுக்கும் 'உட்காரு உட்காரு' என்று கெஞ்சிக் கூத்தாடியது.

வயிறுமுட்ட ஒரு செம்புத் தண்ணீரை குடித்து விட்டு முந்தியை விரித்து அப்படியே சாயலாம் போலிருந்தது. சாயப் போனவள் மனசுக்குள் பிள்ளைகள். பள்ளிக்கூடம் போயிருக்கிறதுகள். வருகிற நேரம்தான். அம்மா மடியில் விழுகிற ஆசையில் சிட்டாய்ப் பறந்து வரும். பார்த்து விட்டால் போதும்... ரெண்டும் கும்மாளம் போடும். "யம்மா... யம்மா..." என்று ஒரே குதூகலக் கொஞ்சல்தான்.

"காப்பியிருக்காம்மா? போட்டுட்டீயாம்மா?" என்று பறப்பெடுத்துப் போய்க் கேட்பான் முத்துப் பயல்.

"திங்குறதுக்கு ஏதாச்சும் இருக்காம்மா?" என்று அமுங்கிய குரலில் ஆவலாய்க் கேட்பாள் மூத்தவள் ராஜி.

"திங்குறதுக்கா? உங்க ஆத்தாதான் இருக்கேன். பிய்ச்சுத் தின்னுங்க" என்று அலுப்பில் எரிந்து விழுந்தால்... அந்தப் பூச்செண்டுகள் வாடிப் போகும். அரண்டுபோகும். அடிபட்ட அதிர்வில் வேதனையோடு பார்க்கும் பச்சைப் பிள்ளைகள். பாவம்.

இந்தக் கொடுமையை கண்கொண்டு பார்க்கவா பெத்தவள்னு சொல்லிக்கிட்டு இந்தப் பாதகத்தி உசுரோட இருக்கணும்?

அலுப்பையும் ஆயாசத்தையும் மறந்துவிட்டு பாசமும் பதைப்புமாய் புறப்பட்டாள் பூவனம். கட்கத்தில் சின்னப் பெட்டி. கதவைச் சாத்திவிட்டு தெருவில் இறங்கினாள்.

புஞ்சைக்காரியிடம் சம்பளம் வாங்கப் போனாள். அவள் ஏகமாய் முக்கி முனங்கினாள்.

"கால்லே தீயை வைச்சுக்கிட்டுத்தான் திரியுதீக, கூலி கூலின்னு. கூலியாளுக சம்பளம் குடுத்தே வருச வெள்ளாமை கரைஞ்சு போகுது."

சலித்துப் புளித்துப்போய் சம்பளம் தந்தாள் புஞ்சைக் காரி. பதினைந்து ரூபாய். முகத்தில் பதினைந்து கோணல். பிச்சை வாங்குவதைப் போல அவமானமாய் உணர்ந்தாள் பூவனம். மனசு கிடந்து தகித்தது.

'ஒழைச்ச காசை தர்றதுக்கு இம்புட்டு வருத்தமா? தானமாவா தர்றாக? வருச வெள்ளாமை எங்கேயிருந்து வெளையுமாம்! கூலிசனங்க கால் படலேன்னா புஞ்சை வெறும் மண்ணுதானே?'

கொதிபானைச் சோறாய் தளதளத்துத் தகிக்கிற நினைவுகள்.

தகிப்பைக் காட்ட முடியாது. புஞ்சைக்காரர்களை பகைத்துக் கொள்ளவும் முடியாது. வயித்துப் பாட்டுக்கு அவர்களிடம் கால் வைத்தாகணும். சாயங்காலம் கையேந்தியாகணும். வேறு புகல்?

பலசரக்குக் கடையில் ஏகக் கூட்டம். நெரிபுரியாய் சாயங்கால வியாபாரம். 'கச கச' வென்று பெண்கள். 'எனக்குக் குடு ஒனக்குக் குடு' என்று சலசலத்த கூச்சல்.

எல்லாரும் இவளைப் போலத்தான். வேலைக்குப் போய்வந்த ஆட்கள். வீட்டு வேலைகள் முடித்தாக வேண்டிய அவசரம். 'புருஷன் வந்துருவானே' 'புள்ளைக வந்துருமே' என்கிற பதற்றம்.

கடைக்காரருக்கும் பத்து கையா இருக்கிறது? பாவம். அவரும் பறந்து பறந்துதான் சரக்கு கொடுத்தார். வேர்வை துடைக்க நேரமில்லாமல் கணக்குப் பார்த்தார்.

"ம்.... வேற... ம், வேற... ம், வேற..." என்ற ஒரே ஸ்தாயியில் கடைக்காரரின் விறுவிறுப்பு.

பூவனம் கடைக்குள் பார்த்தாள். தட்டில் கத்தரிக்காய். பச்சைப் பசேலென்று கண்ணுக்குக் குளிர்ச்சியாய். பார்க்கிற ஆளுடன் பேசும்.

முத்துப் பயல் கத்தரிக்காய் என்றால்... குடியிருந்து தின்பான். ராஜி வட்டிலில் விழுந்த காய்த்துண்டுகளையும் பொறுக்கி வாயில் போட்டுக் கொள்வான். அதுக்கொரு வாய்ச்சண்டை நடக்கும், அக்கா தம்பிக்குள். பார்க்கப் பார்க்க சிரிப்பு வரும்.

இவளும் சரக்கு வாங்கினாள். அரிசி, கத்திரிக்காய், வெல்லம், தேயிலை, அரைசாமான், நாலுமுறுக்கு, ஐம்பது கிராம் காராச் சேவு...

“எம்புட்டாச்சு கணக்கு?”

“பதினாறு ரூவா அறுவது காசு.”

“அடியாத்தி. அம்புட்டா ஆச்சு?”

“ம்.”

“கத்தரிக்காய் என்ன வெலை?”

“நூறு கிராம் ஒரு ரூவா இருவது பைசா.”

அவளுக்குள் அதிர்வின் பரவல். “அட கிரகசாரமே... கத்தரிக்காய்க்கா இந்தத் ‘தீ’ வெலை?”

அவளுக்கு மிளகாயை கடித்த மாதிரியிருந்தது. கடைக்காரரர் உதட்டில் ஏளனப் புன்னகை.

“என்னம்மா?”

“வெலைவாசியை நெனைச்சா... நெஞ்சுலே ‘பக்’ குன்னு தீப்பிடிக்கு.”

“காலமாச்சும் நின்னு நிதானிச்சு ஓடும். நிதானங் கெட்ட வேகத்துலே ஓடுறது வெலைவாசி ஒண்ணுதான்.”

“சம்பளம் ஆணியடிச்சு அறைஞ்ச மாதிரி... பானைஞ்சுலேயேதானே நிக்குது?”

“நீங்க வாயைத் தொறந்து கேக்கணும்.”

“உள்ள சம்பளத்தை குடுக்கிறதுக்கே ஏழு பேச்சு பேசுதாக. ம்... என்னத்தைக் கேக்க? கூலி சனங்கபாடு பெருந்தும்பம் தான்.”

பதினாலு ரூபாய் தந்தாள். ஒரு ரூபாய் பாலுக்கு வேணும்.

சகஜத்தன்மை சட்டென்று காணாமல் போயிற்று. கடைக்காரர் கண்ணில் ஓர் எரிச்சல். துல்லியமான வெறுப்பு.

"சொச்சம்?..."

"பாக்கியிலே சேத்துக்கங்க."

"பாக்கியிலா? ஏற்கெனவே ரொம்ப இருக்கு."

"சீட்டுவுழுந்தா கடனை குடுத்துருதேன்."

"சீக்கிரமா கடனை குடுக்குறதுக்கு வழியைப் பாரு."

"ம்."

"மேலும் கடன் ஏறாமலாச்சும் பாத்துக்க."

"ஆட்டும்."

பூவனத்துக்கு முள் சொருகின மாதிரி நறுக்கென்றது. கடைக்காரரின் வெறுப்பும், சிடுசிடுப்பும் இவளுக்குள் அவமானமாய் உணர வைத்தது.

"கத்தரிக்காய் வாங்காம இருந்துருந்தா இன்னிக்கு கடன் இல்லாம தப்பிச்சிருக்கலாம்..." என்ற வருத்தமான முணுமுணுப்போடு கடையை விட்டு நகர்ந்தாள்.

முத்து முகம் மனசுக்குள். "அய்ய்... கத்தரிக்காய்" என்று முகமெல்லாம் பூத்துச் சிரிக்கிற முகம். கண்ணில் தெறிக்கிற மின்னல். குதூகலக் கும்மாளம்.

முள் குத்தலைப் பிடுங்கி மென்மையாய் மருந்து போட்டது மகனின் பூஞ்சிரிப்பு.

தெருவை அடைத்துக் கொண்டு தடதடத்த பேயிரைச்சலாய் வருகிற டக்கர் (டிராக்டர்) சத்தம்.

வீடு வந்து சேருவதற்குள் மூன்று டக்கர்களுக்கு விலகி வழிவிட வேண்டியிருந்தது பூவனத்துக்கு.

கதவைச் சாத்திவிட்டு பால் வாங்க ஓடினாள், பால் சொசைட்டிக்கு. சொசைட்டியில் க்யூ வரிசை. பால் ஊற்றவும் வரிசை. வாங்கவும் வரிசை.

இதெல்லாம்... இப்ப வந்த புதுக்கூத்து.

பால் சொசைட்டி வந்த பிறகு... பால்மாடு ஒரு தொழிலாகிவிட்டது. வீடு தப்பாமல் மோர் கடைவார்கள், முன்பு. ஓசி மோர் அட்டியில்லாமல் உரிமையோடு வாங்கிக் கொள்ளலாம் எந்த வீட்டிலும். தாய்ப்பால்காரிக்கு தட்டுப்பாடு என்றால்... பிள்ளைப்பால் வாங்கிக் கொள்ளலாம் ஓசியாக. மனுச மக்களுக்குள் அப்படியோர் பின்னல்.

போச்சு, அந்த வழமுறையெல்லாம் கொள்ளை போச்சு, அந்த அந்நியோன்யம், பந்தமெல்லாம் பறிபோச்சு.

பால்மாட்டுக்காரிக்கே பாலில்லை. பீச்சிய பாலை யெல்லாம் சொசைட்டியில் ஊற்றிவிட்டு, சட்டியில் ஒட்டியிருக்கும் நுரைதான் வீட்டுக் காப்பிக்கு.

அதோ... மஞ்சள் பூதமாய் பால் லாரி வருகிறது, கொள்ளையடிக்க வருகிற மூர்க்க வேகத்தில்.

காத்திருந்து பாலை வாங்கிக் கொண்டு வந்தாள் பூவனம். அவசர அவசரமாய் அடுப்பை மூட்டினாள். பய வந்துருவான். வெல்லம் தேயிலையைப் போட்டு கொதிக்க வைத்தாள். அரிசியை கல்பார்த்து அலசிப் பிசைந்தாள். வேலை தன் போக்கில் நடந்தது... யந்திரமாய்.

மனசு வேறு எங்கோ அலைந்து கொண்டிருந்தது. ஆறுமாசத்துக்கு முந்தித்தான் 'போய்ச்' சேர்ந்த புருஷன்.

அந்த ஆள் இருக்கிறவரைக்கும் பிழைப்பில் இந்த மூச்சு முட்டல் இல்லை. ரெண்டாள் சம்பளம். வயிற்றுப்பாடு சிரமமில்லாமல் கழிந்தது. ‘நல்லது பொல்லது’ செய்ய கையில் சில்லறை இருந்தது.

இப்போது... அன்றாடப் பிழைப்பே திண்டாட்டம். ஒரு மனுஷி வியர்வையில் மூன்று வயிறுகள் நனையணும். தகப்பன் இழப்பை உணரவிடாமல் பிள்ளைகளை வளர்க்கணும். முகவாட்டம் வந்து விடாமல்—ஏங்க விடாமல்— பார்த்துக் கொள்ளணும்.

பூவனம் அழ நினைக்கவில்லை. நினைவு உள்ளுக்குள் பின்னிப் பின்னி எங்கெங்கோ, அலைய, கண்ணில் நீரின் உறுத்தல். கன்னத்தில் சரமாய் இறங்கிச் சரிகிற கண்ணீர்.

ஏனோ தெரியவில்லை. கடைக்காரர் நினைவுப் பின்னலுக்குள் சிக்கினார். ‘பாக்கி ஏறவிடாம பாத்துக்க’ என்று அதட்டலாய் வந்த குரல்.

இனிமே பாக்கி வாங்கப் போனா மானக்கேடா பேசிருவாரோ..! —மனசுக்குள் வந்த பயப் படப்படப்பு. வயிற்றைக் கலக்குகிற கிலி.

இனிமேல் கடன் வங்கக்கூடாது. கடனைக் குடுத்து கணக்கு முடிக்காட்டாலும் மேற்கொண்டு கடன் ஏறாமப் பாத்துக்கணும். அதுதான் மரியாதை.

இன்னிக்கு கத்தரிக்காய் வாங்குனது தப்பு வாங்கியிருக்கக்கூடாது. சின்னவன் ஆசைப்படு வானேன்னு நெனைச்சது தப்பாப் போச்சு...

நெஞ்சுக்குள் சப்பென்று அறைகிற வாழ்வின் அவலம். உடைப்பெடுத்து மீறிக்கொண்டு சீறுகிற அழுகை.

*பச்சைப்பிள்ளையோட சின்ன ஆசையை மதிக்கிறதுக்குக் கூட தாய் மனசுக்கு இம்புட்டுத் தடங்கலா...*

“ஐயோ, பாதரவே” என்று வாய்விட்டுக் கதறினாள். மடேர் மடேரென்று தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

“ஏ... சீமைராசா, ஒழக்கரிசி ஜீவன். நீங்க இல்லாமப் போகப்போய், உங்க புள்ளைக இப்படி அலையணுமா? நாக்கு ருசிக்கு வழியத்துப் போய் அலமந்து திரியணுமா?”

கதறலோடு சேர்ந்து கசிகிற வார்த்தைகள். புலம்பிச் சிதறுகிற சோகச் சொற்கள். அடுப்பு வெக்கை அலை அலையாய் வந்து காலில் மோதுகிறது.

“யம்மாய்... யம்மா...ய்.”

முத்துப் பயல். அவனுக்கு முந்திக்கொண்டு வருகிற அவனது காலடிச் சத்தம். பைக்கட்டை தொப்பென்று போட்ட வேகத்தில் அம்மாவிடம் பாய்ந்து தாவுகிற வேகம்.

காலடிச் சத்தத்திலேயே மகனை உணர்ந்து கொண்ட பூவனம் சுதாரித்துக் கொண்டாள்.

முந்திச் சேலையில் முகத்தையும் அழுகையையும் துடைத்துக் கொண்டாள். மூக்கைச் சீறி, மனசைச் சமனப்படுத்திக் கொண்டாள்.

“யம்மா...ய்.”

“வாடா ராசா, ஏஞ்செல்லம்.”

“வேலை முடிஞ்சு வந்துட்டீயாம்மா?”

“வந்துட்டேங் கண்ணு.”

“காப்பி போட்டாச்சா?”

"ஆச்சு ராசா."

அவன் பிஞ்சுக் காலெல்லாம் விளையாட்டுப் புழுதி. ஓடி வந்த மூச்சிரைப்பு. அவனாகவே ஒரு கிளாஸ் தண்ணீரை முகர்ந்து 'மடக் மடக்' கென்று குடித்தான். வாய்க்கடை வழியாக இரு புறமும் இறங்கும் நீர்க்கோடுகள்.

"சேவு வேணுமா... முறுக்கு வேணுமாடா?"

"ரெண்டும்."

"அக்காளுக்கு?"

"ரெண்டுலேயும் ஆளுக்குப் பாதி."

"கூருக்கார (கூர்மையான) ராசா. எங்க அண்ணன் மாதிரி."

அம்மாவின் மெச்சுதல் பிச்சுப் பூக்களாய் விழ, அந்த மூன்றாம் கிளாஸ் சிறுவன் கூச்சமாய் குறுநகை செய்தான். மேல்ச் சட்டையின் முன் பக்கத்தை மடியாக ஏந்த, அதில் சேவும் முறுக்கும்.

"யம்மா, நீ கையை நீட்டு."

"எதுக்குடா?"

"நீட்டேன்."

"சரி, கையை நீட்டியாச்சு."

தன் பங்கிலிருந்து கொஞ்சம் சேவு அள்ளி அம்மாவின் உள்ளங்கையில் வைத்தான். அவனும் ஆசை ஆசையாக தின்றான். 'நறுக் நறுக்' சத்தத்துக் கிடையில் 'நீயும் தின்னும்மா. நல்லாருக்கும்மா' என்று மழலைக் குளிர்ச்சி காட்டி தலையையாட்டினான்.

அவள் கையில் நடுக்கம். அவளுக்குள் எங்கோ ஓர் உடைவு. உடைந்து நொறுங்கி, நெகிழ்ந்து பாகாய்க் கரைந்த மனசு. குத்தலெடுக்கிற கண்கள். குபுக்கென்று வழிகிற கண்ணீர். பாசத்தின் கற்றையான தாக்குதல்.

நெகிழ்ந்து மிருதுவான குரல். அழுகையில் நனைந்த குரல்.

"எனக்கெதுக்குடா... இதெல்லாம்?"

"சும்மா தின்னும்மா, சேவு நல்லாருக்கு."—அவன் சொல்லில் ததும்புகிற கொஞ்சல்.

சின்னக் கண்ணில் பரிவின் மின்னல்.

அந்தப் பூச்செண்டின் பாசத்தை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அந்தப் பிஞ்சின் வெள்ளை யான கருணை... ஈர மனசு. மனுச ஈரம்.

வெடித்து அழுதுவிட்டாள். அம்மாவின் அழுகை அவனுக்குப் புரியவில்லை. இருந்தாலும் பதறவில்லை. இது சந்தோச அழுகைதான்.

தின்று முடித்து காப்பியைக் குடித்தான். காப்பியைக் குடிக்கிறபோது ஓர் அவசரம். மடக் மடக்கென்று ஆவியோடு முழுங்கிய வேகம். மகனையே பெருமிதமாய் பார்த்துக் கொண்டிருந்த பூவனம், அந்த மெல்லிய பதற்றத்தைக் கவனித்தாள்.

"என்ன... கண்ணு?"

"வெளையாடப் போவணும். அர்ஜெண்ட்."

"எங்கடா?"

"களத்துக்கு."

"போய்ட்டு சீக்கிரமா வந்துரு. சாப்புடணும்."

"ம். என்ன கொழம்பும்மா?"

"கத்தரிக்காய்."

"அய்ய்... சக்கை. கத்தரிக்காயா"—அந்தச் சின்ன முகமே அகலமாகிப் போன மாதிரியிருந்தது. ஒளிச்சிரிப்பு. முகமெல்லாம் மனசின் வெளிச்சம்.

"அப்ப... நா வெளையாடப் போவலை."

முத்துவின் குஷி. அடித்த பல்டி. வாசத்தை மறைத்துக் கொள்ளத் தெரியாத பூவின் வெள்ளைக் குணம்.

பூவனத்துக்கு சிரிப்பாணி பொத்துக்கொண்டு வந்தது.

"ஏலேய்... கொழம்பு ஓடியா போயிரும்?" என்று சொல்லிக்கொண்டே சின்னப் பிள்ளை மாதிரி விழுந்து விழுந்து சிரித்தாள். பூவனமாய்ச் சிரித்து ஒளிர்கிற பூவனம்.

முத்து கூச்சத்தில் வெட்கப்பட்டுப் போய் நெளிய... ராஜி வந்துவிட்டாள். அந்த மகிழ்ச்சி சூழலில் கலந்து கொள்கிற ஆவல் பரபரப்பில் நச்சரித்தாள்.

"யம்மா... என்னம்மா சிரிக்கே? தம்பி என்ன செய்ஞ்சாம்மா?"

ராஜியிடம் வாய்கொடுத்துக் கொண்டே அரிவாள் மனையில் கத்தரிக்காயை நறுக்கத் துவங்கினாள்.

கத்தரிக்காய்ப் பிரியத்தில் முத்துப் பயல் பூவனத்தின் அச்சு. அவளுக்கும் கத்தரிக்காயென்றால் போதும்... வாயில் எச்சில் ஊறும். அதிலும் வறுத்த கத்தரி வத்தல் என்றால்.. தின்பண்டம் போல ஆவலாய்த் தின்பாள்.

முன்பெல்லாம்...

எண்ணெய் ஊற்றி வத்தலை வறுத்து வைத்துக் கொண்டு, ஓசி மோரில் கரைத்த சோளக்கஞ்சியை குடித்தால்... அதன் வாசமே தனி....! கஞ்சியை 'கொண்டா கொண்டா' என்று கேட்கும்.

ஒவ்வொரு மொடாப்பானையிலும் வகை வகையாய் வத்தல். கத்தரி வத்தல், சீனியவரைக்காய் உப்பு போட்டு வேகவைத்து, காயப்போட்டு அள்ளி வைத்த வத்தல்.

வேலைக்குப் போன புஞ்சைகளில், வரப்புப் பயிராக உள்ள காய்கனிகளை உரிமையோடு பொறுக்கிக் கொள்ளலாம். மார்கழி, தை மாசி மாசங்களில் 'சேர்ந்த' காய்கனிகள் வத்தலாகி..., சித்திரை, வைகாசி கோடை பூராத்துக்கும் வாசமான 'கடிக்சிக்கிடை'யாகும்.

காய்கனியை பறிக்காதே என்று எந்தப் புஞ்சைக்காரி மகராசியும் சொல்லமாட்டாள். "தாயீ.... ரெண்டு காயை பறிச்சு மடியிலே போட்டுக்கிட்டுப் போ. புள்ளைக்காகும்" என்பார்கள்.

'உனக்கு நான், எனக்கு நீ வேணும்' என்கிற மாதிரியான பிணைப்பு கிராமத்து வாழ்வில். புஞ்சைக் காரிக்கும் கூலிசனத்துக்கும் இடையிலிருந்த பொருளாதார வித்தியாசங்களை மூடி மறைக்கிற படுதாக்களாய்... சில சில ஈர உறவுகள். தாயாய் பிள்ளையாய் பந்தம். அலையடிச்சு அலைவிலகாத உள்பின்னலான உறவுகள்... பரஸ்பர பாச நெருக்கம்.

அந்த ஈர நாட்களெல்லாம் கடந்து ஓடியே போய் விட்டது. கரண்டு, டக்கர், டீசல் வெக்கையில் எல்லா உறவும் வற்றி உலர்ந்து விரிசலாயிற்று. தாயானாலும் பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறு வேறு என்ற கசப்பான நிஜம். எல்லாமே துட்டு. கூலி பதினைந்து

ரூபாய் என்கிற நாணய பந்தம் மட்டும்தான். வேறு ஒட்டுமில்லை, உறவுமில்லை. அம்மணமான பைசா உறவு.

ஓசி கொடுத்தால் வாங்க மறுக்கிற பூசணிக்காய், சுரைக்காய் கூட இப்போது துட்டாகி விடுகிறது. இந்தக் கூத்தில் கத்தரி வத்தலை நினைத்தாவது பார்க்க முடியுமா? நடக்கிற காரியமா?

பூவனம் மனசுக்குள் பழைய நினைவுகள். வத்தல் வத்தலாய் வாசு நினைவுகள். கசப்பான நிகழ்நாளில் வந்து முட்டியவுடன்.... உள்ளுக்குள் துயரமாய் வந்து உட்கார்கிற ஏக்க உணர்வுகள்.

மறுநாள்.

பூவனத்துக்கு மாரியம்மாள் அத்தை புஞ்சையில் வேலை. மிளகாய் செடிக்கு தூருக்கு தூர் உரஉப்பு வைக்கிற வேலை. நாலைந்து நாட்களாய் அத்தை இவளைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

போக வழியில்லை. ஆள் கிராக்கியான நேரம்.

நேற்று ராத்திரி வந்து அத்தை மன்றாடினாள். கெஞ்சிக் கூத்தாடினாள். நாடியை பிடிக்காதது ஒன்று தான் குறை. பூவனம் சரியென்ற பிறகுதான் அத்தை முகம் முகமாயிற்று.

கூட ரெண்டு பெண்கள். பெட்டியில் உரஉப்பை வைத்துக் கொண்டு ஓடி ஓடிக் குனிந்தாள். ஊர்ப் புரணியும் வேலையும் பொழுதைப் போல நகர்ந்தன.

புஞ்சைக்குள் ரெண்டு வரப்பில் நெடுக கத்தரிச் செடிகள். பொசுபொசுவென்று முரட்டு இலைகள், நாய்க்காது மாதிரி. டிசம்பர் பூ நிறத்தில் ஜில்லென்று சிரிக்கிற கத்தரிக்காய். இலைகளை விலக்கிப் பார்த்தால் பச்சைப் பசேலென்று காய்கள், கோழி முட்டை மாதிரி.

பார்க்கப் பார்க்க லட்சணம். கடித்துத் திங்கலாம் போலிருந்தது.

'வேலை முடிஞ்சு போறப்ப... நாலைஞ்சு காய்கள் பறிச்சிட்டுப் போகணும், முத்துப்பயல் கூத்தாடி கொண்டாடுவான். கடையிலேயும் பாக்கி ஏறாமப் பாத்துக்கிடலாம்...'

உள்ளுக்குள் வலை பின்னுகிற ஆசைகள். பின்னப் பின்ன ஆசை. வெயில் பட்டால் சிலந்தி வலை மின்னுகிற மாதிரி... சின்னவனின் மின்னல் சிரிப்பு...

சாயங்காலம்.

மாரியம்மா அத்தை வீட்டுக்குச் சம்பளம் வாங்கப் போயிருந்தாள் பூவனம். சிரித்துக் கொண்டே பதினைந்து ரூபாயைத் தந்தாள்.

அத்தை உதட்டில் சிரிப்பு சிரிப்பாக இருக்க, பொத்தாம் பொதுவாகச் சொல்கிற மாதிரி அங்கலாய்த்தாள்.

"அஞ்சு பைசா குறையாம சம்பளம் வேணும்ங்காக. அடிச்சு வாங்குற மாதிரி புடுங்கிட்டுப் போறாக. அதுக்கும் மேலே புஞ்சையிலே காய்கனியை கை வைக்காக, என்ன ஞாயம் இது?"

சிரித்துக் கொண்டே செருப்பால் அடிக்க முடியுமா?

பூவனத்துக்குள் ஆழத்தில் வெட்டுகிற வேதனை. நறுக்கிடுகிற அவமான வலி.

சிரிப்பால் மழுப்பப் பார்த்தாள்.

"அதுக்கென்ன அத்தை? கூலியாளுக இல்லாட்டா புஞ்சை வெறும் மண்ணுதானே? வெளைஞ்சதுலே ரெண்டு பறிச்சா கொறைஞ்சா போகும்?"

"சும்மாவா வெளையுது? உரம் போடாம, செல வழிக்காம வெளையுமா? காய்கனியும் இப்ப துட்டுதானே? துட்டை எடுத்தா களவாணித் தனமில்லையா?"

பூவனத்துக்கு செத்துப் போகலாம் போலிருந்தது. தாட்சண்யமில்லாமல் மூஞ்சியில் விழுந்த அடி. உயிர் நரம்புகளையே சுண்டி அதிரவைக்கிற அடி.

பள்ளிக்கூடம் விட்டு வந்து, காபியை குடித்து விட்டு விளையாடப் போன முத்து, போன வேகத்தில் அம்பாய்ப் பாய்ந்து வந்தான். "யம்மா... யம்மா..."

உயிரில்லாமல் 'ம்' கொட்டினாள் பூவனம்.

"கத்தரிக்காய் நெறைய நம்ம குப்பையிலே கெடக்கும்மா. ஏம்மமா, நீ போட்டீயா? எதுக்கும்மா?"

திரும்பிக் கூட பார்க்கவில்லை அம்மா. அடுப்பில் எரியும் தீயையே வெறித்தாள். "அது நம்ம வழமுறைடா."

சம்பந்தமற்ற பதில். அந்தச் சின்ன முகத்தில் இருட்டாய் ஒரு திகைப்பு.

"நல்ல நல்ல காய்க. பாக்கப் பாக்க ஆசையாயிருக்கு. எடுத்துட்டு வரட்டா... ம்மா?"

அம்மா பார்த்தாள். அறுபட்ட பல்லி வாலின் மெல்லிய துடிப்பாய் ஒரு வலி, பார்வையில்.

"குப்பையிலேயும், மயானத்துலேயும் போட்டதை எடுத்துட்டு வரக்கூடாதுப்பா... அது மனுசத் தன்மை யில்லே."

"கத்தரிக்காய் வெயில்லே கெடந்து வீணாய்ப் போகும்மா..."

"நாம ஒண்ணும் சூத்தைக் கத்தரிக்காய் இல்லேடா. நம்ம மாதிரி ஏழை பாழைகளுக்கு சூடு சொரணைதான் சொத்து."

மகன் முகத்தைப் பார்க்கிற சக்தியில்லாமல் அடுப்பைப் பார்த்தாள் பூவனம். அவளுக்குள் 'தீ' வனம்.

தொடர்பற்ற பேச்சின் அர்த்தமும் புரியவில்லை முத்துப் பயலுக்கு. அம்மாவும் புதிராகத் தோன்றினாள். புரியாமையும் திகைப்பும் இருட்டாக அந்தப் பிஞ்சைச் சூழ்ந்து கொண்டது, வாழ்க்கையைப் போல.

*'இந்தியா டுடே' இலக்கிய ஆண்டு மலர், 1994–95*

◆ ◆ ◆

## 3

# புஞ்சை

ஒன்பதாம் வகுப்பு படிக்கிற மல்லிகாவுக்கு புஞ்சை என்றால் உயிர். பள்ளிக்கூடத்தைவிட புஞ்சை மண்தான் ரொம்பப் பிடிக்கும். காட்டு வேலை என்றால் அவளுக்கு றெக்கை முளைத்த மாதிரி.

பள்ளிக்கூடம் என்றால் வேப்பங்காய் தான். காயப்போட்டிருக்கிற ப்ளூ கலர் பாவாடையை எடுத்தால் வெடவெடப்பாக விறைத்துப் போயிருக்கும், தகரத்தகடு போல. அதை உடுத்துவது என்றாலே அவளுக்கு பச்சை வேலி முள்ளை உடம்பில் சுற்றுவது போலத்தான். மனசெல்லாம் கிடந்து ரணப்படும். ச்சீயென்றிருக்கும்.

சனி ஞாயிறு என்றால் அவளுக்குத் தனிக் கொண்டாட்டம் தான். பட்டாம்பூச்சியாய் மனசு பறக்கும். விசிலடிக்கிற மனசின் கும்மாளத்தை மூடி மறைத்துக் கொள்ளவும் தெரியாது.

'அய்ய்... நாளைக்கு லீவு... நாளைக்கு லீவு' என்று புழுதி பறக்க குதியாளம் போடுவாள்.

'அடச்சீ! கழுதை. அதுக்கு இந்தக் குதியா? பொட்டைக் கழுதை இருக்குற இடம் தெரியாம இருக்க வேண்டாம்?'

என்று பார்வதி கண்டிப்பாள். சீறிவிழுவாள். கண்டிப்பில் கண்டிப்பின் உஷ்ணம் இருக்காது. பெருமிதப் பூரிப்புதான் இருக்கும். மகளின் மகிழ்ச்சியில் மனம் கரைந்துபோன தாய்மைப் பொலிவு முகத்தில் தத்தளிக்கும்.

சனிக்கிழமை என்றால்... ஆளுக்கு முந்தி புஞ்சைக்குக் கிளம்பி விடுவாள். 'இருடி.... சித்தே நில்லு. கஞ்சியைக் குடிச்சிட்டுப் போடி' என்று பார்வதி 'கட்டை'யைப் போடுவாள். கட்டையைத் தாண்டிக் கொண்டு செண்டிப்பாள், மல்லிகா.

"நீ வர்ரப்ப கஞ்சியைக் கொண்டா. காட்டுக் கஞ்சிதான் நல்லாயிருக்கும்."

பார்வதி சள்ளைப்படுவாள்.

"மதியத்துலே காட்டுக்கஞ்சியா குடி. இப்ப வா. சாப்புட்டுட்டுப் போயிரு. ஒரு வேலை முடியட்டும்டி."

மல்லிகாவை சாப்பிட நிறுத்துவதே பெரும்பாடு. சிணுங்கி, அழுது, சடைத்துப் புளித்துத்தான் கஞ்சிகுடிப் பாள். சிவந்த சின்னமுகம் எட்டுக் கோணலாகப் போகும். புஞ்சையில் போய் கால்வைத்த பிறகு தான், அவள் அவளாக உணர்வாள்.

புஞ்சை மண் ரொம்ப மிருது. அவள் பாதங்களுடன் கொஞ்சிப் போகும். 'கண்ணூ.... வந்துட்டீயா? ஏஞ்செல்லம்' என்று காலின் பிஞ்சு விரல்களைத் தழுவிக் கொஞ்சும். முத்தமிடும். நீர் பாய்ந்து காய்ந்த வாய்க்காலின் குறுமணல் அவள் பாதங்களை 'கிச்சுக் கிச்சு' காட்டும். கூச்சம் தாளாத அவளின் வெடிச்சிரிப்பில் புஞ்சை மண்ணின் தாய்மனசு கனிந்து குழையும்.

புஞ்சை வேலையில் மல்லிகாவுக்கு அம்புட்டு நாட்டம். முதல்நாள் போட்ட ரெட்டைச்சடை புஜத்தின் முன்பக்கம்

'சத், சத்' தென்று ஆட, ஓடி ஓடிக் களை வெட்டுவாள். நிமிராமல் வெட்டுவாள். புஜத்தில் அடிக்கும் சடையின் சத்தம் சுகமாக இருக்கும். வடிகிற வேர்வை, குனிந்த முகத்தின் நாசி நுனியில் மூக்குத்தி போலத் தொங்கும். அதன் கூச்சமான ஸ்பரிசம் அவளுக்குள் ரொம்பப் பிடிக்கும். வேர்வையில் நனைந்த ரோமங்கள் காதோரங்களில் படிந்து அந்தரங்கம் பேசும். மனசுக்கு மனசான அந்த ரகசியம் அவளுக்குள் ஆயிரமாயிரம் கதைகளாகப் படர்ந்து விரியும்.

எல்லா வேலைகளும் பார்ப்பாள். வெயில், நிலா வெளிச்சம் மாதிரி. ஆம்பளை மாதிரி தண்ணீர் பாய்ச்சுவாள். புழுதியைக் கரைத்துக்கொண்டு வளர்த்த பாம்புக்குட்டிகள் மாதிரி வாய்க்கால் தண்ணீர் ஓடிவரும். வாஞ்சையோடு கரண்டைக் கால்களை உரசும். பூப்போட் பாவாடையின் கீழ்நுனியை எடுத்து இடுப்பில் சொருகிக் கொள்வாள். முழங்கால் வரை வெயில்படும். ரொம்பநாள் பார்க்காத தோழியைப் பார்த்த மாதிரி வெயில் சந்தோஷமாயிருக்கும்.

வாய்மடையைக் கொத்திவிட்டு மம்பட்டியோடு வாய்க்காலுக்குள்ளேயே நிற்பாள். காலடி மண்ணை சன்னச் சன்னமாய் அரித்துக் குறும்பு செய்கிற நீரின் விளையாட்டில் மனம் கரைவாள்.

ஈர மண்ணைக் கொத்தி வாய்மடையை விலக்கியவுடன், காய்ந்த இலைச்சருகுகளை மேய்ந்து கொண்டே படர்கிற கடாக் குட்டிகளைப் போன்ற தண்ணீர்ச் சத்தம் உயிருள்ள ஒரு பாட்டாக அவளுக்குக் கேட்கும். உற்றுக்கேட்பாள்.

பாய்ந்த பாத்திக்குள் மைனாக்கள் றெக்கையடித்துக் குளிக்கும். இவளை ஒரு பயத்தோடும், மறுகணம் அலட்சியமாகவும் அதுகள் பார்க்கும்.

அதுகளின் பார்வைகளையே இவள் பார்ப்பாள். பார்வையின் பாஷை இவளுக்குள் மொழிபெயர்க்கப்படும். மனசு மயங்கிப் பேசுவாள். மெய்மறந்த தருணத்தில் பாத்தி நிரம்பி தளும்பி... வரப்பின் விளிம்பை நனைத்து உடைத்து, நாலாபக்கமும் சிதறியோடும், நீர்.

நாசம். சர்வநாசம். பெரும் குழப்பம். ஓடிஓடி மண்ணைக் கொத்தி புழுதியை அள்ளிப்போட்டு அடைக்கணும். ஒருபக்கம் அடைத்தால் மறுபக்கம் பிடுங்கும். அவள் பாடு நாறிப்போகும். வேர்த்துக் கொட்டும். நெஞ்சுக்கூடு உலரும். கேஸ்ஸு பூஸ்ஸென்று மேல்மூச்சு வாங்கும். அவளுக்கு அதெல்லாம் ஒரு விளையாட்டுத்தான். சந்தோஷ கொந்தளிப்புதான்.

திங்கட்கிழமை நெருங்க நெருங்க... அவளுக்குத் தீயாக இருக்கும்.

மகள் இப்படி மண்ணில் மனசு கரைய வேலை செய்கிற அழகையும் ஆர்வத்தையும் பார்க்கப் பார்க்க பார்வதிக்கு ஒரே பூரிப்பு. பெருமிதம் பொங்கி வழியும்.

'எங்க அய்யா கொணம், மல்லிகாகிட்டே வந்து அச்சுக்குலையாம எறங்கியிருக்கு. அவரும் அப்படித்தான். புஞ்சைவேலை என்றால்... உசுராக் கெடப்பாரு. உஸ்ஸுன்னு உக்கார மனசு சகிக்காது. எந்நேரமும் என்னத்தையாச்சும் நோண்டிக்கிட்டேயிருப்பாரு.'

அந்த நினைவுச் சரட்டைப் பிடித்துப் போக ஆரம்பித்தால்... பார்வதி ரொம்பத் தூரத்துக்குப் போய்விடுவாள், அய்யாவின் அய்யா... தாத்தாவின் அய்யா என்று, பரம்பரையே விவசாயப் பரம்பரை. வேர்வை சிந்தி மண்ணை மகத்துவப்படுத்திய பரம்பரை. பிறவிச் சம்சாரிகள்.

'சம்சாரி வம்ச ரத்தம் ஒடம்புலே ஓடுது. அதான்... புஞ்சை வேலைக்கு இந்தப் பறப்பு பறக்கா.'

மகளிடம் தம் வம்சத்தையே பார்த்த சந்தோஷத்தை வெளிக்காட்ட மாட்டாள். பொய்க் கோபம்தான் காட்டுவாள்.

"காடு காடுன்னு வெயில்லே திரிஞ்சு கருவாய்க் கட்டையா நின்னேன்னா... ஒரு பயலும் வந்து கட்ட மாட்டான். நாலெழுத்து படிச்சு நறுவிசா இருந்தாத் தான், பொண்ணுன்னு எவனும் கேட்டு வருவான். காலம் மாறிப் போச்சுடி. படிச்சிக் கரையேறுகிற வழியைப் பாருடி."

## 2

அறிவியல் நோட்ஸ் புத்தகத்திற்கு அட்டை போட பேப்பர் தேவைப்பட்டது. கையகலப் புத்தகம். சின்ன பேப்பர் இருந்தால்கூடப் போதும். வீடெல்லாம் தேடிப் பார்த்தாள் மல்லிகா. காகிதத்துக்கு எங்கே போவது?

"அம்மா"

"என்னடி?"

"அட்டை போடுறதுக்குப் பேப்பர் வேணும்."

"நா எங்க போறது?"

"வேணும்லே?"

"என்னை வேணும்னா... கிழிச்சுப் போடு."

"அட்டை வேணும்மா..."

"அந்தா... பலகையிலே ஒரு பேப்பர் கெடக்கு. அதை வேணும்னா எடுத்துக்க..."

அது டைப் அடித்த பேப்பர். ஸ்டாம்ப் ஒட்டியிருந்தது. தபால் முத்திரை இருந்தது. மங்கலான மையில் டைப். இங்கிலீஷ். அதில் நிறைய வார்த்தைகள் புரியவில்லை. திஸ், நாட், கேஷ், டோட்டல் போன்ற ஒன்றிரண்டு புரிந்தன. பேனா மையால் எழுதிய நம்பர்களும் இருந்தன.

அசல் 13000-00. வட்டி 2376-65.

'நோட்டீஸ் கண்ட 15 நாட்களுக்குள் முழுக்கடனையும் செலுத்தத் தவறினால்... சங்கம சொத்து, தாவர சொத்து உட்பட சகல உடைமைகளும் ஜப்தி செய்யப்படும்' என்ற தகவல் மட்டும் தமிழில்.

'ஜப்தின்னா.... என்ன?' மல்லிகாவுக்கு ஒன்றும் புரியவில்லை. சப்பாத்தி என்ற சொல் அவளுக்குள் ஒலித்தது. 'சப்—தீ' என்றர்த்தமோ... 'சப்—தீ'ன்னா... துணைத்தீயா? அப்படியோர் தீயா?

கண்டமேனிக்கு கற்பனை ஓட... உட்கார்ந்து அட்டைப் போடத் துவங்கினாள். ஸ்டாம்ப் வெளித்தெரிகிற மாதிரி அட்டை போட்டால் நல்லாயிருக்கும் என்று ஆசைப்பட்டாள்.

அப்படியே போட்டாள்.

# 3

**அ**ன்றைக்கு வியாழன். உறங்கி முழித்த மல்லிகாவுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. 'பள்ளிக் கூடம் போகணுமே.' சள்ளைபிடித்த நினைப்பு வழிந்த கோழையைக்கூட துடைக்காமல் உறக்கச் சடவோடு உட்கார்ந்திருந்தாள், சற்று நேரம்.

அய்யா நாராயணமூர்த்தியின் 'கடபுடா'ச் சத்தம். கோபமான அதட்டலில் திடுக்கிட்டாள். அரண்டு போனாள்.

"என்ன, பள்ளிக்கோடம் போவலியா?"

"போவணும்."

"மணி ஆறரையாகப் போவுது. இன்னும் மூஞ்சியைக்கூட கழுவலியா? வெருசா... ஓடைக்குப் போய்ட்டு வா."

ஓடைக்குப் போய்விட்டு வருகிறபோது— டீக் கடையை சமீபிக்கிற நேரத்தில்...

அய்யா பேரைச் சொல்லி ஆச்சரியமான பேச்சு, டீக்கடையில்.

"ஏய்... இங்க பாருங்கப்பா.... பேப்பர்லே நம்ம நாராயணமூர்த்தி பேரு வந்திருக்கு."

"எங்க? நம்மூரு நாராயணமூர்த்தியா?"

"ஆமா... ங்கே."

அதிசயத்தைக் கண்ட பரபரப்பு. ஆவல் பரவசம் எல்லாரிடமும். ஆள் ஆளுக்கு பத்திரிகைக்குள் தலையை நுழைத்தனர்.

"ஆமப்... போ... நெசந்தா."

என்ற மகிழ்ச்சியான முகவெளிச்சமாக நிமிர்ந்த அந்த ஆள்.

"சொஸைட்டி விளம்பரம் குடுத்துருக்காக. ஜப்தியாகப் போற கடன்காரங்க பட்டியல்லே நாராயணமூர்த்தி பேருதா மொதப் பேரு."

"மழை தண்ணியில்லே. வெள்ளாமை வெளைச்சல் இல்லே. இந்தக் கோடையிலே எதை வெச்சு கடன் கட்ட?"

“சம்சாரி வெளைய வைக்குற பொருளுக்கு வெலைதரணும்னு நெனைச்சுப் பாக்காத சர்க்காரு... வசூல் பண்றதுக்கு என்ன யோக்யதையிலே வருது?”

“கடன் தள்ளுபடியானாலும் ஆயிரும்னு ஒரு நப்பாசையிலே நாளும் பொழுதும் போயிருச்சு.”

“கடன் தள்ளுபடியா? இனிமேயா? கனாவுலே கூட நெனைச்சுப் பாக்க முடியுமா?”

“டங்கல் திட்டம்னா... சும்மாவா? சம்சாரிகளோட டங்குவாரை அறுத்துப் போடுற திட்டந்தானே?'

“மண்ணை நம்பிப் பாடுபட்டவன்.... மண்ணாப் போக வேண்டியதுதான்.”

“நம்மளை கொதிக்க வைச்ச பாவிக மட்டும் நல்லாயிருந்துவாகளா?”

டீக்கடையில் அனுமார் வாலாக நீள்கிற பேச்சு. சற்றுத் தேங்கி நின்ற மல்லிகாவுக்கு எதுவோ புரிகிற மாதிரியுமி ருந்தது; புரியாத மாதிரியுமிருந்தது. இனம்புரியாத உள்பயம். விபரீதத்தை எதிர் நோக்குகிற படபடப்பு. திகில்.

பத்திரிகையில் அய்யா பெயர். அதைப் பார்க்கணும் என்கிற ஆசை. எப்படிப் போக? ஆம்பளைகள் கூடியிருக்கிற இடத்துக்கு இவள் எப்படிப் போக முடியும்? ஆனால், பார்க்க ஆசை.

முதலில் அம்மாவிடம் போய்ச் சொல்லணும்.

சொன்னவுடன் அம்மா முகம் அப்படியே இறுகிப் போயிற்று. உணர்ச்சி பூராவும் வற்றிப்போன மாதிரி யோர் சவக்களை. திகிலடித்த மாதிரி அப்படியே ஸ்தம்பித்துப் போன முகத்தில், பார்வை மட்டும் பறவையாட...

சில கணங்கள்.

அவ்வளவுதான். பார்வதி உடைந்து விட்டாள். தலையில் மடேர் மடேரென்று அடித்துக் கொண்டு கோவென்று கதறியழுதாள்.

"ஐயய்யோ... பாதரவே, இந்தக் குடும்பத்துக்கா... இந்தக் கேவலம்? ஒடம்பைக் கடம்பா கடைஞ்சு உழைச்சதுக்கா இந்தக் கதி வரணும்? என்னத்தை வைச்சு... இப்பக் கடன் கட்ட? இந்தக் கேவலத்தைத் தின்னுட்டு உசுர் வைச்சும் இருக்கணுமா? மானம் கெட்டுப் பொழைக்கணுமா?"

நனைந்து நைந்த சித்திரமாக அம்மா. மல்லிகாவுக்கு கால், கையெல்லாம் நடுங்கிக்கொண்டு வந்தது. மனம் முழுக்க முட்டிக்கொண்டு வருகிற அழுகை. கண்ணில் நீரின் உறுத்தல்.

வீடு ரணகளமாயிற்று. வந்த அய்யாவுடன் அம்மா போட்ட நாறச் சண்டை. அய்யா முகமும் ரத்தம் செத்துப்போய் கருத்துக் கிடந்தது. அப்பிக் கிடந்த வருத்தம். அம்மா... கொதிப்பும் தளதளப்புமாய்க் கத்திக் கொண்டிருந்தாள்.

"வாங்குன கடன் மூவாயிரந்தான். அப்பப்ப... ஐநூறு ஆயிரம்னு மூவாயிரத்துக்கு மேலே கட்டி யாச்சு. வட்டி, தவணை கடந்த வட்டின்னு இப்ப ஏறியிருக்குற கடன். என்ன செய்ய? சர்க்காரு இப்படி இருக்கு. சம்சாரித்தன மும் இப்படிக் கிடக்கு."

அய்யா சுவரிடம் முணுமுணுத்துக் கொண்டிருந்தார். வெறித்த பார்வை. விரக்தியில் நொந்து கிடந்த மனசின் கசப்புக் கசிவு.

மல்லிகாவுக்கு ஒன்றும் ஓடவில்லை. அரவமில்லாமல் பள்ளிக்கூடம் போனாள். அவள் அவளாக இருக்க

முடியவில்லை. இனம் தெரியாத பயப்படபடப்பு. திகிலும் கிலியுமாக மனசைத் தின்று தீர்த்தன.

# 4

திங்கட்கிழமை. பள்ளிக்கூடம் முடிய மணி ஐந்தரையாயிற்று. இவளுக்கு வீட்டுக்குப் போகவே மனசில்லை. கால்கள் பின்னித் தயங்கின. உள்ளுக்குள் நடுக்கம். கண்ணோரங்களில் நீர்த்துளி.

பகலில் சர்புர்ரென்று வந்த கார்கள். ஜீப். பள்ளி வழியாக நடந்து போன சூட்டு போட்ட ஆபிஸர்கள், அமீனா. பேரேடுகளோடு உள்ளூர்ச் செக்ரட்டரி. பின்னால் துப்பாக்கிகளோடு நாலு போலீஸ்.

பள்ளிக்கூடத்திற்குள்ளும் கசகசப்பு. பீதியும் திகிலுமான கிசுகிசுப்பு. வாத்திமார்கள் கூட பாடம் நடத்த மனசில்லா மல், தெருவைத் தெருவைப் பார்த்தனர். அவர்கள் முகங்களிலும் இழவுக் களை.

மழையில் நனைந்த கோழிக்குஞ்சாக மனசு நடுங்க... பதறிப்பதறி வீடு போனாள்.

வீடு கிழிபட்டுக் கிடந்தது. திண்ணையில் குத்துக் கால் வைத்து உட்கார்ந்திருந்த அய்யா. அழப் போவதைப் போன்ற முகம். கண்ணெல்லாம் ரத்தப் பரவல். உள்ளே அம்மா அழுது புலம்புகிற சத்தம்.

மல்லிகாவுக்குள் பூரான் ஊர்கிற உணர்வு. கால்கள் நிலையற்று உதறுகிற பதைப்புணர்வு.

வீட்டு முற்றத்தில், தான்ய மணிச் சிதறல். பண்ட பாத்திரங்களை போட்டெடுத்த அடையாளம். என்னமோ

தெரியவில்லை. அவளுக்கும் அழுகை அழுகையாக வந்தது.

வீட்டுக்குள் பைக்கட்டைப் போட்டாள். வழக்கம் போல தண்ணீர் குடிக்கப் போனாள். தண்ணீர்ச் சாலில் சுரீரிடுகிற வெறுமை.

செப்புப்பானையை காணோம். வீட்டுக்குள் கிடந்த நாலு தான்ய மூட்டைகளைக் காணோம். கிடந்த அடையாளம் மட்டும். ரேடியோவைக் காணோம். சைக்கிளைக் காணோம்.

வீடு முழுக்க நிறைய காணோம்கள்.

கேள்வியும் திகிலுமாக அம்மாவைப் பார்த்தாள். அரண்டு போயிருந்த இவளைப் பார்த்ததும், கோவென்று வெடித்துக் கதறி, இவளை ஆவி சேர்த்துக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"நம்ம குடும்பத்துலே இடிவந்து விழுந்துருச்சே. ஊர் சிரிக்கும் நிலையாச்சே... உஸ்ஸுன்னு உக்காராம ஓடிஓடி ஒழைச்சதுக்கு இதுதான் பலனா? ஐயய்யோ... நாம உசுர் வைச்சு இருக்கணுமா?"

அம்மாவின் கதறலுக்குள் சிக்கிப்போய்... மன செல்லாம் கருகிக் போக... மல்லிகாவும் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்து விட்டாள்.

**அப்புறம்—**

சனி, ஞாயிறு வந்தது. மல்லிகாவுக்கு என்ன இழவோ... புஞ்சைக்குப் போகத் தோன்றவேயில்லை.

புஞ்சை வேப்பங்காயாயிற்று.

*செம்மலர், அக்டோபர் 1994*

◆ ◆ ◆

# 4

# இந்தியா

*சீனித்தாய் இப்பத்தான் காட்டிலிருந்து வருகிறாள். இடுப்பொடிகிற வேலை. உள்ளங்கை யெல்லாம் கொப்புளம் கொப்புளமாய்ப் புண். உப்பையள்ளிப் போட்ட மாதிரி... காந்தல்.*

*முக்கால் குறுக்கம் புஞ்செய். வாலோடியான தோட்டம். நெஞ்சுயரத்துக்கு வளர்ந்து ஓய்ந்துபோன பருத்தி. வேனாக்கொதிக்கிற கோடை வெயிலில் ஓடிஓடி பருத்திமாரைப் பிடுங்கினாள். உள்ளங்கையில் வெள்ளைத் துணியை வைத்திருந்தாள். அது எந்த மூலைக்கு? மாரைப் பிடுங்கப் பிடுங்க ரத்தம் கன்றிப் போன உள்ளங்கை. வலி உயிர் போகிறது.*

*வீடு போனவுடன் முந்தியை விரித்துப் படுக்கணும் போலிருந்தது. குறுக்கெல்லாம் பூரான் கடித்த மாதிரி கடுகடுக்கிற வேதனை. மூட்டுக்கு மூட்டு 'நெறு, நெறு' ங்கிற வலி.*

*வீட்டை நெருங்கினாள். இவள் காலடித் தடத்திலேயே ஆள் வாசனையை உணர்ந்து ஆவலாய் 'தடாபுடா' வென்று எழுகிற எருமை. தாழ்வாரத்தில் அதன் காலடி பூராவும் நசநசப்பு. சாணமும், கூளமும், மூத்திரமும், அது படுத்திருந்த அடையாளமுமாய்...*

இவளைப் பார்த்ததும் நம்பிக்கையில் மின்னுகிற அதன் கண்கள். மூத்திரத்தில் நனைந்த அதன் வாலைச் சுழற்றிக் கொண்டே 'ம்மேய்ங்ங்'கிறது. 'ம்மா... எனக்கு தண்ணீ...' என்று கத்தலாய் அதன் நீண்ட கனைப்பு.

காலையில் போகும்போது இவள் வைத்த தண்ணீர். அதற்குப் பிறகு சொட்டுத் தண்ணீர் யாரும் அதன் கண்ணில் காட்டவில்லை. தவித்த வாய்க்குத் தண்ணீரில்லாமல் தகை எடுத்துக் கிடக்கிறது. பாவம்... வாயில்லாச் சீவன்.

உஸ்ஸென்று உட்காரப் பொழுதில்லை. கொடுப்பினை யில்லை. பானைகளை உருட்டினாள். ம்ஹும்...

சீனித்தாய்க்குக் கசந்து வந்தது. மொத்த வாழ்க்கையின் அத்தனை பாரத்தையும் அந்தக் கணத்தில் உணர்ந்தாள். 'இதுவும் ஒரு பொழைப்பா? இப்படியும் சீரழியணுமா? என்னத்தைக் கட்டியாளப் போறோம்? ஓய்ஞ்சு உட்கார நேரமில்லாமல் மாய்ஞ்சு மாய்ஞ்சு சாகுறதைவிட... ஒரேயடியா செத்துத் தொலையலாம்' என்று ஓடுகிற மனசு.

இனி நிற்க நேரமில்லை. காலில் சக்கரம் கட்டிக் கொண்டு ஓடித் தவிக்கணும். கடைக்கு ஓடணும். சாமான்கள் வாங்கி வந்து அடுப்பை மூட்டணும். பள்ளியிலிருந்து வரும் பிள்ளைகளைக் கவனிக்கணும். காட்டிலிருந்து புருஷன் வருவதற்குள் காப்பி போட்டு வைத்திருக்கணும்.

இதையெல்லாவற்றையும் விடப் பெருங்கொடுமை, தண்ணீர் சுமப்பது.

நினைக்க நினைக்க மலைப்பு பிரம்மாண்டமாக இருந்தது. நினைத்துக் கொண்டு நின்று கொண்டிருக்க

முடியவில்லை. 'ம்மேய்ங்'கிற கதறலில் துரத்துகிற எருமை மாடு.

குடம், பானை, வாளிக்கயிறு இவற்றோடு தெருவில் இறங்கினாள். ஆவணி மாசத்து வறண்ட காற்று. சுள்ளென்று கன்னக் கதுப்பில் அறைகிற வெயில்.

மனசின் சலிப்பும், கசப்பும் நடக்கிற நடையில் தெரிகிறது. 'தக், தக்' கென்று அதிர்கிறது தரை.

நடுத்தெருவில் நான்கு உயரக் கால்களில் வட்டமாய் உட்கார்ந்திருக்கிற நீர்த் தொட்டி. அதன் உடம்பு முழுக்க குடும்பக் கட்டுப்பாடு விளம்பரம். கிணற்றிலிருந்து தரைக்குள் நீர்த்தொட்டிக்கு வருகிற குழாய் உடைந்து மூன்று மாசமாயிற்று. போட்ட மனுக்களுக்கு உயிர் இல்லை. கலெக்டரிடம் போனால்... ஒன்றிய ஆணையாளரைக் காட்டினார்கள். அவரிடம் போனால்... குடிநீர் வாரிய இன்ஜினீயர். அலைந்து அலைந்து ஊர்ஜனத்துக்குக் கால் மூளை அற்றுப் போனதுதான் மிச்சம். ஆடிமாதக் கோடையில் கிணறும் நீர்வற்றி வெறுங் கிணறாயிற்று.

ஓடை போலவும், வண்டிப் பாதையாகவும் நீள்கிற பாதை. இரு மருங்கிலும் வேலி மரக்கிளைகள் அடர்த்தியாய். நாசியைத் தாக்கித் திணறடிக்கிற மனித மல நெடி. வாலையாட்டிக் கொண்டு சோம்பலாக நகர்கிற பன்றி.

ஓடைக்கரையேறுகிற இடத்தில் அடி பம்பு. அதன் வட்ட பிளாட்பாரம் சிதைந்துபோய்... அடிபம்பும் துருவேறிப் போய்... நாள்பட்ட ரிப்பேர். ஊர் பூராவுக்கும் தண்ணீர் கொடுத்த அந்த அடிப்பம்பையும் ரிப்பேர் பண்ண நாதியில்லை. மனுக்களுக்குப் பதிலுமில்லை. மனுவின் தமிழ், அதிகாரிகளுக்கும் புரியவில்லை.

இளவட்டங்கள் மனுவை எழுதிக் கொண்டு வீடு வீடாகக் கையெழுத்து வாங்குவார்கள். இவளிடமும் கேட்டார்கள். 'சீனித்தாய்' என்று இங்கிலீஷில் தடுமாற்றமில்லாமல் கையெழுத்துப் போடுவாள். பையன்கள் அசந்து போவார்கள். பிரமிப்போடு இவளைப் பார்ப்பார்கள். போகும்போது ஒரு பையன் சொல்வான்; "அக்கா... ஒம்பதாப்பு வரைக்கும் படிச்சிருக்காக."

சீனித்தாய் அடிபம்பைக் கடந்தாள். உழுதுகிடந்த புஞ்செய்களுக்குள் நீள்கிற ஒற்றையடிப் பாதையில் நடந்தாள். எதிரில் பாரத்தோடு வருகிற ஒரு பெண். இடது இடுப்பில் நீர்க்குடம். தலையில் ததும்பும் பானை. வலது கையில் வாளியும் கயிறும். நகர்ந்து வரும் இந்தியா போலத் தோன்றினாள்.

"என்ன சீனித்தாயி, தண்ணீக்கா?"

"ஆமக்கா. கெணத்துலே ஆள் இருக்காகளா?"

"நெறைய இருக்காக."

"தண்ணி கெடக்கா?"

"கமலைக் குழியிலே மட்டுந்தான் கொஞ்சமா கெடக்கு. வறட்டிமுப்புதான்."

சீனித்தாய்க்குள் பதைப்பு. நடையை எட்டிப் போட்டாள். உள்ளுக்குள் எருமையின் கதறல். ரொம்ப நேரமாகுமோ...

நாலைந்து நடை தண்ணீர் சுமக்க வேண்டும். காத்திருந்து, காத்திருந்து எப்ப எடுத்து முடிக்க? எப்ப சோறாக்க? எப்ப வாழ்றது..?

காட்டுக் கிணறு. சுவரில்லாத மொட்டைக் கிணறு. சுற்றிலும் செடிகளும் கொடிகளும், புதராய்.

ஏழெட்டுப் பேர் காத்திருந்தனர். ஊர்பொரணி நடந்து கொண்டிருந்தது. ஒருத்தி பானை மினுக்கினாள். ஒருத்தி கமலைக்கல்லில் காலை வைத்துக்கொண்டு வாளியைப் போட்டு இறைக்கிறாள்.

சீனித்தாயுக்குள் ஆயாசம். கிணற்றை எட்டிப் பார்த்தாள். வெகு ஆழம். ஒரு மூலையில் கமலைக் குழி. அதற்குள் கலங்கலாய் நீர். பழுத்து உதிர்ந்த மஞ்சணத்தி இலைகளும், சருகுகளும், தவளையுமாய்.

போனவருஷம், ஊரில் காலரா. மூன்று பேர் மண்டையைப் போட, மொத்த ஊரே கதி கலங்கிப் போய், மறியல் பண்ண... கலெக்டர் வந்திருந்தார்.

"காட்டுக் கெணத்துத் தண்ணிதான் காரணம். சுகாதாரமற்ற குடி தண்ணீர். இதை யாரும் குடிக்காதீக. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரைத்தான் குடிக்கணும்." வண்டி வண்டியாக உபதேசம்.

யாருக்கு வேணும்? சுத்தமான குடிதண்ணீர் கொடுத்தால், குடிக்கக் கசக்கவா செய்கிறது? யார் தருவது? ரிப்பேரான குழாயைச் சரிபண்ண நாதியில்ல. அடிபம்பை செம்மை செய்ய அதிகாரிகள் இல்லை. இந்த லட்சணத்தில்... உபதேசம்! நல்ல கூத்து.

இந்தக் காட்டுக் கிணற்றுத் தண்ணீருக்கே வறட்டிழுப்பு. காத்திருப்பு. காலும் கழுத்தும் வலிக்கச் சுமை...

நேரம் போகப் போக... நிறம் மாறுகிற வெயில். அவளுக்குள் பதைப்பு. பிள்ளைகள் வந்திருக்குமோ... அவர் வந்திருப்பாரோ...

தலையில் நீர்ப்பானை. இடுப்பில் ஒரு குடம். நடக்கவே சிரமமாக இருந்தது. கழுத்து வலிக்கிறது. முகமெல்லாம் முத்து முத்தாக வேர்வைத் துளிகள்...

வீடு திறந்து கிடந்தது. 'அவரு வந்துட்டாரோ..'

பானைத் தண்ணீரை எருமைக்கு ஊற்றினாள். இடுப்பு நீரை வீட்டுக்குள் வைத்தாள். அவர்தான். நடையில், அவர் கொண்டு வந்து போட்டிருந்த புல்லுக்கட்டு.

வெளியே புறப்படுகிற தோரணையில், அந்த ஆள்.

"சித்தே இருங்க... இந்தா காப்பி போட்டுருதேன்."

"எனக்கு வேண்டாம்."

"ஏன்?"

"இன்னைக்கு வேண்டாம்."

அவன் சொல்லின் பூடகம், எதையோ மறைத்து வைத்துப் பேசுகிற தொனி. பத்து வருஷ தாம்பத்யத்தில் இவளுக்குள் பிடிபடுகிற அவனது மனநிலை.

"சம்பளம் வாங்கியாச்சா?"

"ம்."

"கொண்டாங்க."

"எனக்குத் தேவைப்படுது."

"சாராயம் குடிக்கவா?"

"ம்...."

"தண்ணி கெடைக்கலே. சொமக்க முடியலே. நாங் கெடந்து சீரழிஞ்சு சாகுதேன். கூடமாட ரெண்டு நடை சொமக்கலாம்லே? சாராயந்தான் முக்கியமாப் போச்சா?"

"என்னையா பானை சொமக்கச் சொல்றே?"

"ஏன்... பானை சொமந்தா... ஆம்பளைக் கிரீடம் எறங்கிருமோ?"

"எறங்காது. ஆனா... இப்ப எனக்கு வேற அர்ஜெண்ட்."

அவன் முகத்தில் துள்ளுகிற உற்சாகம். எந்தக் கோபத்திற்கும் புண்படாத உல்லாச மனோபாவம்.

*"காட்லேயும் பாடு, வீட்லேயும் பாடுன்னு பொம்பளை நா சங்கடப்படுதேன். குடிதண்ணிக்குக் கதியத்துப் போய், காடோ கரையோன்னு அலைஞ்சு சாகுதேன். ஒங்க தண்ணி மட்டும் ஒரு தட்டுப்பாடு இல்லாம ரெடியா கெடைக்குதோ? அதுக்கு ஒரு கட்டுப்பாடே இல்லியாக்கும்?"*

*கோபமற்ற கண்டனமாய் அவளது கேள்வி. வார்த்தை உறைக்குள் சொருகப்பட்ட கத்தியாக கற்றைச் சோகம்.*

*தண்ணியடிக்கிற குஷியான மிதப்பில் முற்றத்துக்குப் போனவன், இவளைப் பார்த்துக் கிண்டலாகக் கண்ணடித்தான்.*

*"தருமன் பீமன்ங்க அஞ்சு பேருதான். அதுலேயும் அடிமைக. துரியோதனன் கூட்டம் நூறு பேரு... ஆனா, ராஜ சபையிலே—அந்த நெலையிலேதா நம்ம நாடு, இப்ப. குடிதண்ணிக்கு வழியில்லே நம்ம ஊர்லே. ஆனா, கள்ளச்சாராயத்துக்கு பஞ்சமேயில்லே. காசிருந்தா, விழுந்து நீச்சலே அடிக்கலாம். தெரியுமா?"*

*நக்கலாகச் சிரிக்கிற அவன், ஏதோ ஒரு பெரிய ஜோக்கைச் சொல்லிவிட்ட சுயதிருப்தியில் சிரிக்கிறான்.*

*யாரைப் பார்த்து இந்தச் சிரிப்பு? தன்னைப் பார்த்தா? நாட்டைப் பார்த்தா? எல்லாப் பொறுப்புகளையும் போதையில் நழுவ விடுகிற அவனையே பார்த்துத்தானா?*

*அவன் முதுகையே வெறித்தாள். சீனித்தாய்க்கு மனசெல்லாம் கசந்து வந்தது.*

***குமுதம், தீபாவளி மலர் 27.10.1994***

◆ ◆ ◆

5

# கோடைமழை

இப்படியாகும் என்று கனாகூடக் கண்டதில்லை, பரமசிவம். உள்ளுக்குள் இடிவிழுந்த பச்சைமரமாக திகைப்பில் அரண்டு போனான். 'மனுசன் புத்தி இம்புட்டுத் தாழ்ந்து போகுமா? இன்றைக்கு நடந்தது நிஜம்தானா?' இன்னும் அவனால் நம்ப முடியவில்லை. ஒரு மாயமான சந்தேகம் கூட அவனுள் மின்னி மறைந்தது.

அடக் கொடுமையே... இந்த வெட்கக்கேடான கேவலக்கூத்தை எப்படிப் போய் பெண்டாட்டியிடம் சொல்றது? கரிபூசிக் கொண்ட மூஞ்சியோடு எப்படிப் போய் நிக்கிறது? எம்புட்டு ஏளனமாய்ப் பார்ப்பாள்?

ரொம்ப முட்டிப்பாக இருந்தது, பரமசிவத்துக்கு.

திருமங்கலம் தேவர்சிலைக்கு வடக்கே வரிசையாகக் கடைகள். கடைகளின் முன்பு பஸ்ஸுக்குக் காத்திருக்கிற ஜனக்கூட்டம். கூட்டத்தில் ஒட்டாமல் அந்நியமாய்... இவன். வந்துபோகாத புது இடம். அந்நியமான சூழல், 'வெறுக், வெறுக்' கென முழித்துக் கொண்டிருந்தான், கோலத்தில் ஒட்டாத ஒற்றைப் புள்ளியாக.

மனுசமக்கள் முகங்களை ஏறெடுத்துப் பார்க்கவே மனம் சகிக்கவில்லை. முகம் கொடுத்து யாரிடமும் பேச மனசில்லை. மனம் முழுக்க பரவிக் கிடந்த வெறுப்பு,

வேப்பங் கசாயம் குடித்தவன்போல, மனுச வர்க்கத்தையே காறித் துப்பணும் போலிருந்தது.

கால், கை, முகறை லட்சணத்தோடு நிமிர்ந்து நடக்குறவனெல்லாம் மனுசனா? மனுசக் கொணம் அத்துப்போன நெழல்களையெல்லாம், மனுஷங்க என்று எப்படி நினைக்க? ஈரமத்த ஜெம்மங்க. ஒலர்ந்துபோன பிரேதங்க.

அவனுள் தாறுமாறான நினைவோட்டம். கொதிக்கிற மனசுக்குள் தளதளக்கிற சோற்றுப் பருக்கைகளாக... நினைவுகள். நினைவின் வாலைப் பிடித்துக் கொண்டு இழுபடும் பரமசிவம்.

மணி ஏழரையாகி விட்டது. அவ்வளவாகக் குளிரில்லை. ஆடிக்காற்று இப்பவே லேசுபாசாகத் தலைகாட்டி அசைத்துப் பார்க்கிறது. ரோடு முழுக்க கடை வரிசையின் நிழல். பஸ் ஸ்டாண்டிலிருந்து வெளியேறுகிற வெள்ளை பஸ்கள், கலர் பஸ்கள். எதிர் வரிசையில் கடைகள். ரிக்ஷாக்களில் இழுத்து மூடித் தூங்குகிற மனிதர்கள். ஆளுயரச் சுவரில் வர்ணத்தில் பாரதி படம். பக்கத்தில் ஜனநாயக வாலிபர் சங்க மாநாட்டு விளம்பரம். அகல அகலமான வர்ண எழுத்துக்கள்.

கண்ணெல்லாம் பீழை அப்பியிருக்க பரிதாபக் கோலத்தில் ஒரு பிச்சைக்காரக் கிழவர், இவனைச் சுற்றியுள்ள ஜன அடர்த்திக்குள் தடுமாறி வந்தார். செரங்கு பற்றிய உடம்பு. கந்தலாகிப் போன எலும்புக் கோர்வை. மரக் குச்சியின் பலத்தில் ஊர்ந்து வருகிற அவர், ஒவ்வொரு ஆளிடமும் கையேந்துகிறார். “அய்யா... அய்யா... நாதியத்த சீவன்... ஏதாச்சும் குடுங்கய்யா.. தர்மம் பண்ணுங்கய்யா.”

மனசைப் பிசைய வைக்கிற நைந்த குரல். அந்தக் குரலின் அவலம், யாரையும் போய்த் ‘தொட’வில்லை.

வெள்ளையும் சொள்ளையுமான ஆட்கள், அருவருப்போடு ஒதுங்கின்றனர். வெறுப்பின் வார்த்தைச் சீறல்கள்.

"ச்சே! இந்தத் தொல்லையே பெரிய இழவாப் போச்சு."

"கிழடெல்லாம் 'போய்ச்' சேர வேண்டியது தானே? பூமியிலேயிருந்து ராஜ்யம் ஆளப்போகுதாக்கும்?"

உலர்ந்த மனசுகளின் சுவாசமாய்... முணுமுணுப்புகள். ஈரமற்றுப்போன இருதயங்களைச் சுமந்து அலைகிற பிரேதங்களின் துர்நாற்றம்.

ஒரு வாலிபன்—ஒரு கணவன்—ஒரு தகப்பன்— ஒரு மாமன், ஒரு தாத்தா. எல்லாமாகவும் இருந்திருப்பார் இந்தக் கிழடு. எல்லாராலும் கைவிடப்பட்டவர். ஈரமற்றுப் போன மனித உறவுகளின் அடையாளமாய்... இந்த நாதியத்த சீவன்.

பரமசிவத்துக்குப் பரிதாபமாக இருந்தது. தனது தாத்தாவே 'இப்படி' திரிவதாகப் பிரமை. இவன் பக்கத்தில் அவர் வந்தவுடன், பையைத் துழாவினான். ஒரு ரூபாய் நாணயத்தை அவரது உள்ளங்கை தொட்டு வைத்தான்.

சுற்றியிருந்த பிரேதங்கள்... இவனை ஏளனமாகப் பார்த்தன.

இவனுக்கு யாரையுமே பார்க்கப் பிடிக்கவில்லை. மனசு கிடந்து எரிந்தது. வடக்கால் அண்ணாந்து பார்த்தான், மதுரையிலிருந்து பஸ் வருகிறதா என்று.

வந்தது. கை நீட்டினான். பஸ்ஸில் உட்கார இடம் கிடைத்தது. நல்லவேளை என்று மனசு ஆசுவாசப்பட்டது. கண்டக்டர் பக்கத்தில் வந்தார். "எங்க போவணும்?"

"ராசபாளையம்."

ராசபாளையம் போய்ச்சேர மணி பத்தாகிவிடும். சரியாக பத்து பத்துக்கு கோவில்பட்டி பஸ் புறப்படும். அதைப் பிடித்து விட்டால்... கலிங்கப்பட்டியில் இறங்கி... பொடி நடையாக நடந்தால், ரெண்டு மைலில் ஊர்.

சாப்பிட நேரமிருக்குமா? வெறும் வயிற்றோடு நடந்தால், ஆளைச் சாய்த்து விடும் பசி கிறுகிறுப்பு. ஏறு வெயில் வேறு, ஆளை வறுத்தெடுத்துவிடும். அதை நினைத்தால்... இப்போதே உள்ளுக்குள் தகிக்கிற வெயில்.

"பாரு... 'போன காரியம் பழம்'னு வந்து நிப்பேன், தெரியுமா? எல்லாரையும் போல நெனைச்சிராதே... எங்க சுப்ரமணியத்தை" என்று கித்தாப்பாக சவால் விட்டு விட்டு நம்பிக்கையோடு புறப்பட்டவன்.

கித்தாப்பெல்லாம் கிழிந்து... நார்நாராகி... ச்சே! சுப்ரமணியம் இப்படி மாறிட்டானே... என்னைக் கேவலப்படுத்திட்டானே... இப்படியும் விசுவாசம், மனித உறவுகள்... இல்லாமல்போயிருக்குமா? இதுகளுக்கெல்லாம் அர்த்தமில்லையா? அபத்த நினைப்புகள் தானா? ச்சே!

பஸ்ஸின் ஜன்னலில் கறுப்புக் கண்ணாடி. அதன் வழியே பார்த்தான். வட்டமடித்து ஓடுகிற பருத்திக் காடுகள். கல்லைக் கண்ட நாயாக, விருட் விருட்டென்று பின் நோக்கி ஓடுகிற வேப்பமரங்கள்... கருவேல மரங்கள்... மஞ்சணத்தி மரங்கள்... ஆடுகளை மேய்க்கிற ஆட்டுக்காரர் கள்... வேப்ப மரங்களில் மஞ்சள் மஞ்சளாய் பழக் கொத்துக்கள்.

கூலி வேலைக்கு லாயக்கற்ற குச்சி உடம்பு, சுப்ரமணியத்துக்கு. முழுத்த இளவட்டமான பின்னும், அம்மாவின் கூலி உழைப்பில் வயிற்றை நனைத்துக் கொண்டே... தெருவில் சும்மாவே சுற்றித் திரிந்தான். ஊரில் யாரும் அவனை உப்புக் கல்லுக்கு கூட மதிக்க

மாட்டார்கள். வெறும் பயலாகத் திரிந்த அவன் மீது... பரமசிவத்தின் அய்யா சங்கையா பார்வை விழுந்தது.

சங்கையா கைமுறுக்கான ஆள். சமுத்திரமான சம்சாரித்தனம். ரெண்டு ஜோடி காளை மாடுகள், வண்டி வைத்து பெரிய விவசாயம். தொழுவம் நிறைந்த கால்நடைகள். மூன்று சொந்தக் கிணற்றுப் பாசனம். வேறுசில கிணறுகளிலும் பங்குப் புஞ்சை. பசையுள்ள சம்சாரி. நெஞ்சிலும் நிறைய ஈரம்.

“என்னலே, முழுத்த எளவட்டமாயிட்டே, சும்மாவே தெருக்காட்லே திரிஞ்சா... என்ன அர்த்தம்?”

“பெறகென்ன செய்ய மாமா? வேறு வழியில்லியே...”

“வழி ஏதாச்சும் வைச்சிருக்கீயா?”

“கையிலே துட்டு துக்காணி இருந்தா... சைக்கிள்லே ஏதாச்சும் ஏவாரம் பண்ணலாம்.”

“ஏவாரம் பண்ணிருவீயா?”

“ஆசையிருக்கு. ஆளாகி விடமுடியும்னு தெம்பு இருக்கு.”

“அப்பச் சரி... ஆடி மாசம் முடியட்டும். ஒரு வழி பாப்போம்.”

அவரது வார்த்தைகளில் மனசின் ஈரம். சொன்னபடியே ஆவணி மாதத்தில் முந்நூறு ரூபாய் தந்தார். “தொழுவத்துலே ஒரு பழைய சைக்கிள் கெடக்கு. எடுத்துக்க” என்றார்.

வாழ்க்கையில் தான் யார் என்று நிரூபித்துக் காட்ட வேண்டுமென்ற வெறி, சுப்ரமணியனுக்கு. உப்புக் கல்லுக்குக்கூட மதிக்காத ஊர்க்காரர்கள் கண்முன்னால்,

வைரக்கல்லாக ஜொலித்துக் காட்ட வேண்டுமென்ற ஒரு வேட்கை.

சில்லறைப் பருத்தி வியாபாரம் செய்தான். சண்டு வற்றல், வேப்பமுத்து, ஆமணக்கு, எள் என்று எல்லாப் பொருளையும் சம்சாரிகளிடம் வாங்கி காசாக்கினான். மறு வருஷமே பெரிய வியாபாரியாகி விட்டான்.

வண்டிப் பாரமாக பருத்தி மருகைகளும், மிளகாய் வற்றல் மருகைகளும் ராசபாளையம் கமிஷன் கடைக்குப் போயிற்று. சங்கையாவின் மன ஈரம், உலர்ந்து கிடந்த அவன் வாழ்க்கை முழுக்க படர்ந்து... பயிர் பச்சைகள் முளைத்தன.

சுப்ரமணியத்துக்கு சங்கையாதான் பெண் பார்த்துக் கல்யாணம் 'மூய்த்து' வைத்தார். திருமங்கலத்தில் பெண். ரொம்ப வசதியான வீடு. ஒரே பெண். அடித்தது யோகம். ஆள்.... பெரிய ஆளாகிவிட்டான்.

திருமங்கலத்திலேயே கடை ஒன்று கிடைத்தது. பெரிய அளவில் பலசரக்குக் கடை வைக்கப் போவதாக வந்து சொன்னான். சங்கையா பெருமிதத்தோடு வாழ்த்தியனுப்பினார். கையில் நூற்றியொன்றைத் திணித்து, திருநீறு பூசி ஆசி வழங்கினார்.

அப்போது போனவன், சங்கையா சாவுக்குத் தான் ஊர் வந்தான்.

சங்கையா சாவுக்குப் பிறகு... அந்தக் குடும்பம், கவிழ்த்த தான்யப் பெட்டி மாதிரி சட்டென்று சரிந்து விட்டது. பண்ணையார் நினைப்பில் மத்தியதர சம்சாரி மிதந்தாலும்... அவர் குடும்பம் நொறுங்குவதற்கு ரெண்டு கல்யாணம், ரெண்டு இழவு வந்தால்... போதாதா? சங்கையா மூன்று பெண் மக்களுக்கும், பெரும் தடபுட

லாய்க் கல்யாணம். ஏழு ஊர் ஜனமும் வந்து பந்துகளாக ஆக்கி அவித்து கொண்டாட்டமாக நடந்த கல்யாணங்கள். சுற்று பட்டி பத்து ஊர்களிலும் இந்தக் கல்யாணங்களைப் பற்றித்தான் ஒரு மாதமாய்ப் பேச்சு.

சங்கையா மண்டையைப் போட்ட பிறகுதான்... அதன் குட்டு நட்டு உடைந்தது. எல்லாம் பெரிய பெரிய கடன்கள். பத்திரக் கடன்கள்.

கடைசியாக பரமசிவத்துக்கு மிஞ்சியது... ஒரு ஓடு போட்ட வீடும், ஒரு கிணற்றுப் புஞ்சையும் மட்டும் தான். வாழ்ந்து கெட்ட குடிக்குரிய பரிதாபத்திற்குள் பரமசிவம்.

'நல்லது, பொல்லது' (கல்யாணம்—இழவு)களுக்கு கிராமத்திற்கு காரில் வந்து போகிற சுப்ரமணியம், பரமசிவத்தை வந்து பார்த்து நாலு வார்த்தை பேசாமல் போக மாட்டான். கௌரவம் பார்க்காமல், நன்றி விசுவாசம் குன்றாமல் எல்லாரிடமும் சொல்வான்.

"எனக்குக் குலதெய்வம் சங்கையா மாமாதான். அவர்தான் என்னை மேடேத்திவிட்டவரு. அவர் இல்லேன்னா... நா இன்னைக்கும் உப்புக் கல்லுக்குப் பெறாத பயலாத்தானிருப்பேன்."

மனசில் உள்ள உண்மையை நேர்மையோடும் பெருமை யோடும் சொல்லுவான். எல்லாம் வெறும் சொல்தானா?

ச்சே! என்ன மனுசப் பிறவிக! மனுசத் தன்மையில்லாத மனுசஜென்மங்க..

பரமசிவத்துக்கு வீட்டில் ஏக நச்சுப்பிடுங்கல்கள். சிறு சம்சாரிக்குரிய பணநெருக்கடிகள். அதிலும் இந்த வருஷம் சொஸைட்டிகாரர்கள் 'ஜப்தி கெடுபிடி வசூல்' என்று

மூர்க்கமாய்க் களத்தில் இறங்கிவிட்டதில்... இவன்பாடு நரகப்பாடாகி விட்டது.

ஜப்தி என்கிற அவமானச் சாவிலிருந்து குடும்ப கௌரவத்தை மீட்டியாகணுமே என்ற பதற்றத்தில் கையிலிருந்த பணம், கம்மல் மூக்குத்தி அடகு வைத்த பணம் எல்லாவற்றையும் அரித்துப் பொறுக்கி ரசீது போட்டுவிட்டான்.

கண்மாய் மண் அடிக்க... குப்பையடிக்க... மிளகாய் விதை வாங்க... உழுக... கிடைபோட... நாற்றங்கால் போட... இப்படி நிறைய்ய அவசரங்கள். கையில் துட்டில்லை. ஊரில் புரட்டவும் வழியில்லை. கழுத்தாம்பிடியாக இருந்தது. கண்ணு முழிபிதுங்கியது.

வழிதெரியாமல் குருட்டுப் பூனை போல தடுமாற... வீட்டுக்குள் ஒரே சண்டை சத்தம். அழுகை புலம்பல். கோபமும் சாபமுமாய் வீடே கோடைகால வெக்கையாயிற்று.

அப்பத்தான்... நன்றி விசுவாசம் குன்றாமல்— நல்ல நிலையில்— இருக்கிற சுப்ரமணியம் ஞாபகம் வந்தது. ஆனால் போகத் தயக்கம். அவனிடம் போய்க் கையேந்துவதா? நம்மைப் பற்றி என்ன நினைப்பான்? நம் குடும்ப கௌரவம் குறையாதா? என்றெல்லாம் ஆயிரத்தெட்டு தயக்கங்கள். சலனங்கள். ஆயினும்— கழுத்தாம்பிடியாக இருக்கிற துட்டுச் சிக்கல்.

பெற்றவர்கள் செய்த பாவ புண்ணியங்கள், பிள்ளைகளுக்கு வந்து சேரும் என்பார்கள். பாவத்தை அனுபவிக்கிறோம். புண்ணியத்தையும் தான் அனுபவித்துப் பார்ப்பமே என்ற நினைப்பு. அதில் சுய சமாதானம்.

ரெண்டாயிரம் என்றால் போதும். ஓசியா? வெள்ளாமையில் முதல் கடனாக இதை அடைத்து விடலாம் என்கிற மனச் சமாளிப்பு. புறப்பட்டு விட்டான்.

**நே**ற்றுச் சாயங்காலம். இவனைப் பார்த்தவுடன் சுப்ரமணியம் எவ்வளவு சந்தோஷப்பட்டான். "வராத ஆளு வந்துட்டீக" என்று ஒரு குழந்தையைப் போல குதூகலம் பொங்கி வழியச் சிரித்தான். தடபுடலான உபசரிப்பு. கடையிலும் சரி... வீட்டிலும் சரி... இவனை ஆசை ஆசையாகக் கொண்டாடினான், சுப்ரமணியம். என்ன ஏது என்று அக்கறையாக விசாரித்தான். பரமசிவம் தனது பாடுகளையெல்லாம் சொல்லச் சொல்ல... ரொம்ப வருந்தினான்.

"உங்களுக்கா... இந்தக் கஷ்டம் வரணும்? ஊரே கையெடுத்துக் கும்புடுற மாதிரி கோபுர வாழ்க்கை வாழ்ந்த வீடு" என்று உளமாரக் கசிந்தான். அசலான கசிவு.

பங்களாவின் மொட்டை மாடியில் ராத்திரி படுக்கப் போகிறபோது, பரமசிவத்தின் மனசில் பரம நிம்மதி. வந்த காரியம் கைகூடிவிடும் என்ற நம்பிக்கை. சந்தோஷ நினைவுகள் மயிலிறகாக மனசை நீவ, நல்ல உறக்கம்.

விடிந்தவுடன் சகலமும் இருண்டு விட்டது. சுப்ரமணியம் விட்டேற்றியாக பேசினான். வித்தியாசமான முகத்தோற்றம். கண்ணுக்குள் அடைக்கோழியின் சிடுசிடுப்பு.

ஆயில் மில்லுக்கான செக், பருப்பு மூட்டைகளுக்கான செக், சீரக மூட்டைகளுக்கான செக்—எல்லாம் பேங்கில் வந்து கிடக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் பணம் புரட்டிக் கட்ட முடியாத சிரமங்கள் பற்றி பொய்ச் சோகமாகப் புலம்பினான். ஈரமற்ற புலம்பல்.

ராத்திரிக்குள் என்ன ஆயிற்று? என்ன மாய மந்திரம்? கொடுத்து உதவுவதில் என்ன சிரமம்? எச்சிற்பருக்கை சிதறினால்... எறும்புக்குப் பத்துநாள் உணவு.

'விசுவாசத்துக்காக உதவி செய்தால்... அந்தப் பணத்தைத் திரும்பக் கேட்க முடியாமல் போகலாம். தாட்சண்யம் பார்த்தால்... அடிக்கடி வந்து பணம் கேட்கிற எண்ணத்தை ஏற்படுத்தி விடலாம். வீண் தொல்லையாகி விடும்' என்றெல்லாம் யோசித்திருப்பானோ...

கடைசியில் கை விரித்து விட்டான். டீ வாங்கிக் கொடுத்து அனுப்பிவிட்டான், பாவிப்பயல். ஈரக் கசிவேயில்லாமல் முகத்தை இறுக்கிக் கொண்டான்.

பரமசிவத்துக்கு ஒரே வெட்கக் கேடாகி விட்டது. 'ஏண்டா இங்க வந்தோம்' என்றாகி விட்டது. அற்பப்பயலிடம் வந்து கையேந்திட்டோமே, ஈரமத்து உலர்ந்த சக்கைப் பயலிடம் கேனத்தனமாய் மனுசத் தன்மையை எதிர்பார்த்து விட்டோமே...

இப்படியும் சொல்ல ஒருத்தனுக்கு மனசு வருமா? எங்கய்யாவினால் மேடேறிப் போனவன். அந்த நன்றி விசுவாசம்கூட இல்லாமல், மனம் கூசாமல் வெறும் கையை வீசிட்டானே...

இப்படியும் உலகத்தில் மனுசத்தன்மை அற்றுப் போகுமா? காலம் கெட்டுப் போய்விட்டது என்பது வாஸ்தவம்தான். ஆனால் இவ்வளவு மோசமாகவா கெட்டுவிட்டது? மனிதர்களே உலர்ந்து போகிற அளவுக்கா பாழாகி விட்டது? அடக் கொடுமையே...

**ரா**சபாளையம் பஸ் ஸ்டாண்டிற்குள் வண்டி போய் மூச்சுவிடவும்... ஆளுக்குமுந்தி இறங்கினான், பரமசிவம்.

கோவில்பட்டி பஸ் புறப்படத் தயாராகி உறுமிக் கொண்டிருந்தது.

ஒரு நிமிஷம் பிந்தியிருந்தால்கூட... பஸ்ஸைப் பிடித்திருக்க முடியாது. 'நல்ல வேளை' என்று மனசு ஆசுவாசப்பட, பஸ்ஸில் ஓட்டமாய் ஓடிப்போய் ஏறிக்கொண்டான்.

முதுகுடியைக் கடந்தது, பஸ். இவனுக்குள் பசிக் கிறுகிறுப்பு. ஏறுவெயிலின் உக்ரம். சுள்ளென்று காந்துகிற வெயில். கலிங்கப்பட்டியில் இறங்கி... ரெண்டு மைல் நடக்கணும் என்ற நிஜம், ஒரு மலை மாதிரி குறுக்கே நின்றது. நடக்க முடியுமா என்கிற மலைப்பு, நிமிஷத்திற்கு நிமிஷம் மலைப் பிரம்மாண்ட மாகியது.

கலிங்கப்பட்டியில் இறங்குகிறபோது...

மணி பதினொன்றேகால். ஒரு டீ குடிக்கலாமா என்று நினைத்தான். மனசெல்லாம் சுப்ரமணியத்தின் கசப்பு, பச்சை தண்ணீர்கூட குடிக்க மனசில்லை.

"என்ன ஆச்சு? போன காரியம் பழமா?" என்று கேட்கப் போகிற மனைவியை நினைக்க நினைக்க... பிடுங்கித் தின்கிற அவமான உணர்வு. அந்தக் கணத்தைச் சந்திக்கிற பயங்கரம், மனசுக்குள் மிரட்சி.

வடக்காமல் நடந்தான். பஜாரில் நிற்கிற எந்த மனிதரையும் பார்க்க மனசில்லை. சகிக்க முடியாத வெறுப்புணர்ச்சி. ஆர்.வி.எஸ். ஒர்க் ஷாப்பைக் கடந்து... தார் ரோட்டிலிருந்து விலகி... மண் ரோட்டில் நடந்தான்.

உயர்ந்த பனை மரத்தின் ஓலைகளுக்கிடையில் சூரியன் துண்டுதுண்டாக உடைந்து எரித்தது. அக்கினித் துண்டுகள், உடம்பு முழுக்க அயர்ச்சி. உயிரே கழன்று போய்க் கொண்டிருப்பதைப் போன்ற சோர்வு. கண்ணெல்லாம்

காந்தல். வாய் முழுக்க உலர்ந்து போய், கீழுதட்டில் வெடிப்பின் வலி, நடக்க முடியாத பலவீனம். வயிற்றை கவ்விப் பிடிக்கிற மாதிரியோர் உபாதை. அப்படியே உட்கார்ந்துவிடலாமா என்கிற அளவுக்கு மனத்தளர்ச்சி.

பின்புறத்தில்... ஓர் அரவம்.

ஒரு சைக்கிளில் வந்து கொண்டிருந்த முத்துமாரி, பக்கத்து ஊர்க்காரன். இவனைக் கண்டதும் சைக்கிளி லிருந்து இறங்கினான்.

"அடடே... பரமசிவம் அண்ணாச்சியா? எங்கேயிருந்து வாரீக?"

"திருமங்கலம் போயிருந்தேன்."

"ஊருக்குப் போகணுமா?"

"ம்."

"சைக்கிள்லே ஏறிக்கோங்க. நா வீட்லே கொண்ணாந்து விட்டுருதேன்."

"நீ உன்னோட ஊருக்குப் போகணும்லே?"

"அதுக்கென்ன? உங்களை உங்க ஊர்லே விட்டுட்டு... அப்புறமா நா ஊருக்குப் போறேன்."

"எதுக்கு... ஒனக்கு வீணாச் சிரமம்?"

"இதெல்லாம்.... ஒரு சிரமமா? இந்தச் சின்ன வேலையிலே நா தேய்ஞ்சா போறேன்? உங்க அய்யா செய்கைக்கும், உங்க கொணத்துக்கும் முன்னாலே... இதெல்லாம் ஒரு சிரமமா? இன்னும் என்னென்னமோ செய்யலாமே... மொதல்லே, ஏறுங்க கேரியர்லே."

அந்த நேரத்திற்கு இந்த உதவி பெரிய உதவி தான். முத்துமாரியின் சொற்கள், அவனுக்குள் கோடை மழையாக இறங்கி பரவசப்படுத்தியது.

பரமசிவத்துக்குள் ஒரு நீர்ச்சுனையின் குளிர்முகம். மனிதர்கள் இன்னும் உலர்ந்துவிடவில்லை என்கிற நினைவுச்சுனை.

*கல்கி, டிசம்பர், 1994*

◆ ◆ ◆

## 6

# பலிபீடம்

**கை**த்தராசை எடுத்து, சாக்குகளின் மடிப்புக்குள் குப்புற வைத்து, உருட்டுக்கட்டாகச் சுருட்டினான் மாரிச்சாமி. வெளியே முற்றத்தில் சைக்கிள் நின்றது. அகலக் கேரியரில் குறுக்காக வைத்து போல்ட் போட்டு மாட்டியிருந்த செவ்வகப் பலகையில் சாக்குச் சுருட்டை வைத்து பின்னல் கட்டாகக் கட்டிக் கொண்டான்.

படிகளைப் பொறுக்கித் துணிப்பைக்குள் போட்டான்.

“எம்மா...”

சத்தமாய் இரைந்த அவன் குரலில் சிடுசிடுப்பு. “என்னடா”– மாட்டுக் கொட்டகையிலிருந்து அம்மாவின் அசரீரி.

“அரைக்கிலோ படியைக் காணலியே, எங்கே?”

“திண்ணை மூலையிலே கெடந்துச்சு.”

“இன்னோரு படிக்கல்லு?”

“நா பாக்கலேப்பா. நேத்து நீ கொண்ணாந்து போட்ட படிக்கல்லையெல்லாம் திண்ணையிலே போட்டு வச்சேன். அதான் எனக்குத் தெரியும்.”

“ச்சே! அப்ப... அந்த அரைக்கிலோ படி எங்க போச்சு?”

“நீ எந்த ஊர்லே போய்த் தொலைச்சியோ... நா என்னத்தைக் கண்டேன்?”

அம்மாவின் விட்டேற்றியான பதில் எரிச்சலூட்டியது. மானாங்காணியாக சீறிக்கொண்டு வந்த கெட்ட வார்த்தைகளை உதட்டுக்குள்ளேயே அடக்கிக் கொண்டான்.

“இந்த நாசமத்துப் போற வீட்லே... ஒரு எழவும் ஒழுங்கா இருக்காது. எல்லாம் தாறுமாறுதான்.”

எரிச்சலான முணுமுணுப்போடு துணிப் பையை ஆண்டில்பாரில் மாட்டினான். ஒரு சுழற்றுச் சுழற்றி முக்கோண பாரில் போட்டுக் கொண்டான். மணி ஏழு இருக்குமா? சிலோன் வானொலியில் பொங்கும் பூம்புனல் துவங்குகிற இசை.

காலைச் சூரியன் சுள்ளென்று கண்ணுக்குள் உறுத்துகிறது. பெடலில் காலை வைக்கும் முன் மாரிச்சாமி நிமிர்ந்து சகுனம் பார்த்தான்.

நிறைகுடத்தை இடுப்பில் வைத்துக் கொண்டு எதிரில் வந்த ஒரு தாவணி. ஒரு திருப்தி. ஸ்டாண்ட் கிளிப்பை வலது பாதத்தால் சுதாரிப்பாகத் தட்டி விட்டு, சைக்கிளை நகர்த்தினான்.

இடது கையை ஆண்டில்பாரிலும், வலது கையை சீட்டிலுமாக வைத்து ஸ்டைலாக பெடலை மிதித்துத் தாவினான். ஃப்ரிவீல் இரைச்சல் மனசுக்கு உற்சாகம் தர, தேவையில்லாமல் பெல் அடித்துக் கொண்டே...

தெருவைக் கடந்து, தெற்காகத் திரும்பி, நடுத் தெருவில் தொட்டு, டீக்கடையில் வந்து நிறுத்தினான், மாரிச்சாமி.

இங்கு ஒரு டீ குடித்துவிட்டு ஏவாரத்துக்குப் போனால், சரக்கு நிறைய விழும். நல்ல லாபம் கிடைக்கும். அது ஒரு ராசி, நரி முகத்தில் முழித்த மாதிரி...

“அண்ணே... ஒரு டீ போடு.”

“என்ன... தூரவா?”

“பட்டிகளுக்குத்தான்...”

டீ கிளாஸை கழுவிக் கொண்டே கடைக்காரர், “நேத்து நல்ல பட்சியாமே... ரெண்டு குவிண்டால் பருத்தி கெடைச்சதாமே... மூணுலோடு அடிச்சீயாமே...”

“ஆமா... கெடைச்சு என்ன செய்றது? சொமந்ததுதான் மிச்சம். வேற ஒண்ணுமில்லே.”

“லாபமில்லையா? ஏன்?”

“வெலையிலேயும் அமுக்கிட்டாங்க... எடையும் நினைச்ச மாதிரி வரலை.”

“ஒரு கிலோவை முக்காக்கிலோன்னு அடிச்சு எடை போடுறதுலே கொம்பனாச்சே நீ? பெறகெதுக்கு எடை கொறையுது.”

“எங்களை மாதிரியான சில்லறை ஏவாரிகளை மொட்டையடிக்குறதுக்குன்னே பருத்தியாபீஸ் இருக்குல்லே? வெறகுத் தராசு வைச்சிருப்பாக. லேசுலே ஆடாது. கொண்டு போய் நாங்க பருத்தியைப் போட்டா... அவங்க வைச்சதுதான் வெலை. போட்டதுதான் எடை...”

புண்படுத்தாத ஒரு பரிகாசச் சிரிப்போடு டீக்கிளாஸை நீட்டினார், டீக்கடைக்காரர்.

“நீங்க சம்சாரிகளை ஏமாத்தி கள்ளத்தராசு போட்டு மொட்டையடிச்சா... உங்களை பருத்தி யாபீஸ்காரங்க வழிச்சு விட்டுறாங்களோ....? ‘பிச்சை எடுக்குமாம் பெருமாளு, அதைப் பிடுங்குமாம் அனுமாரு’ங்கிற கதைதானா?”

“ஆமா....”

“இளிச்சவாயன் சம்சாரிதான். எல்லோருக்கும் இவன்தான் இரை குடுக்க வேண்டியிருக்கு?”

“அதுலே சந்தேகமென்ன? சம்சாரியோ சமுத்திர மோன்னு சும்மாவா சொல்றாக? எல்லாரும் இவன் மேலேதான் ஓடம் வுடுவாக.”

டீ உதட்டில் பிசினாக ஒட்டியது. நல்ல ஸ்ட்ராங் டீ. கனத்த டீயின் துவர்ப்பு கலந்த இனிப்பு ருசி நாக்கில் படிந்து, உள்ளுக்குள் இறங்கியது.

ஆனால் கடைக்காரனின் தொணதொணப்பு எரிச்சலூட்டியது. எல்லை மீறி மூக்கை நீட்டித் துழாவுவதைச் சகிக்க முடியவில்லை.

காசைப் போட்டுவிட்டு, சைக்கிளை எடுத்தான்.

‘டீயை குடுத்துட்டு துட்டை வாங்கிப் போட வேண்டியதுதானே! என்னத்துக்காக இந்த விசாரிப்பு? லாபம் வந்தா என்ன? இவுகளுக்கு என்ன வந்துச்சு? நட்டம் வந்ததைச் சொல்லிட்டா... ஈடு குடுத்துருவாகளா? ஊரான் பொரணியை பேசிச் சிரிச்சாத்தான்... வயிறே நெறையுமோ... இவுகளுக்கு?’

ஓடையைத் தாண்டி சைக்கிள் விரைந்தது. மேயப் போகிற செம்மறி மந்தைகள், எருமைகளை விலக்கிக் கொண்டு பாய்ந்தது.

டீக்கடை எரிச்சலிலிருந்து நினைவை உருவிக் கொள்ள முயன்றான். அண்டிராயர் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். ரூபாய் பத்திரமாக இருந்தது.

ரோட்டின் இரு மருங்கிலும் மிளகாய் தோட்டங்கள். வாய்க்கால்களில் வரிசை வரிசையாக அகத்திகள். கூலிவேலைக்குப் போய்க் கொண்டிருக்கிற மனிதர்கள். பொழுதுக்கும் பாடுபடணும்.

யார் யார் நிலத்துலோ வேர்வை சிந்தி விளைய வைக்கணும். வயிற்றுப் பாட்டுக்குக்கூட கூலி கிடையாது. டீ குடிக்கக் கூட காசு மிஞ்சாது.

அதனால் தான்... இவன் மம்பட்டியை தலையைச் சுற்றி எறிந்து விட்டு, இந்த சைக்கிளைப் பிடித்தான்...

...அஞ்சாம் கிளாஸ் வாத்தியாரின் அடிதாங்க முடியாமல் மெட்ராஸுக்கு ஓடியவன். பலசரக்குக் கடையில் பழைய கஞ்சியை குடித்துவிட்டு வேலை செய்தான். ஆறு வருஷப் பாடம் அடிகளிலும் பசியிலும் பட்ட வேதனைப் பாடம்.

துட்டைப் பார்க்க நேர்வழியே கிடையாது. துட்டுதான் வாழ்க்கை, மரியாதை, துட்டு இல்லாதவனை நாய்கூடச் சீந்தாது.

எந்த வழியிலாவது துட்டைப் பிடித்துவிட்டால் போதும். அப்புறம் துட்டே துட்டு கொடுக்கும்.

ஆறு வருஷத்தில் வியாபாரத்தின் சூதுவாது எல்லாம் புரிந்து விட்டது. தராசை எப்படியெல்லாம் பயன்படுத்துவது என்பதெல்லாம் அத்துப்படி....

மம்பட்டியை எறிந்து விட்டு சைக்கிளைப் பிடிப்பதற்கும், பிடித்த பிறகும், அந்த ஆறு வருஷப் பாடம்தான் வெளிச்சம்...

ஆற்றுப்பாலம் நெருங்குகிறது... சைக்கிள் தெற்காகத் திரும்பவா, வடக்குத் திசையில் வளையவா?

எந்த ஊர்ப்பக்கம் போகலாம்...? மனசில் முண்டுகிற யோசனைகள்.

கரிசல்குளம் பக்கம் போகலாமா? அங்குதான் பருத்தி நிறைய விழும். ஒவ்வொரு வீட்டிலேயும் சில்லறைப் பருத்தியாகவே இருபது கிலோவுக்குக் குறையாமல் கிடைக்கும். விலையும் படிந்து வரும். மத்தியான நேரங்களில் பெண்கள்தான் இருப்பார்கள்.

அவர்கள் மனம் குளிரப் பேசிச் சிரித்துக் கொண்டே, மனம் போல எடை போடலாம்.

கரிசல்குளம் என்று நினைத்தவுடன் மனசுக்குள் நறுக்கென்று எறும்பு கடித்தது.

பத்து நாளைக்கு முன்னாடி அங்கே போனது. அதற்கப்புறம் அந்த ஊர்ப்பக்கம் தலைவைத்துகூட படுக்கவில்லை. மனசுக்குள் பயம்.

இன்றைக்குப் போனால்... வேப்ப மரத்தில் கட்டிப் போட்டுதான் விசாரிப்பார்களோ! தோலை உரித்து விடுவார்கள். உடம்பு புண்ணாகிப் போகும்.

ஆனால்... அங்குதான் நிறைய பருத்தி விழும். லாபம் கிடைக்கும்.

பயமும் சபலமும் மனசுக்குள் மல்லுக்கட்ட சைக்கிள் தன் போக்கில் வடக்காகத் திரும்பியது. இன்னும் அஞ்சு மைல். இரண்டு ஊர்கள். பிரயோசன மில்லாத ஊர்கள். தாண்டிப் போய் விட்டால் அந்த ஊர். பக்கத்தில் தொம்பக்குளம். சம்சாரிகள் பெருத்த ஊர்கள். வியாபாரக் குணமில்லாத சம்சாரிகள். தாராள மனசுகள்.

‘நம்பளை நம்பித்தானே சில்லறை ஏவாரிக ஜீவனம். அவங்களுக்கும் அலையுறதுக்கு நாலு காசு கெடைக்கட்டும்' என்று நினைக்கிற பெருந்தன்மைக் குணம்.

ஆனால், ஏமாற்றுவதைச் சகித்துக் கொள்ள மாட்டார்கள். ஏமாற்றுகிறவன் சிக்கிவிட்டால்... நீக்குப்போக்கான யோசனை யெல்லாம் கிடையாது.

ஊர் மைய வேப்ப மரத்தில் கட்டிப் போட்டு விடுவார்கள். வந்த ஜனமெல்லாம் காறித்துப்பும்.

ஊர் கூடி பஞ்சாயத்துப் பேசி... போட்ட அபராதத்தைக் கட்டினால்தான்... விடுதலை.

இப்படித்தான் போன வருஷத்துக்கு முந்தின வருஷம்...

பெரிய அரவை மில்லுக்கு லாரி லாரியாகப் பருத்தி வாங்கி லோடு அனுப்புகிற பெரிய வியாபாரி. மற்ற வியாபாரிகள் எவனும் தலைநீட்ட முடியாதபடி, குவிண்டாலுக்கு முப்பது, நாற்பது என்று விலையை கூடுதலாக வைத்து விடுவார்.

ஊர் முழுக்க எல்லா வீட்டுப் பருத்திகளையும் அவரே வாங்கினார். ஒவ்வொரு வீட்டு முன்னாடியும் எடைபோட்டு முடித்து மலை மலையாக பருத்தித் தாட்டுக்கள்.

கட்டுக்கட்டாய் பணம் கொண்டு வந்து ரொக்கம் கட்டித்தான் பருத்தி மருகையைப் புரட்டுவார். ஊர் முழுக்க இவரைப் பற்றித்தான் பேச்சு.

பலநாள் கள்ளன் ஒருநாள் சிக்கத்தானே செய்வான்? சிக்கிவிட்டார்.

மேல வீட்டுக்காரர் வீட்டில் பெரிய அம்பாரமாய் பருத்தி. மும்முரமாய் எடை போட்டு முடிந்த நேரம். வீட்டுக்காரர் எங்கிருந்தோ ஒரு பத்து கிலோ படிக்கல்லைக் கொண்டு வந்தார். இந்த வருஷ சீல். புதுப் படிக்கல்.

வியாபாரியின் தராசுத் தட்டில் ஏற்கெனவே கிடந்த படிகளை இந்தப் புதுப்படியால் எடை போட்டால்... வியாபாரியின் படிக்கல் நானூறு கிராம் கூடுதலாக இருந்தது. அப்படியானால் குவிண்டாலுக்கு நாலரை கிலோ பருத்தி கூடும். அது களவு. இருபது ரூபாயை விலையில் கூட்டிவிட்டு, திருட்டுத்தனமாய் ஐம்பது ரூபாய் பருத்தி எடுத்துக்கொண்ட தந்திரம் பிடிபட்டது.

கசாமுசாவென்று சத்தம். ஊரெல்லாம் செய்தி தீயாகப் பரவ... காட்டிலிருந்து ஜனமெல்லாம் வந்து சேர... பாவம் அந்த வியாபாரி.

வேப்ப மரத்தில் கட்டப்பட்டார். வசவு நாறிப் போயிற்று. 'ஊரைக் கொள்ளையடிச்ச பாவி' என்று வசவும் சாபமும் கொஞ்சமில்லை. நாலு தலை முறைக்குப் போதும்.

அப்புறம் என்ன... அபராதத்தைக் கட்டிவிட்டு, தலை தொங்கிப் போனவர்தான்... அரை உசுராய் ஆகிப் போனார். அப்புறம் தராசைத் தொடவேயில்லை.

மாரிச்சாமிக்குள் பக்கென்றது.

'அவ்வளவு பெரிய ஏவாரிக்கே அந்தக் கதி என்றால்... நமக்கு?'

வலது கால் பெடலைவிட்டு வழுக்கிக் கொண்டு போனது. பயத்தால் உள்ளங்காலில் கூட வியர்க்கிறதா...?

மனசை அரிக்கிற நமைச்சலான எண்ணங்களை மாற்ற விசிலடித்தான். விசிலில் ஏதோ ஒரு பாட்டைக் கொண்டுவர, அதுவும் நழுவிப் போய்விட...

'இன்னைக்கும் அந்த ஊருக்குப் போகாம... வேற ஊருக்குப் போயிட்டா என்ன?'

சீட்டைவிட்டு எழும்பி, எம்பி எம்பி பெடலை அழுத்தினான். லேசாக அடிக்கிற மாரி மூலைக் காற்று. அதைப் பொருட்படுத்தாமல் முன்னேறுகிற சைக்கிள்.

வானத்தில் உரசிக் கொண்டு நிற்கிற உலக்கையாக சிமிண்டாலைக் குழாய். அதிலிருந்து தொடர் கற்றையாக குபுகுபுவென்று வருகிற புகை. தென் மேற்குத் திசையில் நகர்ந்து... விரிந்து... பரவி...

'நாம செய்ஞ்ச தப்பைக் கண்டு பிடிச்சிருப்பாகளா? கண்டு பிடிச்சே கேட்டாலும்... பத்து நாளாச்சு... ஏதாச்சும் சொல்லி மழுப்பிவிட முடியாதா? நாளாயிட்டால் எந்தச் சூடும் கொறைஞ்சுதானே போகும்? பெரிய பெரிய துரோகமெல்லாம்... காலப் போக்கிலே கரைஞ்சு, மறந்து போறதில்லியா?'

மனப் பயத்தை கொஞ்சம் தளர்த்துகிற ஆறுதலான நினைவுகள்.

மனசின் இறுக்கம் சற்று நெகிழ்ந்து சுபாவமாய் சுவாசிக்க முடிகிறது. நெற்றியிலிருந்து அரும்பி வழிகிற வியர்வை... கண்ணுக்குள் கரிக்கிறது.

பத்து நாட்களுக்கு முன்பு...

**பொ**ழுது மயங்கி, கருகருவென்று இருட்டுகிற நேரம். சைக்கிள் திணறியது. ஒன்றின் மேலாக ஒன்றாக படுக்கை வசத்தில் போட்டுக்கட்டிய நாலு மூட்டைப் பருத்தி. ஒன்றேகால் குவிண்டால் கனம் இருக்கும்.

சைக்கிள் நகர மறுத்தது. எம்பி எம்பி பெடலை மிதித்தால்தான் நகரும். மூச்சுத்திணறியது. வண்டி நிலைகொள்ளாமல் அலம்பியது.

ஆனால், மாரிச்சாமிக்குள் உற்சாகம்.

சுமையை உணராத மகிழ்ச்சி. பெரிய வேட்டையில் ஜெயித்து விட்ட சந்தோசம்.

மூன்றே வீட்டில் மொத்தப் பருத்தியும். மூன்று வீட்டிலும் பெண்கள் தான் இருந்தனர்.

அவர்களிடம் குளிர்ச்சியாகப் பேசிச் சிரித்து எடைபோட்டான். அவர்கள் மயங்கித் திளைக்கிற மாதிரிப் புகழ்ச்சியாய் பேசணும். பூரித்துப் போவார்கள். அதுதான் இவனது சொக்குப்பொடி.

பேசிச் சிரித்துக் கொண்டே தராசைப் பிடித்தான். ஒன்றரைக்கிலோ எடைக்கல்களைப் போட்டான். பேச்சுவாக்கில் தராசின் இடது பக்கம் கொக்கியைத் தூக்கிப் போட்டுக் கொண்டான். அவர்கள் கவனிக்கவில்லை.

குவித்துக் கிடந்த பருத்தியை பார்த்த முதல் பார்வையிலேயே மதிப்பிட்டு விட்டான். நாற்பது கிலோவுக்கு குறையாது. கொக்கி போட்ட தராசு அதை முப்பத்திரண்டு கிலோ என்று நிறுத்திக் காட்டி விட்டது.

அந்த அம்மா கூடப் புலம்பினார்கள்.

"நாலு துலானுக்குக் கொறையாதுன்னு அய்யா சொன்னாக. முப்பத்திரண்டு கிலோதான் வந்துருக்கோ..."

"அம்மா, உங்க கண்ணு முன்னாலே தானே எடைபோட்டேன்? தராசு பொய்யா சொல்லும்?"

"என்ன மாயமோ... எனக்கு அம்மச்சமாத்தான் (சந்தேகம்) இருக்கு..."

"வேணும்னா... இன்னொரு தடவை எடை போட்டுக் காட்டட்டா...?

"வேண்டாம்ப்பா... ரூவாயைக் கணக்குப்பாரு..."

"ஆட்டும்மா..."

அந்த அம்மாவின் முகம் ஒரு மாதிரியாகி விட்டது. சுமுகத்தன்மை இல்லை. கண்களில் சந்தேக நிழல்.

இவனுக்குள் உதைப்பு. 'மாட்டிக் கொள்வோமோ?' படபடக்கிற மனசோடு சைக்கிளில் லோடு பண்ணிக் கொண்டு, பரபரவென்று புறப்பட்டான்.

பருத்தியாபீஸில் கொண்டு வந்து போட்டான். நிகரமாய் 22 கிலோ கூடுதலாயிருந்தது. லாபம் வேறு. எல்லாம் சேர்த்து, 270 ரூபாய் லாபம். நல்ல வேட்டை.

அன்றைக்கு மாரிச்சாமிக்கு தலைகால் புரியாத சந்தோஷம். முகமெல்லாம் சிரிப்பு. சக சில்லறை வியாபாரிகளுடன் கேலியும் கிண்டலுமாய் சீண்டி விளையாடினான்.

வீட்டிற்குத் திரும்புகிறபோது, ஒரு கிலோ காராச்சேவும், ஒரு கிலோ பூந்தியும் வாங்கிக் கொண்டான்.

—இன்று அதுவே பூதமாக வந்து நின்று அச்சுறுத்துகிறது. அருவமான பூதம். உள் மனசுக்குள் நடுக்கம். பயந்த மனசில் கன்னாபின்னாவென்று கற்பனைகள். பயங்கரம் பயங் கரமாய்க் காட்சிகள்... வேப்பமரம்.... விளக்குமாறு அடிகள்...

இந்தச் சில்லறை ஏவாரப் பிழைப்பே இப்படித் தான். காற்றும் வெயிலும் பாராமல் மைல் கணக்காய் ஊர் ஊராய் அலையணும். தெருத் தெருவாய் சுத்தணும்.

"பருத்தி இருக்கா... பருத்தி" என்று தொண்டை கிழியக் கத்தணும். சரக்கு இருந்தால் விலை பேசணும். அதற்கு ஆயிரத்தெட்டு பொய்கள், நடிப்பு, ஏமாற்று எல்லாம் செய்யணும். அப்புறம் எடைபோடுவது என்றால், முயல் பிடிக்கிற நாய் மாதிரி நூறு டம்பல் பம்மிப் பதுங்கணும்.

முழிச்சிருக்கிற முழிகளை வலி தெரியாமல் தோண்டி எடுக்கணும்.

தொழில் பார்த்தாகணும். ரெண்டு துட்டைப் பார்த்தாகணும். அப்புறம், இப்படிப் பயந்து பயந்து சாகணும்.

இதை விட்டுவிட்டு எந்தத் தொழிலுக்குப் போனாலும் இதே கதைதானே! ஒன்று ஏமாறணும். இல்லே, ஏமாத்தணும். ரெண்டும் இல்லாம மனுசன் வாழ முடியலியே... ச்சே! இது என்னயா பொழப்பு!

வாழ்க்கையே பலிபீடம்தானா? பலியாக வேண்டும். இல்லையென்றால் பலிகொடுக்க வேண்டும், வேறு வழியே இல்லையா...?

சைக்கிள் ஊருக்குள் நுழைந்து விட்டது. மனசுக்குள் பூரான் ஊர்கிற மாதிரியோர் அரிப்பு, பயம்.

பஜாரில் டீக்கடை முன் வண்டியை நிறுத்தினான். குப்பென்று உடலெங்கும் வியர்வை. நசநசப்பு. சட்டைப் பட்டனை அவிழ்த்துவிட்டு காலரைத் தூக்கிவிட்டான். கைலியில் முகம் கழுத்து எல்லாம் துடைத்துக் கொண்டான்.

கடைக்குள்ளிருந்து வெளிப்பட்ட பெரியவர், புகை நிறக் கதர்த் துண்டை போர்த்தியிருந்தார்.

"என்னப்பா... பருத்தி ஏவாரியா?"

"ஆமாய்யா... உங்க வீட்லே பருத்தி கெடக்கா?"

"இல்லேப்பா... நீ ஆமநாட்டு ஏவாரிதானே?"

"ஆமய்யா."

"தெக்குத் தெரு ஓட்டு வீட்டம்மா ஒன்னைத் தேடித் தேடி விசாரிச்சுக்கிட்டு இருந்தாகளே..."

இவனுக்குள் நறுக்கென்று குத்திகிற முள். கொடுக்கை நீட்டிக் கொண்டு நெருங்கி வந்த தேள், கொட்டியே விட்டது. 'மாட்டிக்கிட்டோம்.'

மனசுக்குள் வியர்வை, படபடப்பு. 'இப்படியே திரும்பி ஓடிவிடலாமா' என்று தவிக்கிற மனசு. வேப்பமரத்தை மிரட்சியோடு பார்த்தான். 'ஓடிப்போயிட வேண்டியதுதான்.'

சைக்கிளை நெருங்கினான். ஆண்டில்பாரைப் பிடித்த கையில் வியர்வை. ஸ்டாண்ட் கிளிப்பைத் தட்டிவிட்டு, சைக்கிளை நகர்த்த முயன்றபோது,

மறித்துக் கொண்டு ஒரு வாலிபன்.

"எங்க அம்மா ஒன்னைக் கூப்புட்டாக."

மனசு படபடத்தது. நாக்கெல்லாம் உலர்ந்து போய்... பயத்தில் உதடு பிரிய மறுத்தது.

"எதுக்கு?"

"எதுக்கோ?"

"அப்புறமா வர்ரேன்."

"இல்லே... கையோட கூட்டிட்டு வரச் சொன்னாக."

வேப்பமரத்தின் நிழல் வெப்பமாய்த் தகித்தது. சிக்கியாகி விட்டது. இனி மீள வழியேயில்லை.

தலைக்கு மேல் வெள்ளம். இனி சாண் என்ன, முழம் என்ன!

அவன் பின்னால் சைக்கிளை உருட்டினான் மாரிச்சாமி. சூறாவளிக்குள் சிக்கிய பச்சிலையாக இவன். இருதயம் துடதுடக்கிறது. வயிற்றுக்குள் பகீர்... பகீர் உணர்வு.

வீட்டு முற்றத்தில் சைக்கிளை நிறுத்தி, வீட்டுக்குள் நுழைந்தான். கால்கள் பின்னலாடியது. வெய்யிலிலேயே இருந்த இவன் கண்களில், சட்டென்று வந்து மோதிய வீட்டு நிழலிருட்டு. இமைகளை அழுந்த மூடினான். உள்ளுக்குள் மிதந்த வர்ணரேகைகள்.

நா வறண்டது. எச்சிலெல்லாம் கட்டியாகி விட்டது. வார்த்தை அதற்குள் சிக்கிக்கொள்ள...

"என்னம்மா..."

"யாரு, ஏவாரியா?"

"ஆமம்மா..."

மனசுக்குள் திக் திக் திக்...

"ஏதாச்சும் தொலைச்சுட்டுத் தேடுனீயா?"

"இல்லியே... என்னம்மா?"

"தொலைச்ச படிக்கல்லைத் தேடக்கூட மதியில்லாம இருக்கிற நீயெல்லாம், ஒரு ஏவாரி தானா?"

அன்பான கண்டிப்போடு வந்த கேள்வி. மனசின் பாரம் சட்டென்று நழுவ... இறுக்கம் தளர்ந்து இயல்பாய்த் துடிக்க... பயம் தொலைந்த இடத்தில் ஆறுதல் ஒரு குளிர்ச்சியாய் வந்து உட்கார...

நல்ல வேளை... இவர்கள் 'அதைக்' கண்டு பிடிக்கலை. உள்ளுக்குள் மகிழ்ச்சியான குழப்பம்.

"என்னம்மா விஷயம்?"

"நீ அன்னிக்கு போட்டுட்டுப் போய்ட்டே. நா எடுத்து வெச்சேன். வந்தா, குடுத்துரணும்னு தேடுனேன். நீ

இன்னிக்குத்தான் வந்துருக்கே. ஒன்னோட முதல் எனக்கு எதுக்கு? இந்தா எடுத்துக்க ஒன்னோட அரைக்கிலோ படி."

படிக்கல்லைக் கையில் எடுத்தான். என்ன சொல்வது என்று தெரியவில்லை. அவனுள் எங்கோ ஒரு மூலையில் வேதனை. தாங்க முடியாத வலி. குத்தெடுக்கிற உளைச்சல்.

ஒரு படிக்கல்லைக்கூட ஒளித்துக் கொள்ள விரும்பாத இந்த அம்மாவிடமா... அன்று கொக்கி போட்டு எடையை ஒளித்தேன்...? இத்தனை நாணயமான சம்சாரிகளிடமா, நான் அநியாயமாய்... சாமர்த்தியமாய்... திருடுகிறேன்...? ச்சே! ஒரு குழந்தையின் நெஞ்சில் மிதித்துவிட்ட ஒரு கொடிய சுய உளைச்சல்.

பயம் இருந்த மனசில்... இப்போது இந்த வலி.

படிக்கல்லும், தொழிலும், வாழ்க்கையும் பாறையாய் கனக்கிறது. உடம்பிலுள்ள சக்தியெல்லாம் கரைந்து போய்விட்ட உணர்வு.

ஏதோ நல்ல வார்த்தைகள் சொல்லிவிட்டு வெளியேறிய மாரிச்சாமிக்குள் மனக்குழப்பம். அசூயை. பிழைப்புப் போட்டியில் சாக்கடைப் பன்றியாய் இழிந்து போய்விட்டதை உணர்ந்த மனக்கசப்பு.

"பருத்தி இருக்கா... பருத்தி" என்று சத்தம் போட மனசில் தெம்பில்லை. எங்கோ ஒரு தடங்கல். தொண்டைக்குள் ஓர் அழுத்தம்.

ஏகப்பட்ட யோசனைகள்.

மனசு ஒரு நிலைப்படவில்லை. ஒரு டீயைக் குடித்துவிட்டு, கிடந்த பேப்பர்களைப் பார்த்தான். நேரம் ஊர்ந்தது. பசிப்பதை உணர்ந்தான்.

சைக்கிளை உருட்டிக் கொண்டு அடுத்த ஊருக்குள் நுழைந்தான். பசி வயிற்றைக் கிள்ள... தெருவில் நடந்தான். பசி... பசி... பசி... புறவாழ்வின் அசுர நிஜமாக... பசி.

"பருத்தி இருக்கா... பருத்தி" என்று கத்திக் கொண்டே சைக்கிளை உருட்டினான். கத்த முடிகிறது, இப்போது.

அவன் நழுவவிட்டிருந்த அரிவாளை எடுத்து அவன் மனசுக்குள் சொருகி, ஓங்கவைத்துவிட்டது பலிபீடம்.

***சுபமங்களா, 1989***

◆ ◆ ◆

7

# ஈரம்

**ம**ண்டையைப் பிளக்கிற பங்குனி மாச வெய்யில். தகிக்கிற வெய்யில். உச்சியிலிருந்து சரியத் துவங்கி விட்ட சூரியன். சக கூலிக்காரப் பொண்டுகளுடன் வம்புப் பேச்சுக்கு வாயைக் கொடுத்துவிட்டு, பூவனமும் நிரை பிடித்து மிளகாய்ப் பழம் பறித்துக் கொண்டிருந்தாள். காதோரங்களில் வழிகிற வியர்வை.

செடியோடு செடியாக பின்னி கொழை மோதிக் கிடக்கிற செடிகளின் இருட்டுக்குள், விலக்கி விலக்கிப் பார்த்து, 'சிவப்பு'களை தேடித் தேடி பறித்துக் கொண்டிருந்தாள்.

பரபரப்புக்கு பழகிப் போன கை, 'பொடு, பொடு' வென்று ஓடியது. வேலை நேரத்திற்குள் ஆளுக்கு ஒரு சாக்குப் பறிச்சாகணும்.

"ஏளா... பூவனம், கஞ்சியைக் குடிச்சிட்டு வேலையைப் பாருங்க. நா வூடு வரைக்கும் போய்ட்டு வரேன். கஞ்சியை குடிச்சிட்டு, புள்ளைகளையும் பாத்துட்டு ஒரே ஓட்டத்துலே ஓடியாந்துரேன்."

சொல்லிவிட்டு புஞ்சைக்காரி பரபரவென்று அகத்திக் கொழையை ஒடித்தாள். குடங்கையில் கொழையை ஏந்திக்

கொண்டு மழைக்குப் பயந்து ஓடுபவளைப் போல வெருளிப் பாய்ச்சலாய் நடந்தாள்.

அகத்திச் செடிகளின் காய்ந்த குச்சிகளில் தொங்கிய தூக்குச் சட்டிகளை எடுத்துக் கொண்டு எல்லோரும் மஞ்சணத்தி மர நிழலுக்கு வந்தபோது, பூவனத்தின் மனசும் பிள்ளைகளைப் பார்த்து வர ஓடியது.

மூத்தவள் ராஜி எருமையை பத்திக் கொண்டு மேய்ச்சலுக்குப் போயிருப்பாள். சின்னவன் முத்துப் பயல்...?

சனிக்கிழமை, பள்ளிக்கூடம் லீவ். சத்துணவை வாங்கித் தின்றுவிட்டு தெருப் புழுதியிலே விளையாடிக் கொண்டிருப்பான். சின்னப் பிள்ளைகளோட சண்டை போட்டு, அடிவாங்கி... 'அம்மா, அம்மா' ன்னு அழுதுகிட்டு அலைவானோ...

தாய் மனசுக்குள் தவிப்போடு ஓடிய நினைவுகள், உள்ளுக்குள் ஒரு மெல்லிய நடுக்கம், முத்துவைத் தேடி ஓடத் துடிக்கிற மூர்க்கமாய் மனசு.

"என்ன நெனப்புடி? கஞ்சியைக் குடி." கிழவியின் அதட்டலில் பூவனம் முழித்துக் கொண்டாள். சட்டியைத் திறந்தாள்.

கம்மஞ்சோறு மட்டும் இருந்தது. தண்ணீரை ஊற்றினாள்.

"கடிச்சிக்கிடை இல்லையா, பூவனம்?"

அதே கிழவியின் கரிசனம். சலிப்புடன் தூள் கொட்டினாள், பூவனம்.

"கரை கஞ்சிக்கு கடிச்சிக்கிடை எதுக்கு?"

உப்பு போட்டு வறுத்த வற்றலை நீட்டினாள் கிழவி. ஊறுகாய் இணுக்கை நீட்டினாள் ஒருத்தி. துவையலை காட்டினாள் ஒருத்தி. ஆகக் கடைசியில் இவளுக்கு கடிச்சிக்கிடை மிஞ்சிப்போய் விட்டது.

மனசுக்குள் பூவை அள்ளித் தூவுகிற இந்தக் கிராமத்து அந்யோன்யம். நீராய் பாய்ந்து பரவுகிற கூட்டுழைப்புத் தோழமை. அன்பையும், கருணையையும் சுமந்து நிற்கிற மனுசத் தன்மை.

பூவனம் ஒன்றும் விசேஷமாய் சிலிர்த்துப் போய் விடவில்லை. இதெல்லாம் சகஜம், மீன் குஞ்சுகள் நீந்துவதைப் போல.

... பண்டிகை போன்ற நல்ல நாள்களில் வீடுகளில் அதிசயமாய் தோசைக்குப் போடுவார்கள். சோளத் தோசை. பாவாடையில் திரிந்த அந்த நாளில் பூவனத்துக்கு சந்தோஷம் பிடிபடாது. கும்மாளத்தில் தெருவெல்லாம் கால் பாவாமல் ஓடித் திரிவாள். "எங்க வீட்லே தோசை... எங்க வீட்லே தோசை" என்று எல்லாச் சிறுமிகளிடமும் பெருமையாய் சொல்லிச் சொல்லி மகிழ்ந்து போவாள்.

விடிந்தால் போதும். அம்மா சொன்னபடி ஒவ்வொரு வீடாக தோசையை சுமந்து கொண்டு போய்க் கொடுப்பதே பெரீய்ய வேலையாய்ப் போகும். 'சீ' என்றிருக்கும்.

"அடியே பூவனம், இந்தா இதைக் கொண்டு போய் நம்ம கீழவீட்டு அத்தை வீட்லே குடுத்துட்டு வா..."

"ஆமா... போ... நா மாட்டேன்..."

"ஏங்கண்ணுலே... போயிட்டு வாடி..."

"ச்சீ..."

அதேபோல ஏதோ காரணமாய் இவர்கள் வீட்டில் ஒன்றும் செய்யாமல் போட்டு விட்டால், பல வீடுகளிலிருந்து வந்து சேர்கிற தோசையில் வீடு நிறைந்து போகும். மறுநாள் சாயங்காலம் கூட காய்ந்த தோசையை கடித்துக் கொண்டு தெருவில் விளையாடுவாள், பூவனச் சிறுமி...

நல்லது பொல்லது இரண்டிலும் தனக்குள் தானாய் முகம் திருப்பிக் கொள்கிற சுய ஒதுங்கல் சமாச்சாரம், கிராமத்துக்கு அந்நியமானது. மிளகாய்ச் செடிகளைப் போல ஒன்றுடன் ஒன்றாகப் பின்னிப் பிணைந்து, கொழை மோதி... கலந்து பழகுகிற உறவுகள்...

இதெல்லாம் இப்போது சன்னஞ் சன்னமாய் அருகி வருகிறது. அருகி வருவதைச் சகித்துக் கொள்ளவும் முடிய வில்லை; தடுத்து நிறுத்தவும் இயலவில்லை. மனுசருக்கு மனுசர் ஒட்டாமல், அந்நியமாய்... ஒவ்வொரு மனுசரும் தனித்தனி தீவாய்... மனுசர் துன்பத்தைக் கண்டு மனுசர் ரசித்துக் கொண்டு...

பம்ப் செட் மோட்டார்களும் டிராக்டர்களும் பெட்ரோல் நாற்றமும் நுழைந்து மண்ணின் ஈரத்தையும் இயல்புகளையும் பறித்துக்கொள்ள... கூட்டு உழைப்பு தேவையற்று, காய்ந்து உலர்ந்து வெடிப்புகள் கண்டு உடைந்து வருகிற கிராமத்து உறவுகள், மனுசத்தனங்களை கீறிப் பிளந்து, உழுதுகொண்டு போகிற யந்திர நாகரீகம், அவரவருக்கு வந்த சிரமங்கள், அவரவர் ஆன்மாவை அழுத்துகிற வன்கொடுமை...

"ம் ம்... பொழுது போகுது... வாங்க... வேலையை பாப்போம்."

துரிதப்படுத்துகிறாள் கிழவி. ஏப்பத்தில் மனசு நிறைய எழுகிறாள், பூவனம். புஞ்சைக்குள் நுழைகிற பெண்களுடன் இவளும், விட்ட நிரையில் குனிகிறாள்.

பாவம் இந்தக் கிழவி! ரெண்டு பொண்டுகளையும் ரெண்டு சிங்கங்களையும் பெற்று வளர்த்து ஆளாக்கி கரையேற்றிவிட்டு, பிள்ளைகளால் கைவிடப்பட்டவள். ஓய்ந்து போன வயசிலும் கூலிக்குப் பாடுபட்டு வயிற்றைக் கழுவிக் கொள்ள வேண்டிய அவலக்கதி.

"பெத்த தாய்க்கு ஏண்டா கஞ்சி ஊத்தலைன்னு தட்டிக்கேட்க ஊர்லே ஒரு நாதியில்லாமல் போச்சே... இந்தக் கொடுமை எங்கையும் உண்டா?" என்ற அங்கலாய்ப்பு கிழவியிடமிருந்து அடிக்கடி பெருமூச்சு களாய் வெளிப்படும்.

பெட்டி பழத்தால் நிரம்பிவிட, அதை தூக்கி வாய்க் காலில் நின்ற சாக்கில் தட்டிவிட்டு, விட்ட இடத்திலிருந்து செடிசெடியாய் பழம் பறித்தாள் பூவனம்.

மனசுக்குள் முத்துப்பயல். என்ன செய்றானோ எங்க அலையுறானோ என்று ஓடித் தவிக்கிற நினைவுகள், பங்குனி மாச வெய்யிலை மறக்கடிக்கிற பாசநீரோட்டம்...

புல்லுக்கட்டோடு வீடுவந்து சேர நாலுமணியாகி விட்டது. திண்ணையெல்லாம் கோழிப்பீ. அடைந்து கிடந்து அடைக்கோழி, புல்லுக்கட்டு விழுந்த சத்தத்தில் அதிர்ந்து போய்... 'கா...ர், கா...ர்' என்று கத்திக்கொண்டு ஓடியது.

பருந்துப் பார்வையாக தெருவெல்லாம் பார்த்தாள். முத்துவைத் தேடியலைகிற மனசு, 'எங்க போய்த் தொலைஞ்சுட்டான்?'

வீட்டைத் திறந்தாள். குப்பையாகிக் கிடந்தது வீடு, பார்க்கச் சகிக்கவில்லை. அலுத்துச் சலித்த உடம்பு,

உஸ்ஸென்று உட்கார ஒரு பொழுதில்லையே என்ற எரிச்சலில் விளக்குமாறை எடுத்தாள். கொஞ்ச நேரத்தில் வீடு வீடாயிற்று.

அவசரமாய் பானையைத் தூக்கிக் கொண்டு குழாய்க்கு ஓடினாள்.

'பொழுதாகுது. உலை வைக்கணும்' துரிதப் படுகிற மனசு, சிறகு கட்டிக்கொண்டு பறந்தது. கடைக்கு ஓடினாள். வீட்டுச் சரக்கு வாங்கிய கையோடு, பிள்ளைகளுக்கும் தின்பண்டம் வாங்கிக் கொண்டாள்.

வாசலில் முத்து உட்கார்ந்திருந்தான்.

பிஞ்சு உடம்பெல்லாம் அப்பிய புழுதி. தூங்கி விழித்தது போல வாடிக் கிடந்த முகம். வழக்கமான வாட்டமல்ல. ஏக்கத்தில் வெம்பிச் சாம்பிப் போன வாட்டம். அந்தக் குருவிக் கண்களில் அடிபட்ட பறவையின் வேதனை. வலி தாளாமல் துடித்து அடங்கிப் போன அயற்சி. வெந்து தணிந்த சாம்பலாய் முகம்.

பூவனத்துக்கு நறுக்கிட்டது. கொத்தப்பட்ட குஞ்சாக துடித்துப் போயிருக்கானே என்று தாயின் உள்மனசு தவித்தது.

முத்துவைக் கூர்ந்து பார்த்தாள். சின்னவயசில் செத்துப்போன அண்ணனின் மறுபதிப்பாய் வயிற்றில் உதித்த முத்து; அதே சாயல்; அதே சுபாவங்கள்.

பொங்கிய மனசோடு ஆவி அணைத்துக் கொண்டாள். நெஞ்சோடு வாரிச் சேர்த்துக் கொண்டு மகனின் முகத்தைக் கையில் ஏந்திப் பார்த்தாள்.

பறவையாடிய அவள் கண்களில் பாசத்தவிப்பு.

“ஏண்டா கண்ணு... ஏஞ்செல்லம், ஏம்பா ஒரு மாதிரியாயிருக்கே? யாரும் ஒன்னை அடிச்சாகளா? நீயார் கூடயாச்சும் சண்டைகிண்டை போட்டியா?”

அழப் போவதைப்போல் விம்முகிற முகம். விடைத்து அடங்குகிற நாசி. சின்ன உதடுகளில் மெல்லிய நடுக்கம். இல்லே என்பது போல தலையசைத்தான்.

இவளுக்கு குலையெல்லாம் கருகி வந்தது.

“பெறகென்னடா... ஏம்பா வாடிப் போயிருக்கே? சொல்லுடா, ஏந்தங்கம்.”

பதைப்பில் வார்த்தை குமுறுகிற அம்மா முகத்தைப் பார்த்தான். சின்னக் கண்கள் அலை மோதுகின்றன. மனசுள் முண்டுகிற உணர்ச்சிகளுக்கு வார்த்தை வடிவம் கொடுக்கத் தெரியாத திகைப்பு. பதறிச் சாகிற அம்மாவிடம் சொல்வதற்கும் தயக்கம்...

வீட்டுக்குள் மகனைக் கூட்டிக் கொண்டு போனாள். பெருமூச்சு வாசலில் மோதியது. புரிபடாத மர்மக் கலக்கத்தில் உழல்கிற தாய் மனசு.

முட்டி மோதுகிற உணர்ச்சிகளின் நெருக்குதலில் திணறிக் கிடக்கிறான். சமனப்பட்ட பிறகு சொல்லுவான். சொல்லட்டும். ‘அது என்னவாக இருக்கும்? எந்தப் பாவிப்பய இந்தப் பூச்செண்டு மனசை நோகடிச்சிருப் பான்? அவன் கையிலே புத்து பெறப்பட’

“இந்தாடா முத்து, தின்னுப்பா” என்று தின்பண்டத்தை நீட்டினாள். ஆவலோடு வாங்கினான். அவசரமாய்ப் பிரித்தான். அவன் எதிர்பார்த்து ஆசைப்பட்ட பூந்தி இல்லை. தினம் தின்கிற காராச்சேவுதான்.

சந்தனக் கலர்லே இருக்கிற பூந்தி... ஒட்டியிருக்கிற சீனி வெள்ளை வெள்ளையாய் மின்னுகிற பூந்தி. பார்த்தாலே எச்சி ஊற வைக்கிற பூந்தி... ராமசாமிப்பய சந்தோசமாய் சத்தமில்லாம தின்னுன அருமையான பூந்தி—

நிமிர்ந்த முத்துவின் கண்ணில் துல்லியமாய் படிந்திருந்த ஏமாற்றம். பூவனத்துக்குள் இருட்டிக் கொண்டு வந்த திகிலான குழப்பம்.

அரி புழுவாய் மனசுக்குள் ஊர்கிற நினைவுகள். சட்டிபானையைக் கழுவி. அடுப்பில் வைத்தாள். நெருப்பை மூட்டினாள். மனசை அரிக்கிற நினைவுகளோடு அரிசியை அரித்து உலையில் போட்டாள்.

முத்து சேவைக் கொறிக்கிற 'கொறுக் கொறுக்' சத்தம்.

உரைப்பெடுத்த நாக்கை உஸ்ஸூ உஸ்ஸூ வென்று தொங்கப் போட்டுக் கொண்டு "அம்மா... தண்ணீ" என்று ஓடிவந்தான்.

தண்ணீரைக் குடித்துவிட்டு, பக்கத்திலேயே குத்துக்கால் வைத்து உட்கார்ந்தான். பசியெடுத்து விட்டால் காலைச் சுற்றிச் சுற்றி வந்து உரசுகிற பூனை ஞாபகத்திற்கு வந்தது.

"என்னடா... விளையாடப் போகலியா?"

இல்லை என்று தலையை மட்டும் ஆட்டினான். அவன் காலில் நெருப்பின் வெளிச்சம்.

"ஏம்பா...?"

"எம்மா, பூந்தி நல்லாயிருக்குமாம்மா?"

சம்பந்தமின்றி அவன் கேட்ட கேள்வியில் திக்கென்றது பூவனத்துக்கு. ஏனிப்படி கேக்குறான்? கூரிய பார்வையை அவென் முகத்தில் நிறுத்தினாள்.

"ஏண்டா அப்படிக் கேக்கே?"

"இல்லேம்மா... பூந்தி இனிச்சுக்கிடக்குமா, உரைச்சுக் கிடக்குமா?"

"இனிப்பா இருக்கும்பா, ஏண்டா கேக்கே?"

பருந்தைப் பார்த்து விட்ட குஞ்சாக மனசு பதறியது அவளுக்கு. எதையோ அவலத்தை எதிர் நோக்குகிற இனம் புரியாத திகில். ஏனோ... செத்துப்போன புருஷனின் இழப்பை எண்ணி மனசுக்குள் கசிவெடுத்தது.

"இல்லேம்மா... அப்பலே ராமசாமி வீட்டுக்குப் போயிருந்தேம்மா... அவன் பூந்தி தின்னுக் கிட்டிருந்தாம்மா... இது என்னதுடான்னு கேட்டேம்மா... அதுக்கு அவன் 'எங்கய்யா பூந்தி வாங்கிட்டு வந்தாரு'ன்னாம்மா.. நா பாத்துக் கிட்டிருந்தேம்மா... அவுக அம்மா வந்தாக. என்னிய ஒரு மாதிரியா பாத்தாக. 'கண்ட கழுதைக கண்ணுபட்டா வவுத்தை வலிக்கும்டா'ன்னு சத்தம் போட்டு அவனை உள்ளே போகச் சொல்லிட்டாகம்மா... 'ஓடு ஓடு... உங்கம்மா உன்னைக் கூப்பிடுறாக'ன்னு என்னைப் போகச் சொல்லிட்டு கதவைப் பூட்டிக் கிட்டாகம்மா... ஏம்மா பூந்தி ரொம்ப இனிச்சுக் கிடக்குமோ...?"

திக்கித் திக்கித் திணறித் திணறி அவன் ரொம்ப நேரமாய்ச் சொல்லிவிட்டு, வெள்ளந்தியாய் அம்மா முகத்தைப் பார்த்தான்.

வயிற்றில், அரிவாள் வெட்டு விழுந்தது போலிருந்தது பூவனத்துக்கு. குடலைப் பிடுங்கி வெளியே போட்டது மாதிரி குலை கொதித்தது. மனசெல்லாம் தீப்பற்றிக் கொண்டது. "அடப்பாதகத்தீ..." வெடித்துப் போன பூவனத்தின் நெஞ்சமெல்லாம் 'தீ' வனமாய் கனன்றது.

அந்தப் பூச்செண்டை அப்படியே அள்ளி மடியில் போட்டுக் கொண்டாள். தலையில் அடித்துக் கொண்டு கதறியழுத அம்மாவை மிரட்சியுடன் பார்த்தான்.

"நாளாயிருந்து செய்றதையெல்லாம் நாழிகையிலே செய்ஞ்சுட்டு போய்ட்டீகளே... ஐயய்யோ... நாம் பெத்த புள்ளைக நாக்குச் செத்து கிடக்குதுகளே... ஒரு நாய்ச் சிறுக்கி வீட்லே ஏங்கி நின்னு வந்திருக்கானே... ஏ ராசா, இந்த நாதியத்த முண்டச்சியை புள்ளைக வாய்க்கு ருசியா வாங்கித் தர வக்கில்லாம வைச்சிட்டீகளே..." என்று வார்த்தைகளும் கதறலுமாய் அவள் அழுத அழுகையில் அரண்டு போய்க் கிடந்தான், முத்து.

தாலியறுத்த சூன்ய வாழ்க்கை— ஒருத்தி உழைப்பில் மூன்று வயிறுகள் கழுவிக் கொள்ள வேண்டிய கஷ்ட நிலைமை— எல்லாம் குப்பென்று நெஞ்சில் பொங்கித் தாக்கியது. நிர்க்கதியாய் நிறுத்தி வைத்து அவளைச் சப்பென்று அறைகிற வாழ்க்கை அவலம்...

பொங்கிப் பிரவகித்து முட்டி மோதிய நெருப்பான நினைவுகள் யாவும் சட்டென்று அந்த மூன்றாம் வீட்டுக்காரி மீது பாய்ந்தது.

"அட, ஈரங்கெட்ட ஈனச்சிறுக்கி! பச்சை மண்ணை பாக்க வைச்சுக்கிட்டு வாய்லே போடணுமா? அஞ்சாறு அள்ளிக் குடுத்தா... ஓங்குடியா முழுகிப் போகும்? ஏங்கி நின்ன புள்ளையை விரட்டியிருக்கீயே... ஒ வாய்லே புத்து பெறப்பட!"

தீப்பிடித்த வனமாய்த் தகித்துப்போய் நின்ற பூவனம் சபித்தாள்.

பக்கத்தில் டிராக்டர் ஓடுகிற சத்தம்.

"அம்மா... டக்கர் பாக்கப் போறேன்" என்று தன்னைப் பிடுங்கிக் கொண்டு தெருவுக்கு ஓடினான் முத்து. அவள் மனசில் திரும்ப திரும்ப அந்தக் காட்சி.

ராமசாமி திங்கறதை எச்சில் வடிய ஏக்கமாய் பார்த்துக் கொண்டிருக்கிற முத்து. அவனைப் போகச் சொல்லிவிட்டு கதவைப் பூட்டுகிற அந்தச் சிறுக்கி...

முந்தியிருந்த வழமையெல்லாம் மாறத்தான் செய்யுதுன்னாலும், பட்டிக்காடு இம்புட்டு மோசமாகவா கெட்டுப் போகணும்? மனசுலே ஈரமில்லாம மனுசத் தன்மையில்லாம... கொடுமை...

நினைக்க நினைக்க மனசு கொதிக்கிறது..

"வீட்லே யாரு?"

வாசலில் வேற்றுச் சத்தம்.

"யாரு... அது?"

"நாந்தான்..."

நாராயணசாமி நாயக்கர் மகன். அவர் புஞ்சைக்குத்தான் வேலைக்குப் போயிருந்தாள்.

"என்னய்யா...?"

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வந்தாள்.

"பூவனம், எங்கய்யா சம்பளம் குடுத்தனுப்பிச் சாரு. இந்தா."

அவளுக்குள் சட்டென்று தலை நீட்டிய யோசனை.

"அய்யா எங்க?"

"திருவேங்கடம் போறாக."

"போய்ட்டாகளா, போகப் போறாகளா?"

அவளின் ஆவல் துடிதுடிப்பை வினோதமாய் பார்த்தான் அவன்.

"இனிமேல் தான் போகப் போறாக."

"இந்தச் சம்பள ரூவாயை அப்படியே கொண்டு போய் அய்யாகிட்டே குடுத்து, 'இதுக்கு பூந்தி வாங்கிக்கிட்டு வரணும்'னு பூவனம் சொன்னாள்னு சொல்லுங்க... சொல்றீகளா?"

'இவளுக்கு எதுக்கு பூந்தி?' கூலிக்காரியிடமிருந்து விரலுக்கு மிஞ்சிய வீக்கமாய் வந்த வார்த்தைகளைக் கேட்டு... குழப்பத்தோடு தலையையாட்டினான்.

"அய்யாகிட்டே சொல்லுங்க... ஞாவகம்... மறந்துராம பூந்தி வாங்கிட்டு வந்துரணும்... பூந்தி..."

பூவனத்தின் சொற்கள் அந்தப் பையனின் முதுகை நோக்கித் தெருவில் துரத்திக்கொண்டு ஓடியது.

**வி**டிந்தது.

நாய்க்கர் வாங்கிக் கொடுத்தனுப்பியிருந்த பொட்டலம், எறும்பு அரிக்காமலிருப்பதற்காக தண்ணீர் பானையின் மேல் இருந்தது.

எடுத்துப் பிரித்தாள். ஒரு கிண்ணத்தில் போட்டு முத்துவிடம் கொடுத்தாள்.

"ஹைய்... ய்யா! பூந்தி!" சந்தோஷத்தில் விரிந்த அந்தச் சின்ன முகமலர். கண்களில் துள்ளிய மின்னல். வாழ்க்கையைக் கண்டடைந்த அதிசயமாய் குதூகலத்தில் குதித்தான். அதைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போய்

இவளுள் ததும்பிய ஆனந்தக் கண்ணீர்... பூவனத்தின் மனசுக்குள் ஜில்லென்று பூத்துக் குலுங்குகிற பூவனங்கள்...

"தின்னுடா... ஏங் கண்ணு... ஏஞ்செல்லம்.... தின்னுப்பா."

ராஜிக்கும் கொஞ்சம் அள்ளிக் கையில் தந்தாள்.

இன்னொரு சின்னக் கிண்ணத்தில் கொஞ்சம் அள்ளிப் போட்டுக் கொண்டு முத்துவை கையில் பிடித்துக்கொண்டு மூன்றாம் வீட்டுக்குள் நுழைந்தாள் பூவனம். மனசைப் பிறாண்டிய நினைவை உலுக்கிக் கொண்டாள்.

"யாரு, பூவனம் மயினியா?"

"ஆமா, மருமகனை எங்கே?"

"ராமசாமியை கேக்கீகளா? என்ன மயினி?"

"இந்தா... கொஞ்சம் பூந்தி..."

சோளத் தோசையை வீடு வீடாக சுமந்து கொடுத்த சிறுமிக் காலம் மனசுக்குள் நிழலாடியது, பூவனத்துக்கு. இவர்கள் வீட்டிற்கும் வந்து நிறைந்த தோசைகள்...

"இதெதுக்கு மயினி? நீங்க புள்ளைக்கு குடுங்க."

"இருக்கட்டும். இத தின்னு வவுறா நெறையப் போவுது? ஏதோ ஆசைப்பண்டம். ஒம்புள்ளையும் சின்னப் புள்ளைதானே... வந்தாக் குடு."

சகஜமாய் இருப்பது போல சிரித்துக்கொண்டே வாங்கிக் கொண்டவளின் கண்ணுக்குள் அலை பாய்கிற விழிகள். முள்ளாக உறுத்துகிற குற்ற உணர்வின் அழுத்தம் தாளாமல் முகத்தில் தோன்றி மறைகிற இருட்டு. பெருந்தன்மைப் பெரு வெளிச்சத்தை எதிர் கொண்டு பார்க்க முடியாமல் கூசிப் போய் இடுங்கிக் கொள்கிற கண்கள்...

தெருவில் இறங்கிய பூவனத்தின் மனசில் ஒரு நிறைவு. அற்பத் தனமில்லாத மனுசக் காற்று மனசெல்லாம் பாய்ந்து பரவி நிறைந்துக்கொண்ட மாதிரியிருந்தது.

முத்து புரியாமல் கேட்டான்:

"ராமசாமி வீட்லே எதுக்கும்மா பூந்தி குடுத்தே?"

"ஏண்டா... அவனும் ஒன்னைப்போல சின்னவன் தானே."

"அவுக எனக்குக் குடுக்கலியே... நாம மட்டும் எதுக்காக குடுக்கணும்?"

"நாய் நம்மளைக் கடிச்சிட்டா... நாமளும் திரும்பி நாயை கடிக்கலாமாடா? நாம நம்ம ஈரத்தை—வழமையை எதுக்காக மாத்திக்கணும்?"

அவனுக்குப் புரியவில்லை. அவள் திருப்தியோடு வீட்டுக்குள் நுழைந்தாள். அவள் காலடியில் மிதிபட்டு வாசல் படியில் கிடந்தது, யந்திர நாகரீகம்.

***கதை அரங்கம், 1989***

◆ ◆ ◆

8

# ஜீரணம்

ஓய்ந்து போன போர்க்களத்தில் ஓரமாக ஒதுங்கிக் கிடக்கிற ஓர் உணர்வு அன்னமாறனுக்கு. கண்ணைச் சொக்கிக் கொண்டு வருகிற உறக்கம். அடித்துப் போட்ட மாதிரி உடம்பு முழுக்க அசதி. ஒரு வாரமாக ஓய்வில்லாத அலைச்சல். பேய்த்தனமான அலைச்சல்.

ஒரு கல்யாணம் நடந்து முடிந்த இன்பக் களைப்பில் துவண்டு கிடக்கிற வீடு. பட்டு வேட்டிக்கு மேல் முண்டா பனியன்... விரலில் புதிய மோதிர ஸ்பரிசம். அழுத்துகிறது. பந்தலுக்கடியில் சும்மா கிடந்த பெஞ்சில் கட்டையை நீட்டி நிமிர்த்தினான்.

உடன் பணியாற்றுகிற சிமிண்ட்டாலைத் தொழிலாளர் களும் தொழிற்சங்கத் தோழர்களும் இந்நேரம் வரைக்கும் சுற்றிநின்று கோட்டா பண்ணிக் கும்மியடித்துவிட்டு, இப்போதுதான் போய்த் தொலைந்திருக்கிறார்கள்.

வெளியூர் சொந்தக்காரரர்கள் மொய் செய்து விட்ட திருப்தியில் பந்திச் சாப்பாட்டு ஏப்பத்தோடு மதிய பஸ்ஸில் போய் விட்டார்கள். மிச்சமிருக்கிற நாலைந்து பேரும் மூன்று மணி வண்டிக்குப் போய் விடுவார்கள்.

கல்யாணத்துக்காகப் போட்ட வேஷம் இன்னும் கலையாமல் வீடு. வெறிச்சோடிக் கிடக்கிற பந்தல். காற்றின்

தீண்டலில் கிளுகிளுக்கிற மாவிலைத் தோரணங்கள்... பந்தல் முகப்பில் நடப்பட்ட வாழை மரங்கள்... இரு மரங்களின் தார்களும் மணமக்களைப் போல ஒன்றுடன் ஒன்றாகப் பின்னிப் பிணைந்து...

நீளம் நீளமாகக் கிடக்கிற வெறும் பெஞ்சுகள்... அப்படியப்படியே கிடக்கிற நாற்காலிகள்.

இன்னும் காதுக்குள் இரைகிற மைக் செட்டின் ஓங்கார இரைச்சல்... கொட்டு மேளத்தின் மத்தள அதிர்வுகள்... மதியம் வரைக்கும் வீடும் பந்தலும் 'ஜே ஜே' என்று ததும்பி வழிந்த ஜனக்கூட்டம். சிறுவர் பட்டாளத்தின் ஓட்டமும் கும்மாளமும்... குழந்தைகளின் கூச்சல்கள்... தளும்பித் தத்தளித்த மனிதச் சந்தடி... ஒருத்தர் மூச்சு ஒருத்தர் மூஞ்சியில்! அத்தனை கூட்டம்.

இப்போது—

வெள்ளம் வடிந்த ஆற்று மணலின் வெறுமை. சந்தடிச் சுவடுகளை மனசுள் பிரம்மாண்டப் படுத்துகிற சூன்யம்.

அந்நிய வீட்டில் ஒற்றை மனிதனாக... இவன் மட்டும். அம்மா அய்யா மற்றும் சொந்த வீட்டு உறவினர்கள் எல்லோரும் மணமகளுடன் மறுவீடு செல்கிற சடங்கின்போது, வேனில் ஏறி நாற்பது கிலோ மீட்டர் தள்ளியிருக்கிற ஊரில் இறங்கிக் கொண்டனர். மணமகள் உறவினர்களுடன் இவன் மட்டும் தனித்து விடப்பட்டான்.

சுள்ளென்று சுடுகிற தனிமை உணர்வு. அந்தத் தனிமை உணர்வை விழுங்கி ஜீரணம் செய்கிற பெருமிதம். தான் செய்திருக்கிற பெரிய காரியம், சாதித்திருக்கிற விஷயம் சாதாரணமானதல்ல. பெரிய புரட்சிதான். தலைகீழ் மாற்றம்தான். சமகாலச் சமூகப் பழமைப் பாதையில் மனுஷத் தனமான புதிய பயணம். மனசறிந்து செய்த

காரியம்... ஈரப் பெருந்தன்மையோடு, விசால மனதோடு செய்திருக்கிற மகத்தான சாதனை. இதற்காக, குடும்பத்து ஆட்களோடு ரொம்ப ரொம்பப் போராட வேண்டியிருந்தது. பேராட்ட ரணத்தை மறக்கடிக்கக்கூடிய மகிழ்ச்சி... இப்போது.

மணப்பெண் திலகம் ஞாபகத்துக்குள் வந்தாள். தாலி கட்டுகிறபோதுகூட அவள் முகத்தில் அப்பியிருந்த பயம். பாய்ந்து வரும் அம்பைக் கண்ட மானின் பயம். ஜனக்கூட்டத்தின் பார்வையில், அந்நிய ஆடவன் பக்கத்தில் உட்கார்கிற லஜ்ஜையைத் தாண்டிய ஓர் உள்பயம். நிர்ப்பந்திக்கப்பட்டு நெருப்புக்குள் இறங்குகிற ஒரு பெண்ணின் பயம்.

அந்த உறக்கச்சடவிலும் அன்னமாறன் சிரித்துக் கொண்டான். 'பயம் தெளிஞ்சிரும். இன்னிக்கு ராத்திரிக் குப் போடுற மந்திரத்துலே பயம் எல்லாம் பயந்தோடிரும்.'

மரபெஞ்சில் படுத்திருந்தவனுக்குப் பின்னந்தலை வலித்தது. கையை மடித்து தலைக்குக் கீழே தலையணை யாக்கிக் கொண்டான்.

வீட்டுக்கு வந்த புது மருமகன் நாதியற்றவனைப் போல் வெளியில் பெஞ்சில் படுத்திருக்கலாமா? உள்ளிருந்து மாறி மாறி வருகிற அழைப்புகள், பையன்கள் மூலமாக... "உள்ளே வருவீகளாம்... பாட்டி சொன்னாக."

கடைசியில், திலகத்தின் அம்மாவே வந்து விட்டார்கள். ஒரு மரியாதைக்காக எழுந்தான்.

"என்ன... இங்ஙன படுத்துட்டீக?"

"சும்மாதான். காத்தாட படுத்திருக்கேன்."

"உள்ளே போய்க் கட்டில்லே படுங்க."

"இல்லே... ரொம்பக் களைப்பாயிருக்கு. சித்தே இங்கன படுத்துருக்கேன். யாரும் உசுப்ப வேண்டாம்."

"ம்."

"பொழுதடைய உசுப்பிவிட்டுருங்க."

உள்ளிருந்து தலையணையும் விரிப்பும் வந்தன. விரித்து வசதியாகப் படுத்துக் கொண்டான். நீட்டி நிமிர்ந்து நெட்டி முறித்தபோது... உள்ளுக்குள் எல்லா எலும்பு மூட்டுகளும் நெறுநெறுத்தன. உடம்புக்கே ஒரு சுகமாக இருந்தது. இமைகளை அழுந்த மூடியபோது, மனசுக்குள் ராசசேகரன்.

'அந்த ராஸ்கல், கல்யாணத்துக்கே வரலியே... இருக்கட்டும்.'

வேறு ஜாதிக்காரன்தான். ஆனால், உயிர் நண்பன். மனசுக்குள் நெருக்கமானவன். சகல அந்தரங்கங்களையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு நம்பகமானவன். ஒன்பதாம் வகுப்பு வரை ஒன்றாகவே படித்த நட்பு, இப்போதும் வளர்ந்த வண்ணமாகவே...

பக்கத்தூரில் பள்ளி ஆசிரியர்... தொடக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர். அந்த ஊரிலேயே கல்யாணமாகி அங்கேயே செட்டில் ஆகிவிட்டான். இன்விடேஷன் கொடுக்கப்போனபோது, வீட்டில் ஆளைப் பார்க்க முடியவில்லை. பள்ளிக்குத்தான் போகவேண்டியிருந்தது. அங்கேயும் ஆற அமரப் பேச நேரமில்லை.

"கட்டாயம் வந்துருவேண்டா."

"ரெண்டு நாளைக்கு முன்னாடியே வர முடியுமாடா?"

"நியாயமா பாத்தா வரணும். ஆனா, மன்னிச்சிரு."

"ஏண்டா?"

“ஸ்கூல்லே ஏகப்பட்ட ப்ராப்ளம். கரஸ் பாண்டட் வேற புதுப்புதுச் சட்டம் போடுறாரு. பயங்கர நெருக்கடி.”

“அப்படியா?”

“எது எப்படியிருந்தாலும் கல்யாணத்துக்கு ‘டாண்’னு வந்து நிப்பேன். அது மட்டும் நிச்சயம்.”

வந்து நிற்கவில்லை... பயல் ஏமாற்றி விட்டான். அவனுக்கு என்ன ப்ராப்ளமோ...

நஞ்சடித்த கெண்டை மீனாகச் சொக்கிப் போய், அப்படியே உறங்கிவிட்டான் அன்னமாறன்.

சாயங்காலம்... புது மாப்பிள்ளை உபசாரம்... வடை, பணியாரம், பழம், பால் என்று ஏகத்தடபுடல். திலகம் தான் இவனுக்குப் பரிமாறினாள். ஆனால், இயல்பாக வரவில்லை. முகத்தில் உயிர்க்களையேயில்லை. ‘போ... போ’ என்று தள்ளப்பட்டே வருகிறாள்.

“போய் வடையைக் குடு...”

“பணியாரம் வேணுமான்னு கேளு.”

“தண்ணி மோந்து வை.”

நிர்ப்பந்தமாகப் பொம்மைச் சலனமாய் வந்து போனாள். அன்னமாறனுக்குள் அதே மென்சிரிப்பு. சகலமும் புரிந்த மனநிலையில் முதிர்ந்த மலர்ச் சிரிப்பு.

உள்ளறையை ஒதுக்கியிருந்தார்கள். சாமான் சட்டுகளை யெல்லாம் ஒதுக்கி புதுப்பாய், புதுத்தலையணை, புது ஜமுக்காளம். பக்கத்தில் டேபிள் ஃபேன்.

பாயில் உட்கார்ந்திருந்த அன்னமாறனுக்குள் நமைச்சல்... சிகரெட் பிடிக்கவேண்டும் போல உள்தவிப்பு. காலையி லிருந்தே சிகரெட்டைத் தொடாமலிருப்பதில் பெரும்

மனஉளைச்சல். சிகரெட் புகை வாடை அவளுக்கு ஒவ்வுமோ... ஒவ்வாதோ... பார்க்கலாம்.

பெண்களின் கிசுகிசுப்பான கண்டிப்புச் சத்தங்கள். அதைத் தொடர்ந்து உள்ளே வருகிற திலகம். ரொம்ப மிரள்கிறாள். கண்களில் பேயைக் கண்ட கிலி... திகில்... உதட்டின் மேலும், நாடியிலும் வியர்வைத் துளிகள்.

"உட்கார்."

ரொம்பத் தயக்கமாக உட்கார்ந்தாள். சற்றுத் தள்ளி ஒதுங்கி உள்ளுக்குள் ஒடுங்கி...

"திலகம்."

"............."

"ஏய்ய்... திலகம்"

".....ம்....."

"என்னைப் பிடிக்கலியா?"

"திலகம்."

".............."

"இந்தா..."

".............."

அன்னமாறனுக்குள் பொறுமையின் சிதைவு. சலிப்பு தட்டியது.

இவன் காட்டியிருக்கிற பெருந்தன்மைக்கு அவள் ஆராதனையே செய்யலாம். வேண்டாம்... நன்றிகூட வேண்டாம். இயல்பாகவுமா இருக்கக்கூடாது? ச்சே!

இப்படியோர் மவுனமா? பாறைத்தனமாகவா? அடம்பிடிக்கிற இறுக்கமா? பயம்தான். அர்த்தமற்ற பயம்தான். பயத்தில் இந்த ஆழத்துக்குப் புதைய வேண்டுமா?

"ஏன், என்னைப் பார்த்து இப்படி மிரள்றே?"

"ம்."

"நான் என்ன பேயா... பிசாசா?"

இன்னும் அவள் நிமிரவேயில்லை. இவன் முகத்தைப் பார்க்கவேயில்லை. குத்துக்காலாக மடக்கி உட்கார்ந்து, முழங்கால் மேல் முகம் புதைத்து... அவள்.

சலிப்பின் விளிம்பில் தலைகாட்டுகிற எரிச்சல். சிடுசிடுப்பு... சுருசுருவென்று வருகிற கோபம். இப்படிப்பட்ட நேரத்தில் சிகரெட் ரொம்ப தேவைப்படும். பல்லைக் கடித்துக்கொண்டு சமாளித்தான். அவள் தலையைப் பார்த்தான்.

அலங்காரம். எண்ணெய்க் கூந்தலின் மின்னல்... வெள்ளிச் சிரிப்பாக விரித்த மல்லிகைக் கொத்து, உடுத்தியிக்கிற பட்டுச் சேலைக்கு மேட்ச்சான ஜாக்கெட், ஜாக்கெட்டின் தோள் பகுதி அதிர்கிற மாதிரியான தோற்றம். சடைப் பின்னலோடு சேர்ந்து முதுகின் குலுங்கல். அடக்கமுடியாத விசும்பலின் வெடிப்போசை.. அழுகிறாளா...

இவனது கோபம் சட்டென்று பதற்றமாக நிறம் மாற... மறுபடியும் அவன் அவனானான். மிருதுவான மனநிலைக்கு வந்தான்.

"என்னாச்சு... ஏய்."

"எனக்குப் பிடிக்கலே..." கிணற்றுக்குள் சத்தமாக வந்த அவள் குரல்.

"என்னையா?"

"கல்யாணத்தை."

"பெறகு... ஏன் சம்மதிச்சே?"

"யாருகிட்டே யாரு சம்மதம் கேட்டாக? ஆளும் பேருமா சேர்ந்து என்னைக் கொன்னுப் போட்டாக."

"மகளை வாழவெச்சுப் பார்க்கணும்ங்கிற நியாயமான ஆசை அவுகளுக்கு. அது கொலையா?"

"வெறுங்கழுதைக்கு என்ன வேண்டிக் கிடக்குது வாழ்க்கை?"

"நீயா... வெறுங்கழுதை?"

"யோகங்கெட்ட கழுதை."

அவளுள் கிடந்து அழுத்திய முடிச்சு வெளிவந்து விட்டது. சுதந்திரமாக அழுதாள், வெளிப்படையான விசும்பலும் முதுகுக் குலுங்கலுமாக.

"திலகம், ஊர் உலகத்துக்குப் பயப்படுறே. உன்னைப் பத்தி நெனைக்க மாட்டேங்குறே. நீயாவே ஏதேதோ நெனைச்சுக்கிட்டு, உன்னோட எதிர்காலத்தையே புண்ணாக்கிக்கிடுறே..."

"இதை யாராச்சும் ஒத்துக்கிடுவாகளா?"

"வெட்டுப்பட்ட மரக்கன்னு அப்படியே பட்டுப் போறதில்லே. மறுபடியும் தளுக்குது. வளருது... பூப்பூத்துக் காய் காய்த்து... புது விதைகள் தருது. அதுதான் இயற்கை. இதை ஒப்புக்கிடாத மூடங்களை மனுசங்கன்னு ஒப்புக்கக்கூடாது."

இப்போதுதான் முதன் முதலாக நிமிர்ந்து இவனைப் பார்க்கிறாள். பார்வையில் எல்லையற்ற சோகம். மனசைக்

குழைத்துப் பாகாய்க் கரையவைக்கிற துயரம். அடிபட்டுச் சாகக் கிடக்கிற குருவியின் ரணம்.

டேபிள் ஃபேனின் காற்றில் அசைகிற முடிக்கற்றை முகத்தின் குறுக்காக ஆடுகிறது. முழங்கால் மேல் மடித்துக் கிடந்த கைகளில் நாடி பதிந்திருந்த அடையாளம்.

"எங்க அய்யா அம்மா உங்ககிட்டே என்னைப் பத்தின எல்லா உண்மைகளையும் சொன்னாகளா?"

"சொன்னாக... சொல்ல வேண்டியதைச் சொல்லலை... ஆனா, எனக்குத் தெரியும்."

"என்ன தெரியும்?"

"எல்லாமே."

"என்னைப் பத்தி முழுசாத் தெரியுமா?"

'முழுசா' என்பதில் அவள் தந்த அழுத்தம். அதில் தெரிந்த அவளது வெள்ளை மனம். மூடுமந்திரமற்ற கபடமற்ற நல்ல குணம். இவனுக்குள் அவளது வேர்கள், அழுத்தமாக.

"முழுசாகவே தெரியும்."

"தெரிஞ்சுமா... சம்மதிக்சீக?"

"எங்க வீட்டு ஆளுகளையும் சம்மதிக்க வெச்சேன்."

"எம்மேலே எரக்கப்பட்டா? 'ஐயோ பாவம்' னு பரிதாபப்பட்டா?"

"இல்லே... நிச்சயமா அப்படியில்லே. நான் மனுசத்தன்மையுள்ள மனுசன்தான்னு நானே நம்ப வேண்டாமா? எனக்கு நானே நிரூபிச்சுக்க வேண்டாமா? அதுக்காகத்தான்."

பார்த்துக் கொண்டிருந்த அவள் கண்களில் ஓர் இமைத் தட்டல்... மலர்ச்சி... புதிய உலகத்தைத் தொட்டுணர்ந்து கொண்ட மழலையின் மலர்ச்சி. விரித்த விழிகளில் படர்கிற ஈரத்திரை. நனைந்த இமை ரோமங்களில் சொட்டடிக்கிற மனத்துளி.

இவனை, இவனது விசால மனசை, மனசின் மிருது வான இயல்பைப் புரிந்துகொண்ட மனநிலையின் வெளிச்சம். அவள் முகமெல்லாம் ஒரு பரவசமும் தவிப்பும்... துடித்து அதிரும் உதடுகள்.... ததும்பல்... பொங்கி வழிய பாதை தேடி அலைபாய்கிற மனத் தளும்பல்.

இவன் கனிந்த புன்னகையோடு தோளில் கைவைத்து அழுத்தினான். மடைதிறந்த வேகத்தில் பாய்ந்து சரிந்தாள்... மடியில் விழாமல், அவன் பாதங்களில்.

அவன் பாதங்களில் அவளது ஆத்மக் கசிவின் ஈரச்சிலிர்ப்பு.

மறுநாளுக்கு மறுநாள்... திலகம் றெக்கை கட்டிக் கொண்டு பறந்தாள். புகுந்த வீட்டுக்கு இன்று போக வேண்டும். அந்தப் பயணத்துக்கான மும்முரத்தில் இருந்தபோது, வெளியே நின்றான் அன்னமாறன்.

ராசசேகரன் வந்து சேர்ந்தான். அவனோடு சண்டை போட்டான் அன்னமாறன். காலில் விழாத குறையாக கெஞ்சி மன்னிப்பு கேட்டான் ராசசேகரன். ஆஸ்திரேலியா விலிருந்து ஐந்து வெள்ளைக்காரச்சிகள் பள்ளிக்கு ஆராய்ச்சிக்கு வந்து விட்டனராம். அவர்களை உபசரிக்கிற பொறுப்பை இவன் தலையில் போட்டுவிட்டாராம் கரஸ்பான்டண்ட்.

"சரி, சரி... வா வீட்டுக்குள்ளே... இன்னும் நீ திலகத்தைப் பார்க்கலேல்லே?"

"யாரு பொண்ணுங்குறதைக்கூட விசாரிக்கலை. இன்விடேஷன் குடுக்க வந்தன்னைக்குக்கூட நின்னு நிதானமா பேச முடியலை."

உள்ளே வந்து உட்கார்ந்தனர். திலகம் காபியோடு வந்தாள். அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்த ராசசேகரனுக்கு முகம் செத்துப் போய்விட்டது.

இவன் செய்து வைத்த அறிமுகத்தை அவன் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. உணர்ச்சி யெல்லாம் வற்றிப்போனவனைப் போல அதிர்வோடு அன்னமாறனைப் பார்த்தான். பார்வையில் ஒரு பரிதாபம். 'அடப்பாவி... நாசமாயிட்டீயே...' என்கிற பச்சாதாபம்.

சட்டென்று வெளியேறினான் ராசசேகரன்.

"இங்க வாடா."

வேறு வழியில்லை. ஆட்டுக்குட்டியாகப் பின் தொடர்ந்து வெளியே வந்தான் அன்னமாறன். ராசசேகரன் கொதித்துப் போயிருந்தான்.

"என்னடா... இதான் பொண்ணா?"

"ஆமா?"

"படுபாவி... ஏமாந்துட்டீயேடா... நல்லா விசாரிக்கலியா?"

"ஏண்டா?"

"இவளைப் பத்தித் தெரியுமா?"

"தெரியும்."

"என்ன தெரியும் உனக்கு?"

"இவளுக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆனது, ஒரு மாசம் அவனோட வாழ்ந்துட்டுப் பிடிக்காம வீடு வந்தது, அப்புறம்

அவன் மருந்தைக் குடிச்சு செத்தது, இவள் ஒரு விதவைங்குறது எல்லாமே தெரியும்."

"தெரிஞ்சுமா செஞ்சே? அறுத்துக் கட்டிக்கிற ஜாதியு மில்லியேடா நீ. ஒஞ்சாதிக்காரங்க ஒன்னை ரொம்ப இழிவாய்ப் பேசுவாங்களே..."

"இதை இழிவா நினைக்குறவன் மனுசனேயில்லை... கேவலமான மனுசப் பிறவிகளைப் பொருட்படுத்த வேண்டியதுல்லே."

"எனக்கே டைஜஸ்ட்டாக மாட்டேங்குதுடா."

"இப்பவும் நம்ம நாட்டுலே... பின் தங்குன மக்கள்கிட்டே அறுத்துக் கட்டுகிற (விவாகரத்து—மறுமணம்) பழக்கம் இருக்கா... இல்லியா?"

"இருக்கு!"

"பெரிய ஹை—சொஸைட்டிலேயும் டைவர்ஸும், விதவை வேற கல்யாணம் பண்ணிக்குறதும் சாதாரணமா நடக்குதா, இல்லியா?"

"நடக்கு."

"அப்புறம்... நாம மட்டும் ஏண்டா மாற்ற மில்லாம பிற்போக்குத்தனமா இருக்கணும்? அது அசட்டுத்தனம் இல்லியா?"

"நம்மகிட்டே தானே ஜாதி ரொம்ப வலுவா வேர் விட்டுருக்கு... ஜாதியைத் தாண்டி நம்மாலே எதுவும் செய்ய முடியலியே..."

"ஜாதி... மதம்... தர்மம் எதுவா வேணுமினாலும் இருக்கட்டும்டா... அதெல்லாம் மனுசங்க வளர்ச்சிக்குப் பயன்பட்டாத்தான் அதுக்கு மதிப்பு. மனுச வளர்ச்சிக்குத்

தடையாயிட்டா அது விலங்கு. அதை ஒடைச்சிரணும். நம்ம நட்பு, ஜாதியைப் பொருட்படுத்தியிருக்கா...? அப்படித் தான்."

"ம்... அப்பஙெ்குறே?"

"டேய்... ஒருத்தனுக்குத் தலையெழுத்து சரியில்லாம சின்ன வயசுலே போய்ச் சேர்ந்தா அதுக்காக இன்னொரு சின்னப் பொண்ணோட ஆயுசு பூராவையும் சூன்யமும் கொடுமையுமாகத் தண்டிக்குறது என்னடா தர்மம்? இதைவிட மோசமான பாவம் வேற ஒண்ணு உண்டா?"

"ஆனா... நீ பெரிய துணிச்சல்காரன் தாண்டா..."

"ஒரு இழவுமில்லே... இதுலே என்னடா துணிச்சல் இருக்கு? கற்புங்குறது உடல் சம்பந்தப்பட்டதுல்லே... மனம், குணம் சம்பந்தப்பட்டதுன்னு புரிஞ்சுக்கிட்டா, இது ரொம்பச் சாதாரணமான காரியம் தாண்டா."

"அப்ப சரி... வரட்டா?"

"படுவா... பல்லை ஒடைச்சிருவேண்டா... சாப்புடாமப் போயிருவீயோ?"

"டேய்... ஆளை விடு."

"ராசா, நான் செய்த காரியம் உனக்கு டைஜஸ்ட் ஆயிருச்சுன்னா உள்ளே வந்து சாப்பிட்டுட்டுப் போ... ஜீரணமாகலேன்னா... இப்படியே ஓடிப் போயிரு."

"சரி வாடா... சோத்தைப் போடச் சொல்லு."

அன்னமாறனை இழுத்துக் கொண்டு ராசசேகரன் வீட்டுக்குள் நுழைகிறபோது...

அவன் மனசுக்குள்...

*'கல்லை வறுத்து சிமிண்ட்டாக்குற தொழிலாளி... முத்துன கலியையே முழுங்கி ஜீரணம் பண்ணிட்டானே... முன்னாடி நடந்து புதுத் தடமே போடுறானே...' என்று நண்பனைக் குறித்த பெருமித உணர்வு ததும்பியது.*

***ஆனந்தவிகடன், 2.10.1994***

◆ ◆ ◆

9

# கிடங்கு

**டா**ய், எவண்டா இது? எம்மேலே மோதிட்டுப் போறவன். ஏண்டா, கண்ணு இல்லியா? அவிஞ்சு போச்சா? தோள்பட்டையிலே இடிச்சுட்டு, சுரணையில்லாத எருமை மாடு மாதிரி போறியே... ராஸ்கல்!

நீயும் குடிச்சிட்டியா? சரக்கை உள்ளே தள்ளுனவுடனே... கண்ணு மண்ணு தெரியலியோ. திமிருடா, உங்களுக்கெல்லாம் திமிரு.

நானும் போட்டுருக்கண்டா, சரக்கை உள்ளே ஏத்தியிருக்கேன். ஏதாச்சும் வம்பு தும்பு பண்றேனா? தப்பு தண்டா பண்றேனா? இல்லேடா...

ஸ்டெடி, ஃபுல் ஸ்டெடி, ஊனி வைச்ச கம்பு மாதிரி ஸ்டெடியா நிக்கென். யார் மேலேயாச்சும் போய் இடிக்கவா செய்றேன்? இல்லேடா...

அடச் சீ! டேய் சைக்கிள்காரா, என்னடா ஆள்மேலே மோதப் பாக்குறே? நீயும், உன்னோட ஓட்டைச் சைக்கிளும்! அடிச்சேன்னா... சைக்கிளும் நீயும் சாம்பாராயிருவீகடா... ஜாக்கிரதை.

அய்யய்யோ... எங்கடா போச்சு, ஏஞ்செருப்பு, சோத்தங்கால் செருப்பைக் காணோமே... என்னாச்சு? தொலைஞ்சு போச்சா, யாரும் எடுத்துக்கிட்டானா?

எவண்டா எடுத்தது? எடுத்த பய எவனாயிருந்தாலும் சரி, மரியாதையா குடுத்துருங்க. குடுக்கலேன்னா... சரிப்பட்டுவராதுடா. கொன்னுருவேண்டா, கொன்னு. தலையை கிள்ளி எடுத்துருவேண்டா. உங்காத்தாளுக்கு கொள்ளி வைக்க புள்ள இல்லாம ஆக்கிருவேண்டா... சொல்லமாட்டேண்டா. சொன்னா, செய்யாம விடமாட்டேன். வம்புச் சண்டைக்கு வரமாட்டேண்டா... வந்த சண்டையை விடவும் மாட்டேண்டா.

குடிகாரம் பேச்சு, விடிஞ்சா போச்சுன்னு அலட்சியமா நெனைக்காதீகடா. நா ராத்திரிலேயும் குடிப்பேன். பகல்லேயும் குடிப்பேண்டா, விடிஞ்சாலும் குடிப்பேன், பொழுது அடைஞ்சாலும் குடிப்பேன்டா...

அடேய்... பசங்களா, செருப்பை குடுத்துருங்கடா. நல்ல செருப்புடா, வேற செருப்பு ஏங்கிட்டே இல்லேடா. இருப்பத்திரெண்டு ரூவாய்க்கு வாங்குன ரப்பர் செருப்புடா. குடுங்கடா.

செருப்பு இல்லாம என்னாலே நாலு எட்டுகூட வைக்க முடியாதுடா. கால் பூராவும் ஆணி ஆணியா இருக்குடா. கரண் கரணா இருக்குடா. புண்ணியமா போகுது. குடுத்துருங்கடா.

டேய் ஆட்டோ, இடிக்க வர்ற மாதிரி ஒரசிக் கிட்டு போறீயேடா... பாவி, அடிச்சுத் தள்ளிட்டுப் போயிடாதீங் கடா, ரோட்டுலே மனுசனை நடக்க விட மாட்டேங் குறீங்களே, 'டுர்ர்ரு, டுர்ர்ரு'ன்னு என்னத்தையாச்சும் ஓட்டிக் கிட்டே வாரீங்களடா...

மனுசனை மதிச்சு வெலகிப் போங்கடா வேலைமெனக் கிட்ட பசங்களா!

என்னடா சின்னப்பசங்களா, சுத்தி சுத்தி என்னை வேடிக்கை பாக்கீக. கூடிகூடி நின்னு பாக்கீக. எதுக்குடா? ஏண்டா? குடிச்சிட்டு ரோட்லே ஆடுறேன்னு பாக்கிகளா?

ஆமா, குடிச்சிருக்கேண்டா, மூக்குமுட்ட குடிச் சிருக்கேண்டா.

நா பிராந்தி குடிக்கேன். குடிக்கக் கிடைக்குது. தெருவுக்கு தெரு ஒயின்ஷாப் இருக்கு. கலர் கலராய் லைட்டை போட்டுக்கிட்டு, கவர்ச்சியா கூப்புடுறாங்க.

உக்காந்து குடிக்க இடம் குடுக்காங்க. மனுசனை மதிச்சு மரியாதை பண்றாங்க. மனசுகிடந்து குளிர்ந்து போகுது. எப்படி குடிக்காம இருக்க முடியும்?

குடிச்சாத்தானே, மனுசன் கெத்தா இருக்க முடியுதுடா. குடிக்காம, ஒழுக்கமா இருந்து, ரிக்ஷா இழுத்துப் பிழைக்கிறவனை யாரு மதிக்காக? எவன் மதிக்கான்? மனுசனை மனுசனா எவன் நினைக்கான்?

குடிச்சிருக்கிறவனைக் கண்டா... ஊரு ஒலகம் பயப்படுது. ஒதுங்கிப்போகுது. வம்புபண்ணாம வெலகிப் போகுது. ஏளனப்பேச்சு பேசாம, வாயைப் பொத்திக்கிட்டு போகுது.

குடிக்காம இருக்குறப்ப... ஊரு ஒலகத்தைப் பாத்து எனக்குப் பயமாயிருக்கு. வாழ்க்கையை நெனைச்சா... குலை நடுங்குது. குடும்பத்தைப் பத்தி யோசிச்சா... மனசு கிடந்து நடுங்கிச் சாகுது. மனுசமக்களைப் பாத்தாலே, என்னமோ மிருகங்களை பாத்த மாதிரி அடிவயிறு கலங்குது.

குடிச்சிட்டா... அந்தத் தொல்லையேயில்லே, சள்ளைபிடிச்ச அந்த நெனைப்பே இல்லாமப் போயிருது. போதை ஏற ஏற... மனசுலே பயம் அத்துப் போகுது.

அதைவிட முக்கியம் என்ன தெரியுமா?

நா அறிஞ்சும் அறியாம செய்யறச் சின்னச் சின்ன தப்புகளுக்கெல்லாம் மன்னிப்பு வாங்கிக் குடுக்குறது இந்தப் போதைதான்...

'அட, விட்டுத்தள்ளு! ஏதோ போதையிலே செஞ்சுட்டான்'ன்னு தண்டனையிலேயிருந்து காப்பாத்தி விட்டுரும்.

அதையும் விட முக்கியமானது, ஒன்னு இருக்கு. மனுசனை மனுசனா மதிக்காம, தும்பப்படுத்துற இந்த மனுசஜெம்மங்களை பயமுறுத்த முடியுதே... வெரட்ட முடியுதே... இது ரொம்ப ரொம்ப முக்கியமான விஷயம் இல்லியா?

என்னாங்கடா, ஒரு தினுசா பாக்குறீக? எரிச்சலா பாக்குறீக. நடுரோட்லே குடிச்சிட்டு கலாட்டா பண்றானேன்னு கோபமா பாக்குறீகளா?

பாருங்கடா... நல்லா பாருங்க. உங்க கோபம் என்னை என்னடா பண்ணும்? வெட்டிச் சரிச்சிருவீகளோ? அடிச்சிருவீகளோ? உங்களாலே முடியுமாடா? நடக்குமா, ஏங்கிட்டே? போங்கடா போங்க, போக்கத்த பசங்களா?

என்னை யார்னு நெனைச்சீக? வெட்டிருவேன், வெட்டி. ஒவ்வொருத்தன் தலையை சீவிருவேன் சீவி, பனங்காயை சீவி எறியுற மாதிரி.

வாங்கடா... தைர்யமிருக்கிறவன் யார்னாலும் வாங்கடா, வந்து பாருங்கடா.

கலாட்டா பண்றேனாம்! நடுரோட்லே நின்னு கலாட்டா பண்ணத்தான் செய்றேன். செய்வேண்டா. செய்வேன். யாரு என்னைக் கேக்க முடியும்? யார்டா கேக்க முடியும்?

ஏங்கிட்டே யாரும் கலாட்டா பண்ணலியா? ஊரு ஒலகம் ஏங்கிட்டே கலாட்டா பண்ணலியா? வாழ்ந்த வாழ்க்கை பூராவும், ஏங்கிட்டே கலாட்டா பண்ணலியா? வந்தவன், போனவன், இருந்தவன், இளைச்சவன், பெத்தவன், கட்டுனவள்னு எல்லாருமே ஏங்கிட்டே கலாட்டா பண்ணி, கூத்து பண்ணி, என்னை ரோட்லே நிப்பாட்டிட்டாகளே...

அப்ப எல்லாம் நீங்க எங்கடா போனீக? என்ன செஞ்சீக?

அடக் கூத்துவனே. ஏங்கிட்டே கலாட்டா பண்ணி, என்னை அழுக அழுக வைச்ச கொடுமை கொஞ்சமா, நஞ்சமா? அழுது தீருமா? எழுதித் தீருமா?

நா அப்ப சின்னப்பய. கிராமத்துலெ மூணாங்கிளாஸ் படிச்சிக்கிட்டிருந்தேன். எங்க ஆத்தா, எனக்கு ரொம்பப் பிடிக்கும். எம்மேலே உசுரா கிடப்பா. வாய்க்கு ருசியா திங்கக் குடுப்பா. நல்லா ஆத்தா.

ஆனா, எங்க அப்பன் இருக்கானே அவன் ஒரு சோம்பேறி. அவன் கால்பட்ட இடத்துலே புல்கூட முளைக்காதுடா. கள்ளுத்தண்ணியை குடிச்சிட்டு வந்து எங்க ஆத்தாளைப் போட்டு அடிப்பான். கதறக் கதற அடிப்பான். ஆத்தாளோட தலை முடியை பிடிச்சு இழுத்துப் போட்டு காலாலே மிதிப்பான் பாவிப்பய.

குடிச்சாலும் வந்து அடிப்பான். குடிக்க காசு கிடைக்காட்டாலும் ஆத்திரத்திலே உதைப்பான். அந்தப்

பாவிப்பயலை பாத்து பாத்து பதறிப் போய்க் கிடப்பேன். அவனெல்லாம் ஒரு மனுசனா?

எங்க ஆத்தா அவன்கிட்டே சிக்கிக்கிட்டு அனுதினமும் நரக வேதனைப் பட்டா. நா அதைப் பாத்து பதறிப் பதறி நடுங்குவேன்.

ஆத்தா ரொம்ப நல்லவா. என்னைப் பாசத்தோட மடியிலே போட்டுக்கிட்டு, 'ரோ, ரோ'ன்னு ரோராட்டு பாடுவா. 'ஏங்கண்ணு, ஏஞ்செல்லம்'னு பிரியம் பிரியமா கொஞ்சுவா. நேரம் பார்த்து, முகம் பார்த்து கஞ்சி ஊத்துவா. 'குடிடா கண்ணு,' 'குடிடா தங்கம்' னு செல்லம் பொழிவா.

அப்பேற்பட்ட ஆத்தாளை எங்க அப்பன் அடிச்சு அடிச்சே கொன்னு போட்டான்டா. அன்பு, பாசம், பிரியம்ங்கிறதெல்லாம் ஆத்தா சாவோட தொலைஞ்சே போச்சு. அத்துப் போச்சுடா.

அதுக்கப்புறம் சித்தின்னு சொல்லி, ஒருத்தி வந்து சேர்ந்தா. அம்மம்மா! அந்தப் பாதகத்தி செஞ்சகொடுமை கொஞ்சமில்லே. தாங்கவே முடியாம நா அழுத அழுகை... சொல்லியழ ஆள் இல்லாம நா தவிச்ச தவிப்பு... பருந்து கால்லே சிக்குன கோழிக் குஞ்சா கதறித் துடிச்சேன்... அந்தப் பேய்க்கிட்டே எப்படி இருக்க? என்ன செய்ய?

வேற வழியேயில்லே. தப்பிச்சு ஓடியாந்துட்டேன். இங்க வந்து நாபட்ட கஷ்டங்கள் கொஞ்சமா? அடடா! எத்தனை ஹோட்டல்கள்லே வேலை பார்த்தேன். எச்சிலை எடுத்தேன். பெஞ்சு துடைச்சேன். சப்ளை பண்ணுனேன்.

அப்போ... எல்லாரும் என்னை அடிப்பாக. எதுக்காக அடிச்சாகன்னு கணக்கும் இல்லே, காரணமுமில்லே.

எதுக்கெடுத்தாலும் அடிப்பாக. நாக்குலே நரம்புல்லாம நாற வசவு வைவாக.

எங்க திரும்பினாலும் சித்திகள்தான். சுத்தி சுத்தி நின்னாக. அன்பு காட்டுற ஆத்தா மாதிரி, ஒருத்தர் கூட இருந்ததேயில்லை.

ஒரு தங்கமான பொண்ணு. பேரு அழகம்மா. பேரைப் போலவே தேகம். அழகுன்னா... அழகு, அம்புட்டு அழகு. தேவதை மாதிரி.

சீமான் வீட்லே ஜெகஜோதியாக ஜொலிக்க வேண்டிய சீமாட்டி, அவ. பாவம், காலக் கொடுமை. யாருமத்த அனாதையா நின்னா. காப்பாத்த ஆள் இல்லே.

ஒரு நல்ல மனுசர், அனாதையா நின்ன எங்களை சேத்து வைச்சாரு. ஒரு குடும்ப விளக்கை ஏத்தி வைச்சாரு.

எனக்கு அவளை கண்டாலே பயம். அந்த அழகே என்னை அண்ட விடாம அரட்டிச்சு. சாயங்காலச் சூரியன் மாதிரி தகதகப்பா இருப்பா.

எப்படியோ ஆறு மாசம் ஓடுச்சு. அவள்கிட்டே யாச்சும் எங்க ஆத்தாளோட அன்பு கிடைக்கும்னு ஏங்கிப் போய் கிடந்தேன்.

ஒரு நா—

காய்ச்சல்லே சுருண்டு கிடந்தேன். குளிர் காய்ச்சல் தாங்காம அணத்திக்கிட்டு கிடந்தேன். அப்படிப்பட்ட சமயத்துலே என்னைத் தவிக்க விட்டுட்டு, அந்தப் பாதகத்தி ஒரு மைனர் பயலோட ஓடிப்போய்ட்டா.

எம்மனசே ரணமாச்சு. அவமானம் தாங்காம அழுதேன். ஒரு முழுத்த ஆம்பளைக்கு இது எம்புட்டு தலை குனிவு?

அப்பபடியே குன்னிக் குறுகிப் போனேன். பழகுன ஜனங்க முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியலே.

உள்ளுக்குள்ளே ஒடைஞ்சு நொறுங்கிப் போயிட்டேன். நாதியத்துப் போன நா என்ன செய்ய? வேற ஏரியாவுக்கு வந்துட்டேன். ரிக்ஷா இழுத்துப் பொழைச்சுக்கிட்டிருக் கேன். அதுவும் ராத்திரியிலே மட்டும் தான், ரிக்ஷா வாடகைக்குக் கிடைக்கும்.

கஞ்சித்தண்ணி காய்ச்சுறதுக்கு ஆள் வேணுமே, ஒரு பெண்ணை சேத்துக்கிட்டேன். அவளுக்கு இப்ப ரெண்டு புள்ளைக.

எனக்கு வாய்ச்ச இவா, பெரிய ராட்சஸி. ரொம்ப கடுமையானவா. இருபது ரூவா இல்லாம வீட்டுக்குப் போகவே முடியாது. போனா, வசவு உரிச்சு எடுத்துருவா. ரொம்ப ராங்கிக்காரி.

அவாகிட்டே நா படுற பாடு இருக்கே... இது பெரிய கொடுமை.

அவா கொடுமை தாங்காமத்தான், இங்கே வந்துடுறேன்.

என்ன இப்படிப் பாக்குறீக? இம்புட்டு வேதனையை உள்ளுக்குள்ளே வைச்சுக்கிட்டு இத்தனை வீராப்பு பேசுறானேன்னு பாக்குறீகளா? ஆமா... வேதனைன்னா சாமான்யமான வேதனயில்லே. வெட்டுப்பட்ட புண்ணுலே திராவகத்தை ஊத்துன மாதிரி... உசுரைப் பிடுங்குற ரணவேதனை.

ரணவேதனையே என்னோட வாழ்க்கையாகிப் போச்சு.

ஊரு உலகமும், வாழ்க்கையும், சுத்தியிருந்த மனுசமக்களும் ஒன்னு சேந்துக்கிட்டு எங்கிட்டே ஆயுஸு முழுக்க கலாட்டா பண்ணி பண்ணி... என் மனசையே

*கிழிச்சு, என் சுபாவத்தையே நிறம்மாத்தி—அன்பு, பாசம்ங்கிறதே எங்கண்ணுலே தட்டுப்படாத அதிசயமாகி...*

*எம் பொழப்பு இப்ப என்னாச்சு? கழுதை வாயிலே சிக்குன காகிதம் மாதிரி கிழிஞ்சு போய்—கசங்கிப் போய்—நைஞ்சுபோய்— கூழ் கூழாகிப் போச்சு...*

*எங்க ஆத்தா மாதிரி அன்பு காட்டி அரவணைக் கிறதுக்கு—மனசுலே பாசப் பின்னலை பின்னி வளர்க் கிறதுக்கு—ஒரு ஜீவன், ஒரே ஒரு சீவன் இருந்தாக் கூட... போதுமே!*

*நா இப்படியாயிருக்க மாட்டேனே... குடிச்சு குடிச்சு. நாசமாயிருக்க மாட்டேனே... ராத்திரி முழுக்க அடி வயித்துலே வலி தாங்காம அலறி அலறிச் செத்துக் கிட்டிருக்கேனே, இந்தப் பாதரவு எனக்கு நேர்ந்திருக்காதே... குடியாலே வந்த வலிதானே இது? குடல் வெந்து போய் புண்ணாகிப் போன வலிதானே...*

*எவண்டா இது? 'பாம் பாம்'னு ஓயாம கத்திக்கிட்டு. என்னடா லாரிக்காரா, என்னை மொறைக்கே? ரோடு ஒனக்கு மட்டும் சொந்தமா? ஒன்னோட மொறைப்புக் கெல்லாம் பயந்துருவேனோ? அதுக்கு வேற ஆளைப்பாரு.*

*போடா... ஒன்னை மாதிரி ஆயிரம் மொறைப்பை பாத்துருக்கு. யாரும் நம்மளை டச் பண்ணிட முடியாதுடா.*

*இதென்னடா... பின்னாலே எவண்டா 'வாம், வாம்' னு ஹாரன் அடிக்குறது? கார்காரனா? கத்துங்கடா. ரோட்லே காத்துக்கிடந்து சாகுங்க.. நாபயப்பட மாட்டேண்டா. ஒதுங்க மாட்டேண்டா. ரோடுன்னா உங்களுக்கு மட்டுந்தானா? மனுசனுக்கு இல்லையா?*

எஞ் செருப்பைக் காணோம்டா... சோத்தாங்கால் செருப்பு.

யார்டா, நீங்க? எதுக்குடா சுத்தி வந்து நிக்கீக? ஏய்.... மேலேகை வைக்காதே. தள்ளாதீகடா...

ஏய் ஏய்... ஏண்டா கையைப் புடிக்கீக? எவண்டா இது, காலைப் புடிக்கிறவன்? பாவிப் பசங்களா, விடுங்கடா! விடுங்க, என்னை.

ஐயய்யோ... எதுக்குடா தூக்குறீக? எங்கேடா தூக்கிட்டுப் போறீக? ஐயய்யோ, என்னை விடுங்கடா...

அடேய்... அடேய் என்னடா பண்ணப் போறீக? அடப்பாவிகளா... ரோட்டோரக் கிடங்குலே போட்டுட்டுப் போறீகளே... சாக்கடை நாறுதுடா...

ஊரு ஒலகம் கூடி என்னை வாழ்க்கையிலேயிருந்து கிடங்குக்குள்ளே தள்ளுச்சு. நீங்க என்னடான்னா... குப்பை கூளத்தை அள்ளி தொட்டியிலே போடுற மாதிரி, என்னைத் தூக்கி ரோட்டோரக் கிடங்குலே போட்டுட்டுப் போறீகளே?

பாவிகளா, என்னாலே எந்திக்க முடியலேடா. சாக்கடை நாத்தம் குடலைப் பிடுங்குதுடா...

தூக்கி விடுங்கடா... அய்யோ... என்னைக் காப்பாத்துங்க. ஒரு கை குடுங்க...

நாறிப்போன எம்பொழப்புலேயிருந்து என்னைக் காப்பாத்துங்கடா...

தூக்குங்கடா... தூக்குங்கடா... ஐயோ, என் செருப்பு... என் பொழைப்பு... என்னைத் தூக்குங்கடா... தூக்குங்கடா... தூக்குங்...

*செம்மலர், ஜூலை 1993*

◆ ◆ ◆

10

# கட்டிப் புரளு!

ஏம்பா இப்படி? ச்சீச்சீய், கண்ணைத் துடைச்சுக்க. தெருவுலே போறவுக யாராச்சும் பார்த்தாகன்னா... சிரிக்க போறாக. நல்லாயிருக்கப்பா கூத்து... முழுத்த ஆம்பளையா இருந்துகிட்டு, இப்படிப் 'பொல பொல'ன்னு கண்ணீர் வடிக்கவா செய்வாக? வெக்கக்கேடு!

எதுக்குப்பா அழுகணும்? நீ ஆம்பளைச் சிங்கம். ஒரு குடும்பத்தையே தோள்லே தூக்கிச் சுமந்து நடக்குற தெம்பு வந்துருச்சுங்கிறதுக்கு அடையாளம் தானப்பா, மீசை? மீசை வேற எதுக்குன்னு நெனைச்சே? சும்மா உதட்டுக்குக் குடை பிடிக்கவா? சும்மா அழகுக்குன்னா நெனைச்சே? இல்லே.

"நீயெல்லாம் ஒரு மீசை முளைச்ச ஆம்பிளை தானா"ன்னு ரோஷத்தை உசுப்பி விடுற மாதிரி கேக்குறதை பாத்துருக்கீயா? ஏன், அப்படிக் கேக்குறாகன்னு நெனைச்சே? மீசை முளைச்சிட்டாலே... ஒரு தகுதி— பொறுப்பு— மனதைரியம் வந்துருது. தகுதிக்குக் குறைவா, பொறுப்பில்லாம, கோழைத் தனமா எவனாச்சும் நடந்துட்டான்னா... அவனைப் பாத்துத்தான் அந்தக் கேள்வி கேப்பாக; "நீயெல்லாம் மீசை முளைச்ச ஆம்பளை தானா"ன்னு.

அட, மீசை மூளைக்காத பயலை ஊர்க் கூட்டத்திலே கூட வாயைத் திறக்க விடமாட்டாக. "சின்னப்பயக எல்லாம் கம்முன்னு கிடங்கடா"ன்னு ஒரே அதட்டுலே அடக்கிப் போடுவாக. எதுக்குன்னு நெனைச்சே? மீசை முளைக்காத பயலுக்கு, பொது இடத்திலே பேசுற தகுதி— வயசு— இன்னும் வரல்லேன்னு அர்த்தம். மீசை முளைச்சிட்டா... அவன் முழுத்த மனுஷன். ஒரு குடும்பத்தை ஒத்தையிலே தூக்கிச் சுமக்கிற தகுதியுள்ள மனுஷன். அதுதாம்பா அர்த்தம்.

நீ என்னடான்னா... மீசை முளைச்சு... கல்யாணம் முடிச்சு, ஒரு பிள்ளைக்கு தகப்பனாகப் போற நீ... கண்ணைக் கசக்கிறே? கண்ணீரை வடிக்கிறே? வெக்கமாயில்லே?

இப்ப என்ன... ஒன்னை அந்தமான் தீவுக்கா போகச் சொல்லியிருக்கு? இல்லே, முன்னைப்பின்னே தெரியாத வேத்து ஜனங்க கிட்டே போய் இருக்கவா சொல்றாக? இல்லியே. ஜெயிலுக்கா போறே? பெத்தவுக உத்தவுக— கூட உண்டு உறங்கி வளர்த்ததுக— பார்க்க முடியாத தூரத்துக்கா போறே? இல்லியே.

பொறந்து வளர்ந்து ஓடியாடி, விளையாடுன அதே ஊர்லே— அதே தெருவுலே— அதே வீட்லே— அதே மனுச மக்களோட இருக்கப்போறே. இதுக்கெதுக்கு அழுகணும்?

உங்க அய்யா ஒன்னை 'வேற காய்ச்சு'ன்னு சொல்லிட்டாரேங்கிறதுக்காக, நீ எதுக்காக அழுவணும்? போன வருஷம் நீ ஆசைப்பட்டு கட்டுன பொண்டாட்டி யோட தனியா உலை வைச்சு, பாலைக் காய்ச்சி, சந்தோஷமா, "ஜாம் ஜாம்"னு தனிக் குடித்தனம் நடத்த வேண்டியதுதானப்பா? இதுக்காக எதுக்கு மயங்கணும், தயங்கணும்?

ஒன்னாலே நெதம் பத்து ரூபாய்க்கு ஒழைக்க முடியாதா? ஒம் பொண்டாட்டி, களை வெட்டப் போனா ஏழு ரூவா கெடைக்காதா? அதை வைச்சுக் கிட்டு இந்தப் பட்டிக்காட்டிலே குடும்பம் நடத்த முடியாதா? நீயென்ன விறகு விலைக்கு வாங்கப் போறியா, வீட்டு வாடகை தரப் போறீயா? தண்ணிக்கு ரூவா குடுக்கப் போறீயா? ஒன்னு மில்லே.

வாங்குற கூலியை வச்சுக்கிட்டு, அம்மனும் சாமியுமா நீங்க ரெண்டு பேரும் ஆக்கி, அவிச்சுப் பொங்கிப் பொரிச்சு சாப்பிட வேண்டியதுதானே!

அட, ஏண்டா இப்படிக் குமுறிக் குமுறி அழுகுறே! இந்தா, மொதல்லே அழுகுறதை நிறுத்து. ச்சே... எனக்கே அசிங்கமாயிருக்கு.

வெவரம் தெரிஞ்ச நாள்லேயிருந்து தாயோட தகப்பனோட சாப்புட்டு வளந்த பய. அண்ணன் தம்பிகளோட, சண்டைச் சச்சரவு போட்டுக்கிட்டு சந்தோஷமும் சிரிப்புமாய்... ஒன்னடியும் மண்ணடியுமா திரிஞ்ச பய. அக்கா தங்கச்சிகளோட கேலி பண்ணி, சண்டை போட்டு கலகலப்பா ஒருகூட்டுக் குள்ளே வளந்த பய நீ. 'அதுவே ஒலகம்'னு நினைச்சிருந்த பய. வாய்க்கு வாய் "நம்ம வூடு, நம்ம காடு, நம்ம துணிமணி, நம்ம ஆடு"ன்னு சொல்லிச் சொல்லியே பழகிப்போன பய.

இன்னிக்கு ஏ வீடு, ஏஞ்சொவரு, ஏ அடுப்பு, ஏங்கஞ்சின்னு பிரிச்சுப் பேச வேண்டியாகிப் போச்சேன்னு உருகி உருகி வழியுறே. உள்ளுக்குள் ஒடைஞ்சு நொறுங்கி கலகலத்துப் போறே.

தெரியத்தான் செய்யுது. எனக்கு ஒம் மனசு புரியத்தான் செய்யுது. அதுக்கு யார் என்ன பண்ண முடியும்? ஒண்ணும்

பண்ண முடியாதே. நடக்குற ஜோலி நடந்துதானே தீரணும்?

இப்ப என்னை எடுத்துக்கோயேன்... நான் 'வேற' போக வேண்டி வரும்னு யாராச்சும் சொல்லியிருப்பாகளா? மனசாலே கூட நெனைச்சுப் பாக்க முடியுமா? எப்படி நினைச்சுப் பாக்க முடியும்? ஊர் உலகத்துலே எல்லோருக்கும் வாய்ச்ச மாதிரியா... நாங்க? எல்லோருக்குமுள்ள பொதுவிதி எங்களுக்குச் செல்லாதே! அந்த மாதிரி... நாங்க அனுபவிச்ச அவலங்கள்லேயும் சரி... எல்லாத்துலேயும் நாங்க 'தனி மாதிரி' யாச்சே!

தாய் தகப்பன் இருந்து எங்களை வளத்து ஆளாக்கி, கல்யாணம் காட்சி நடத்தி வைச்சுப் பாக்கவா செஞ்சாக? அந்தப் பாக்கியம் எங்களுக்கு லபிக்கலியே!

எங்க அப்பா சாகிறப்போ... அம்மா படுத்த படுக்கையிலே நிரந்தர நோயாளியா இருக்காக. நானும் தம்பியும் கண்ணு முழியாத குஞ்சுகளா நிக்கோம். எனக்கு வயசு பதினொன்னு. தம்பிக்கு வயசு அஞ்சு.

நோயாளியா கெடந்த எங்கம்மாவுக்கு வாரா வாரம் எங்கப்பா ஆரஞ்சுப்பழம், ஆப்பிள் பழம்னு வாங்கித் தருவாரு. எந்தம்பி வேணும்ங்கிற திம்பண்டங்களை எங்க கடையில இஷ்டம் போல எடுத்து எடுத்துத் திம்பான்...

இனிமே அம்மாவும் தம்பியும் என்ன செய்வாக? அவுகளை எப்படி காப்பாத்துறது? இதுதான் அப்ப எம் மனசுலே இருந்த ஒரே நினைப்பு.

அப்பா செத்த இழவுக்காக கடை பூட்டிக் கெடந்துச்சு. நா கடையிலே உக்காந்து ஏவாரம் பாப்பேன். க்ளாஸ்லேயும் பஸ்ட் ரேங். படிப்பும் நல்லா வரும்.

என்னையும் ஏந்தம்பியையும் ஆஸ்டல்லே சேத்து படிக்க வைக்கிறது, இருக்குற நெலத்தை பொறுப்புக்கு விட்டு, அதுலே வார ரூவாயிலே எங்கம்மாவை பராமரிச்சுக் கிறதுன்னு... சொந்தக்காரங்க முடிவு பண்ணிக்கிட்டு... கருமாந்திர நாளன்னிக்கு ஏங்கிட்டே கேட்டாக...

"என்னப்பா, நீயும் ஒந்தம்பியும் படிக்கப் போறீகளா....?"

நா மொட்டைத் தலையைத் தடவிக்கிட்டு தம்பியைப் பாத்தேன். அவன் ஏக்கத்தோட என்னைப் பாத்தான். எனக்கு அழுகை அழுகையா வந்துச்சு.

கடையிலே மனம்போல எடுத்துத் தின்னவன். ஆஸ்டல்லே சேத்தா, எந்தக் கடையிலே போய் எடுத்துத் திம்பான்? அஞ்சு பைசா பொரிகடலைக்கும், பத்து பைசா முறுக்குக்கும் ஏங்கிப் போய் நிப்பானே– 'முகம் பாத்து மருகுவானே' ன்னு நெனைக்க நெனைக்க ஏங்குலையே பதறி நடுங்கிச்சு.

சித்தப்பா மறுபடியும் கேட்டாரு...

"நீ நல்லா படிக்கிறவன். இப்ப கஷ்டப்பட்டு படிச்சுட்டா எப்படியும் நீ ஒரு உத்யோகத்துலே முன்னுக்கு வந்துரலாம். ஒனக்கு இருக்கிற அறிவுக்கு, நீ எம்புட்டோ ஒசரத்துக்கு முன்னேறிடுவே..."

"தம்பி?"

"அவன் படிப்பு வந்தா படிக்கட்டும். இல்லேன்னா டவுன்லே ஏதாச்சும் ஓட்டல்லே சேத்துருவோம்..."

மறுபடியும் தம்பியைப் பார்த்தேன்... சொந்தக் கடையிலே சுதந்திரமா தின்னு வளர்ந்தவன். ஒருத்தன் கடையிலே பெஞ்சு துடைச்சு, எச்சிக் கஞ்சிக்கு ஏங்கிப் போய் நிக்கவா?

மனசுக்குள்ளே ஒரு காட்சி.

'அழுக்கு உடம்போட கிழிஞ்ச டவுசரோட சட்டி ஏந்திக்கிட்டு பசியோட கலங்கி நிற்கிற ஒரு சிறுவன்' அறுபட்ட மனசு ஊமையா கதறித் துடிச்சது, அதிர்ச்சியிலே வெலவெலத்துப் போய்ட்டேன்.

உத்யோகமும் வேண்டாம். படிப்பும் வேண்டாம்... ஒரு மயிரும் வேண்டாம்... ஏந்தம்பிக்காக— அம்மாவுக்காக— ஒரு கடை இருந்தா போதும்.

கடை நடத்திட முடியுமா? நடத்தித்தான் ஆகணும், என்ன பாடுபட்டாச்சும் நடத்தியே ஆகணும்... தம்பிக்காக. ஏந்தம்பிக்காக...

"நா படிக்கப் போகலே" ன்னு சொன்னேன். சித்தப்பாவுக்கு அதிர்ச்சி. திகைச்சுப் போனாரு. "என்னடா செய்யப்போறே?"

"கடை நடத்தப் போறேன்."

ஏழு வருஷமா கடை நடத்துனேன். ஊரே பாத்து, மூக்குலே விரலை வைச்சது. டவுசர் போட்ட ஒரு பொடிப்பய பெரீய்ய, சாக்குக் கட்டை தலையிலே வைச்சுக்கிட்டு ராசபாளையம் சரக்கு வாங்கப் போறதைப் பாத்து, பெரிய பெரிய ஆளுக எல்லாம் ஆச்சர்யப்பட்டாக. வாயாரச் சொல்லிப் பெருமைப் படுவாக.

ராசபாளையத்து கடைக்காரங்களே என்னைப் பாத்து வியப்போட பாராட்டுவாக, "சில்லாங்குச்சி கணக்கா இருந்தாலும்... ஏவாரத்துலே கடுசான பயல்."

அம்மாவும் செத்துப் போனாக. ஏழு வருசத்துலே கடை ஏவாரம் தேய்பிறையா மெலிஞ்சுக்கிட்டே வந்துச்சு. நட்டம் நட்டம்னு நல்லா கண்ணுக்குத் தெரிஞ்சாலும், 'தம்பி,

தம்பி'ன்னே துடிச்சிக்கிட்டிருந்த மனசோட... கடையை விடாம நடத்துனேன், வைராக்கியமா.

கடை சுத்தமா நொடிச்சுப் போச்சு, ரொம்ப பணக் கஷ்டம். எங்க பார்த்தாலும் கடன் தொல்லை. பிக்கல் பிடுங்கல். மனசைக் கொத்திப் பிடுங்குற அவமானம். அந்த வயசுலே தாங்க முடியலே. நச்செடுக்குற துன்பம். குருவி தலையிலே வைச்ச பனங்காயா வாழ்க்கை... யார் முகத்துலேயும் முழிக்க தெம்பில்லை. குன்னிக் குறுகி கூசிப்போய் அலைஞ்சேன்...

மனக்கஷ்டம் தாங்கலே. ஒரு நா, திருவேங்கடத்துலே 'பக்டோன்' பாட்டிலை வாங்கிட்டேன். யோசிச்சேன். மனசுக்குள் ஏகப்பட்ட குழப்பம்... பூசும்பம்... வுட்டுட்டு செத்துப்போன அம்மா அப்பாவை நெனைச்சு நெனைச்சு மனசுக்குள்ளேயே மருகுனேன்... உதவி செய்ய வேண்டிய ஒறவுக்காரங்க எல்லாம், ஒதுங்கிக்கிட்ட சுயநலத்தை எண்ணி எண்ணி வெம்பி வெதும்பி அழுதேன்... சாவைச் சந்திக்கப் போற சஞ்சலம். வேற வழியேயில்லை. பக்டோனை அடிச்சிட வேண்டியதுதான்!

திருவேங்கடம் பஸ் ஸ்டாண்டுலே நின்னு யோசிச்சுக்கிட்டிருக்கையிலே—

காஞ்ச தலையோட கறுத்த உடம்போட ஒரு சின்னப் பையன் பிச்சை கேட்டு கையேந்தி வந்தான். எல்லார்கிட்டேயும் கேட்டுக் கேட்டு ஏமாந்து வந்தவன், ஏங்கிட்டேயும் கையேந்தினான்.

எனக்கு ஏந்தம்பியே அந்தக் கோலத்துலே வர்ற மாதிரி ஒரு நினைப்பு. மனசெல்லாம் கிடந்து துடிச்சது.

கால் ரூவாயை எடுத்துப் போட்டேன். கண்ணுலே ஒரு மலர்ச்சி முகத்துலே ஒரு வசந்தத் துளிர்ப்பு. என்னையெப்

பார்த்தான். அப்புறம் போய்ட்டான். நா அவன் பின்னந்தலையையே பாத்துக்கிட்டிருந்தேன்...

'பக்டோனை குடிச்சு... நா துன்பத்திலிருந்து விடுதலையாயிட்டா... ஏந்தம்பியும் இந்தக் கோலத்துலேதான் அலைவானோ...'

அந்த நெனைப்போட அதிர்ச்சியிலே மனசுலே இருந்து கொத்திப் பிடுங்கின குழப்பம், பூகம்பம் எல்லாம் சுத்தமா மறந்து போச்சு. பிச்சைக் கோலத்துலே... காத்துலே மிதக் கிற துரும்பா... ஏந்தம்பி தம்பி... தம்பி...

பக்டோனை கண்மாயில் வீசி எறிஞ்சுட்டு... கரைப் பாதையிலே ஊர் வந்து சேர்ந்துட்டேன். 'ராஸ்கல்... வாழ்க்கைன்னா பெரிய கொம்பா? கட்டிப் புரளுவோமே! அதுவா, நாமான்னு ஒரு கை பாத்துருவோம்... தம்பிக்காக மல்லுக்கட்டிப் பாத்துருவோம்'ங்கிற வைராக்யம், மனசுலே.

தம்பியைப் பாத்துப் பாத்து அன்னிக்கு பூராவும் அழுதேன். 'நா எதுக்காக அழுகுறேன்'னு தெரியாம... தம்பி தெகச்சு தெகச்சு என்னைப் பார்த்தான்...

அப்புறம் கடை நடத்த முடியலே.

காலு ஊனமாகிப் போயிருந்த எங்க ஆச்சிகிட்ட தம்பியை ஒப்படைச்சுட்டு, தஞ்சாவூருக்கு கடலை மிட்டாய் ஏவாரம் செய்யப் போனேன். ஏஞ் சத்துக்கு மிஞ்சுன வேலை. குச்சி போல இருப்பேன், நான். சைக்கிள் ஒயரம்கூட இருக்க மாட்டேன். கட்டிப் புரள்றதுன்னு முடிவு பண்ணுனப்புறம், இதெல்லாம் நெனச்சு தயங்குனா நடக்குமா?

சைக்கிள் நிறைய லோடு ஏத்திக்கிட்டு ஊரு ஊரா அலைஞ்சேன்...

அம்மன் பேட்டை, அப்பன் பேட்டை, கண்டியூர், திருவையாறு, ஈச்சங்குடி, திருக்காட்டுப்பள்ளி, மகாராச புரம்னு எம்புட்டு ஊர் அலைஞ்சாலும், மனசுக்குள்ளே தம்பிதான் நிப்பான். ஏவாரத்துலே லாபமோ நட்டமோ அதைப்பத்தியெல்லாம் கணக்குப் பாக்காம, மாசா மாசம் தம்பிக்கு நூத்தம்பது ரூவா மணியார்டர் நான் தவறாம அனுப்பிச்சிருவேன்...

ஒரே வருஷத்துல ஆயிரம் ரூவா கடனோட ஊர் வந்து சேந்துட்டேன். அப்புறம் ரெண்டு வருஷம். வீட்லே வறுமை சம்மணம் போட்டு உக்காந்துக்கிடுச்சு. கடன் தொல்லை, கால் நீட்டி படுத்துக் குறட்டை போட ஆரம்பிச்சிருச்சு. வெள்ளாமை விளைச்சல் இல்லை. வெளைஞ்சாலும் வெலையில்லே. அண்ணன் தம்பி ரெண்டு பேரும் நஞ்சடிச்ச கெண்டைகளா மயங்கிக்கிட்டிருந்தோம்... ஏன்னு கேக்க ஒரு நாதியில்லே.

வீட்லே கஞ்சிக்கே திண்டாட்டமாயிருச்சு.

மதியம் பசியோட வீட்டுக்குள்ளே வருவேன். பானையைத் துழாவுனேன். நீச்சுத்தண்ணிக்குள்ளே கம்மஞ்சோத்து உருண்டை ஒன்னு மட்டும் கெடந்ததுன்னா... பெருமூச்சோட நிமிர்வேன். வயிறு நிறைய பச்சைத் தண்ணியைக் குடிச்சிட்டு வெளியே வந்துரு வேன். தம்பி நிப்பான்.

“டேய், நா சாப்புட்டேன்.. ஒனக்கு ஒரு உருண்டை கெடக்கு. சாப்புட்டுக்கோ” ம்பேன்.

“கடிச்சிக்கிடை?”

“கடையிலே எதுனாச்சும் கடனா வாங்கிக்க.”

“சரி” ம்பான்.

வேறொருத்தர் கடைக்குப் போவான்.

வயிற்றுலே பசி எரியும். ஆனா, மனசுலே நிறைஞ்சு போன சுகம், எனக்கு.

அப்படித்தான் ஒரு நா, கடிச்சிக்கிடையாக வெங்காயம் வாங்க தம்பி கடைக்குப் போயிருக்கான். சரக்கு வாங்குற ஆளுக நாலைஞ்சு பேரு நிக்குற நேரத்துல... வெங்காயம் கேட்டுப் போன ஏந்தம்பிக்கு, 'கடன் இல்லே'ன்னு கடைக்காரர் சொல்லிட்டாரு. அதுவும் முகத்தைச் சுண்டிக்கிட்டு, கடுசான வார்த்தைகளாலே கடிச்சுக் குதறிட்டாரு.

முகம் செத்துப் போய் வந்து சேர்ந்தான், கண்ணெல் லாம் நீர்கோர்த்து நின்னுச்சு. எனக்கு குலைபதறிப் போயிருச்சு. மனசெல்லாம் கொதிச்சுப் போய்' 'என்னடா'ன்னு விசாரிச்சேன்.

பதில் சொல்லக் கூட வாய்வராம... அழுதான். எனக்கு உசுரே போன மாதிரியிருந்துச்சு. திக்கித் திணறி சொல்லி முடிச்சான். நா அப்படியே தகிச்சிப் போய்ட்டேன்...

ஏந்தம்பி... இப்ப சின்னவன் இல்லே... பதினைந்து வயசு பையன். மான அவமானம் தெரியுற வயசு. அவனுக்கா இந்த அவமானம்? பூவைப் போல மிருதுவான அவன் மனசுக்கா, இந்த அடி?

நெஞ்சுக்குள்ளே தீவைச்சமாதிரி எரிஞ்சது. ரோஷ உணர்ச்சி, பாச உணர்ச்சி எல்லாம் சேர்ந்து மனசு பதைச்சது. ஒரு வெறிபிடிச்ச கோபம். 'நாம கடை வச்சிருந்தா... ஏந்தம்பிக்கு இந்த அவமானம் நேர்ந்திருக்குமா?'

ஒரு வெறியோட கேட்டேன்:

“டேய்... மறுபடியும் கடை வைப்போமா?”

“கடையா? அதெப்படி முடியும்? ரூவா?”

“அதைப்பத்தி ஒனக்கென்ன? கடை வைச்சா நீயே பொறுப்பா இருந்து கவனிச்சுக்குவியா?”

“ஆகட்டும் கவனிச்சிக்கிறேன்.”

“வெளையாட்டு, ‘அது, இது’ ன்னு நெனைக்கக் கூடாது. என்னை எதிர்பார்க்கக் கூடாது. கடையை நீதான் முழுசா கவனிச்சுக்கணும்.”

“ஆகட்டும்”னு தலையை ஆட்டினான்.

அங்க, இங்க உருட்டிப் புரட்டி, ஆட்டைத்தூக்கி கூட்டிலே போட்டு, கூட்டைத் தூக்கி மேட்டுலே போட்டு... எப்படியோ அடுத்த மாசமே கடையை ஆரம்பிச்சாச்சு.

நானும் எளவட்டமாயிட்டேன். தம்பியும் வளர்ந்துட்டான். ஏவாரம் வச்சிருந்து நொடிச்ச அனுபவம்— ஏவாரமில்லாம வறுமையிலே வெந்து துடிச்ச அனுபவம்— ஒட்டுக்கம்புக் கஞ்சிக்கு கடிச்சிக்கிடை வாங்கக்கூட வழியில்லாம அவமானப்பட்ட அனுபவம்.. கொதிசட்டியிலே போட்டு வறுத்தெடுக்கப்பட்ட அனுபவம்...

இப்ப ஏவாரம்ங்கிற குதிரையை வசக்குற பக்குவம் எங்களுக்கு வந்தாச்சு. வசக்கியாச்சு. முதுகிலே ஏறி உக்காந்து லகானை சுண்டியாச்சு. அண்ணனும் தம்பியுமா ஏவாரத்துல கொடிகட்டிப் பறக்க ஆரம்பிச்சிட்டோம்.

அதுக்குப் பெறகு நடந்ததுதா... ஒனக்குத் தெரியுமே...

பசி பட்டினியோட கிடந்த காலத்துலே வெட்டி விலகிப் போன சொந்த பந்தமெல்லாம்... ஓடி ஓடி வந்து ஒட்டிக்கிடிச்சி.

மாட்டேன்னு நா ஒதுங்கிப் போனாலும்... விடாம விரட்டிப் பிடிச்சு... பொண்ணைக் குடுத்தாக. 'இதுவரைக்கும் இப்படியொரு கல்யாணம் நடக்கவுமில்ல... கல்யாணத்துக்கு இம்புட்டு கூட்டம் வந்ததுமில்லே'ன்னு ஒவ்வொரு ஆளும் வாயைப் பொளக்குற மாதிரி, கல்யாணம் 'ஜே ஜே'ன்னு நடந்து முடிஞ்சது...

அதுக்குப் பெறகும்கூட எனக்கு ஏந்தம்பிதான் பெரிசு. அவன் ருசிக்குத்தான் குழம்பு. அவனோட தேவையை அனுசரிச்சுத்தான் வீட்லே சகலமும்.

ஏவாரத்துலேயிருந்து கூட நா கொஞ்சம் கொஞ்சமா ஒதுங்க ஆரம்பிச்சேன்.

எதுக்கு? அவனும் ஒரு மனுசனாக ஆகவேண்டாமா? ஊர்லே அவனையும் ஒரு புள்ளியா— முழு மனுசனா... மதிக்க வேண்டாமா? அதுக்காகத்தான்!

அரிசி ஏவாரி 'சாம்பிளை'க் கொண்ணாந்து ஏங்கிட்டே காட்டுனா... 'தம்பியோட பேசிக் கோங்க."

வெத்தலைக்கட்டு ஏவாரி ஏங்கிட்டே 'எத்தனை கட்டு'ன்னு கேட்டா.. "தம்பிகிட்டே கேட்டுக்கங்க."

ஒரு கல்யாணம் ஒரு இழவுன்னு 'நல்லது, பொல்லதுக்கு' யாராச்சும் மொத்தமா அரிசி சாமான்க கடனா கேட்டு ஏங்கிட்டே வந்து நின்னா... "தம்பிகிட்டே கேட்டுச் சொல்லுதேன்."

இதெல்லாம் எதுக்காக? அவனுக்கும் ஒரு சுயமான பெயரை— மரியாதையை— ஏற்படுத் தணும்ங்கிறதுக் காகத்தான்.

ஏற்படுத்திட்டேன்... அதுலேயும் ஜெயிச்சிட்டேன்...

என்னோட மாமனாரே... அவரது அடுத்த மகளை அவனுக்குத் தர்றதாக மாறி மாறி தூது வுட்டாரு. அதுவும் சரிதான்னு முடிவுக்கு வந்து, தம்பி சம்மதத்தோட ஏந்தம்பிக்கு, ஏங் கொளுந்தியாளை 'ஜாம், ஜாம்'னு கல்யாணம் பண்ணி வச்சேன். ஊரெல்லாம் ஆச்சரியப்பட்டாக, கிழவிகள் எல்லாம் பெருமையா பேசுனாக... "தாய் தகப்பனை பறிகுடுத்துட்டு கண்ணு முழிக்காத குஞ்சுகளா— பச்சை மண்ணுகளா— நின்னுதுக. ஆதரவில்லாம நின்ன அந்த ரெண்டும் உருண்டு, புரண்டு கஷ்டப்பட்டு, கையை ஊனி, காலை ஊனி எப்படியோ மேடேறிடுச்சுக. இனிமே அதுகளை பத்திக் கவலை என்ன."

எங்க ஆச்சி அன்னிக்கு பூரிச்சுப் போயிருந்தாக, கண்ட கனவுகளெல்லாம் நினைவேறி... மனசெல்லாம் நெறைஞ்சு ததும்பி... முகமெல்லாம் சிரிப்பா கண்ணெல்லாம் கண்ணீரா...

அன்னிக்கு ஆச்சி இருந்த கோலம்... இந்தா, எங்கண்ணுக்குள்ளே இன்னும் அப்படியே இருக்கு...

எனக்கு அன்னிக்கு எம்புட்டு பெருமையா இருந்துச்சு! எம்புட்டு சந்தோசமா இருந்ததுச்சு, தெரியுமா?

நெலாவுலே மொத மொதல்லே கால் வைச்சவனுக்கும், எவரெஸ்ட் சிகரத்தை மொதமொதல்லே எட்டிப் பிடிச்சவனுக்கும் இருந்தாப் போல அம்புட்டுச் சந்தோசமும் பெருமையுமா இருந்துச்சு.

எங் குடும்பமும், தம்பி குடும்பமும் ஒன்னா இருந்துச்சு. அது ரெண்டா ஒடையும்னோ... வேற வேற ஆகும்னோ யாராச்சும் நெனைச்சாவது பார்த்துருப் பாங்களா? அட, கனாக்கூட கண்டுருப்பாங்களா?

*இல்லியே! ஊரெல்லாம் என்ன பேசுனாக? ஒனக்குத் தான் தெரியுமே! "அவுக ரெண்டு பேரும் அண்ணன் தம்பிக, அவுகளுக்கு வாய்ச்சவுகளும் அக்கா தங்கச்சிக. ஒன்னுக்கு ஒன்னு பிடிப்பா— பிணைப்பா— எப்பவும் ஒரே குடும்பமா, ஒத்துமையா இருக்கப் போறாக. அவுகளுக்குள்ளே பேதம் வாரதுக்கு என்ன பிரச்னை இருக்குது?"*

*ஆனா... என்ன ஆச்சு? ரெண்டு வருசம்தான் தாக்குப் பிடிச்சது. வீட்டுக்குள்ளே ஒரே சண்டை, சச்சரவு, பூசல், புகைச்சல். குமுறலும், அழுகையுமா... அங்கலாய்ப்பும் சலசலப்பும்...! நிம்மதி காணாமல் போயிடுச்சு.*

*யோசிச்சுப் பாத்தேன்... ஒத்துமையைவிட உறவு முக்கிய மில்லியா? ஒன்னா இருக்குறதைவிட... பாசத்தோட இருக்குறது, முக்கியமில்லியா? ஒரே வீட்டுக்குள்ளே பகையை வளக்குறதைவிட... வேற வேற வீட்லே இருந்து ஒறவை வளக்குறது, புத்தி சாலித்தனமில்லியா?*

*சண்டைக்கும் சச்சரவுக்கும் என்ன காரணம்னு யோசிச்சுப் பார்த்தாலும்... பெரிசா காரணம் எதுவும் தென்படலை. அற்ப சொற்ப விஷயம் கூட... சின்னச் சின்ன சொல்கூட பூசலையும் புகைச்சலையும் வளர்த்துடுது...*

*அப்ப வேற போறதுதான் புத்திசாலித் தனம்னு... முடிவு பண்ணினேன். தம்பிகிட்டே கேட்டேன். சம்மதிச்சிட்டான்.*

*தனியா வேற வீட்லே அடுப்பு மூட்டுற அன்னிக்கு நா பட்ட வேதனை... எனக்குள்ளே பொங்கிப் பெருகி வழிஞ்ச பழைய நினைப்புகள்... செத்துப் போன அம்மா அப்பாவை நெனைச்சு ஏங்கிய ஏக்கம்... நானும் தம்பியுமா சின்ன வயசுலேயிருந்து சேர்ந்து அனுபவிச்ச கஷ்டங்க, பசி*

பட்டினி நாளுக... அவமானங்க... கல்யாணம் காட்சிக எல்லாமே பொங்கிப் பொங்கி வந்துச்சு. மனசே அடைச்சுப் போன மாதிரி திணறிச்சு. அழுகை அழுகையா வந்துச்சு. ஆனா அழலே. மனசுலே உள்ள 'வேக்காடு' களையெல்லாம் மனசுக்குள்ளேயே அடக்கிக்கிட்டேன். அழலே. வெக்கமாயிருந்துச்சு...

அரும்பாடுபட்டு வளர்த்த தம்பியை விட்டுட்டு இப்படி நிரந்தரமா வெலகியிருக்க வேண்டியதாகிப் போச்சேங்கிற நெனைப்பு மனசை அறுத்துச்சு...

தண்ணியை குடிச்சு வவுத்தை நிரப்பிட்டு, இருக்குற ஒத்தை உருண்டையை தம்பிக்கு விட்டுட்டு வந்தேனே... இன்னிக்கு—

அவன் கஞ்சி வேற— ஏங்கஞ்சி வேற. என் சந்தோசம், கஷ்டம் என்னோட— அவன் சந்தோசம், கஷ்டம் அவனோட....

தாயா புள்ளையா வளர்ந்து வந்த நாங்க, இப்ப வாயும் வயிறுமா வேற வேற... கொடுமையை பாத்தீயா?

அதான்... நம்ம மண்ணுலே வாழ்ந்து குப்பை கொட்டுன பெரியவுக பழமொழியா சொல்லி வைச்சாக... "தாயானாலும் புள்ளையானாலும் வாயும் வயிறும் வேற வேற" ன்னு.

இன்னொரு பழமொழியைக் கேளு "அஞ்சு வயசு வரைக்கும் அண்ணனுக்குத் தம்பி; பத்து வயசுக்கு மேலே பாகத்துக்கு பங்காளி." கேட்டியா கதையை?

இதுதான்... நாம வாழ்ற சமுதாயத்தோட நியதி.

இதிலேயிருந்து நீ மட்டும் தப்பிக்கணும்னு நெனைச்சா... நடக்குமா? தப்பிக்க முடியாதே!

இதுக்காக அழுது என்ன பிரயோசனம்? அழுது ஆகப் போறது ஒண்ணுமில்லே. புரிஞ்சு நடந்துக்கிறது தானே, புத்திசாலித்தனம்!

தாயா புள்ளையா ஒன்னடியும் மண்ணடியுமா மனுச மக்களோட ஒன்னா வாழணும்னு நீ ஆசைப்படுதே... நீ மட்டுமா ஆசைப்படுதே? எல்லோருக்கும் அதுதான் ஆசை. ஞாயமான ஆசைதான். மனுச இனத்துக்குரிய இயல்பான ஆசைதானப்பா...

அந்த ஆசையைத்தான் இந்தச் சமூகம் அறுத் தெரியுதே! அண்ணனுக்குத் தம்பியைப் பங்காளியா—பகையாளியா மாத்துதே! தகப்பனையும் மகனையும் வாயும் வயிறுமா வேறு வேறாப் பிரிச்சுப் பிரிச்சுத் துண்டாக்கிப் போடுதே... என்ன செய்றது?

இதை நாம தாங்கித்தான் ஆகணும், இதோ என்னைப்பாரு, நா தாங்கிக்கலியா...? எப்படி வளர்ந்த நாங்க... இன்னிக்கு இந்தப் பிரிவை ஜீரணிச்சுக்கலியா? நீயும் தாங்கித்தான் ஆகணும். வேற வழி இல்லே.

இன்னொரு விஷயத்தையும் கவனி.

இந்தா இருக்கே... வேப்பமரம். இதிலே எத்தனை கெளைக இருக்கு? எத்தனை எலைக இருக்கு? எல்லாமே ஒரே விதையிலேயிருந்து வந்தது தானப்பா.

விதை விதையாவே, செடி செடியாவே இருக்குறதை விட, இப்படி மரமா கெளைகளா பிரிஞ்சு வளர்ந்து, பூத்துக் காய்க்கிறதுதானே நல்லது?

அப்படித்தானப்பா... உங்கய்யா ஒன்னை ஒரு கெளையா பிரிஞ்சு வளரச் சொல்றாரு. அது தப்பா? நல்லதுதானே!

கண்ணைத் துடைச்சுக்க. இனிமே அழக்கூடாது. அசிங்கம்... மீசை மூளைச்ச ஆம்பளை மாதிரி தைரியமா நில்லு. வாழ்க்கையோட கட்டிப் புரளு. உழைச்சுச் சம்பாரி. அம்மனும் சாமியுமா ஆக்கி அவிச்சுச் சாப்பிடுங்க. சந்தோஷமோ வருத்தமோ... நீங்க ஒத்துமையா இருந்து பூத்துக் காய்ச்சு... புது விதைகளை, செடிகளை உரு வாக்குங்க... அதுவும் கெளை கெளையா வெடிச்சு வளரட்டும்..

முகத்தைத் துடைச்சுட்டு, புது மனுஷனா கெளம்பு. கிறுக்குப் பயலைப் போல புலம்பிக்கிட்டு நிக்காதே. நடக்க வேண்டிய ஜோலிகளைப் பாரு. என்ன போய்ட்டு வாரீயா? போ...

எனக்கும் நெறைய ஜோலிக இருக்கு.

*செம்மலர், ஏறக்குறைய 1985*

◆ ◆ ◆

11

# +1 உலகம்

"ஏலேய்... ரெங்கராசு! எங்கே கௌம்பிட்டே, தூரமாவா?"

"அயத்துட்டீகளா அய்யா? நேத்து ஐந்நூறு ரூவா குடுத்தீகள்லே? சைக்கிள் ஒண்ணு பாத்து வாங்கிட்டு வரணும்."

"இன்னைக்கு வேண்டாம்டா. நாளைக்கு வேணும்னா போ."

"என்ன அய்யா?"

"உங்க அக்காவைப் பொண்ணு பாக்க இன்னைக்கு வாராக, திருத்தங்கல்லேயிருந்து."

"எப்ப?"

"சாயங்காலம். வேன்லே வாராக. பேச்சு வார்த்தை நல்லபடியா முடிஞ்சிட்டா... இன்னைக்கே பூ வைச்சிரணும்னு அபிப்பிராயத்தோட வாராக. நீ இருந்தாத்தான் எனக்கு ஒத்தாசையாயிருக்கும்."

"........................"

"என்னலே... உம்முன்னு இருக்கே?"

“இல்லே... ஞாயித்துக்கிழமை. இன்னைக்குப் போனாத்தான் சைக்கிள் வாங்க முடியும். அதான்...”

“ஏண்டா, அக்காவைவிட ஒனக்கு சைக்கிள் முக்கியமா?”

“போய்ட்டு நா மதியத்துக்குள்ளே வந்துருதேன்யா.”

“கரெக்டா வந்துருவீயா?”

“ஆட்டும்யா.”

“அப்ப சரி... போய்ட்டு வா.”

ரெங்கராசு ப்ளஸ் ஒன் படிக்கிறவன். ஒன்பது கிலோ மீட்டர் தள்ளி மேல்நிலைப் பள்ளிக்கூடம். ஒரே டவுன் பஸ். அடிக்கடி காலை வாரி விட்டுவிடும். எங்காச்சும் கோயில் திருவிழா கூட்டம் என்றால், ‘ஸ்பெஷல்’ போட்டு வண்டி போயிடும். போதாக் குறைக்கு அடிக்கடி பிரேக்டவுன். அதை நம்பி படிக்க முடியாது. ஆக, சைக்கிள் இல்லாமல் கதை நடக்காது என்கிற கெடுபிடி.

அய்யாவிடம் சொல்லி நச்சரித்தால்... ‘பார்ப்போம், பார்ப்போம்’ என்று மூன்று மாசத்தை இழுத்து விட்டார். பாவம், அவருக்குச் சிரமம். மண்ணை நம்பிய பிழைப்பு. வானம் பார்த்த பூமியில் விளையாது. விளைந்தால் வியாபாரிகளின் கொள்ளை. நாளும் பொழுதும் இழுபறிப் பிழைப்பு. கைக்கு எட்டினால் வாய்க்கு எட்டாத போராட்டம் நிரந்தரம்.

அதுக்காக? சைக்கிள் இல்லாமல் படிப்பை நிறுத்துவதா? பஸ் வராத அன்றைக்கெல்லாம் லீவ் போட்டால்... படிப்பு நாறிப் போகும்.

கடைசியில்...

‘சைக்கிள் இல்லேன்னா ஸ்கூல் போக மாட்டேன்’ என்ற ஸ்டிரைக் அறிவிப்பு. அதிலும் பருப்பு வேகவில்லை.

ஸ்டிரைக்கை ரெண்டு நாள் நடத்திய பிறகு தான், சிறு அசைவு! நேற்று ஐந்நூறு ரூபாயை இவன் கையில் கொடுத்தார். "என்னத்தையாச்சும் வாங்கித் தொலை... எப்படியும் நாசமாய்ப் போ" என்று வயிற்றெரிச்சலோடு ஆசீர்வதித்தார்.

ராத்திரி பூராவும் ரெங்கராசுவுக்கும் இருப்புக் கொள்ளவில்லை. கண்ணில் உறக்கம் ஒட்டவேயில்லை. ஓசி டி.வி–க்களில் ஓயாமல் பார்த்த விளம்பரங்கள். விதம் விதமான பளபளப்பு சைக்கிள்கள்... விர்விர்ரென்று புயலாய்ப் பாய்கிற நவநவ மாடல்கள். புது மாதிரியான ஹாண்டில்பார். படுத்துக் கொண்டு மிதிக்கிற மாதிரியான லேட்டஸ்ட் வண்டிகள்!

கலர் கலராகக் கனவுகள். றெக்கை கட்டிப் பறக்கிற கனவுகள். ஐந்நூறு ரூபாய் என்கிற அற்பக்கூட்டை பார்த்ததும், கனவுகளின் றெக்கை ஒடிந்து, இறகு இறகுகளாக உதிர்ந்து...

'இந்தக் கொலுவாய்லே (குறை ரூபாய்) ஓட்டை வண்டி, கெழட்டு வண்டி மட்டும்தா வாங்க முடியும்...!'

திருவேங்கடம் மேலபஜாரில் ஒரு சைக்கிள் கடை, சுற்றுப்பட்டிப் பத்து ஊர் ஜனங்களும் சைக்கிள் வாங்க, விற்க விரும்பினால் இங்கு தான் வருவார்கள். அறிவிக்கப்படாத சைக்கிள் சந்தை!

ரெங்கராசு ஆவல் ததும்ப பார்த்தான். ஏழெட்டு வண்டிகள் விற்பனைக்கு வந்திருந்தன. எல்லாமே துருவேறிய வண்டிகள். செங்கழிஞ்ச கறுப்பாக முழித்தன. எண்ணெய்க் குளிப்பு போட்டு வந்திருந்தன. ஹாண்டில் பாரில்கூட நிக்கல் பாலிஷ்கிடையாது. அவலட்சணங்கள்.

கொஞ்சநஞ்ச ஒரிஜினல் பெயிண்ட்டோடு, சற்றுக் கண்முழிப்பாக ஒரு வண்டி வந்திருந்தது. அந்த வண்டிக்காரரர் எண்ணூறுக்கும் மேலே விலை சொன்னார். அவ்வளவுக்குத் தாவி ஏற, இவனுக்குச் சக்தியில்லை.

ஒடிந்து சோர்ந்த மனசுக்கு 'முட்டைப்பசை' போட்டு ஒட்டுக்கட்டு போட்டுச் சமாளித்தான். துருவேறிய சைக்கிள்களை ஆய்ந்தான்... வேறு புகல்? ஏழை சம்சாரி மகன், யானைச் சவாரிக்கு ஆசைப்பட முடியுமா?

அந்தப் பச்சை கலர் ஸீட் வண்டிதான் இவனுக்குக் கொஞ்சம் பிடித்தது. ரிம்களில் நிக்கல் மினுக்கியது. டயர் டியூப் இன்னுடம் ஆறு மாசத்துக்குத் தாக்கு பிடிக்கும். பெடல் பரவாயில்லை. முக்கோணத்தில் கம்பெனிப் படம் தெரிகிறது. செயின் தேய்ந்திருந்தாலும் ஃபிரீவீலில் உயிர் இருந்தது. பெடலைப் பின்பக்கமாகச் சுற்றினால் சத்தம் வந்தது.

தரகர் இவனிடம் ஏற்கெனவே நிலவரத்தை விசாரித்திருந்தார்.

"சைக்கிள் வேணும்னா... எம்புட்டுக்குள்ளே பாக்கே தம்பி?"

"சும்மா... ஒரு ஐந்நூறுக்குள்ளே."

"அம்புட்டுத்தானா?"

தரகர் எத்தனை தான் பெருஞ்சத்தமாகச் சிரித்து மழுப்பினாலும், ஏளனம் துருத்திக்கொண்டு உறுத்தியது முள்ளைப் போல. 'வக்கத்த பயலாயிருக்கான். இவன் தரத்துக்கு இது போதும்' என்ற முடிவில்... அந்த ஓட்டை வண்டியை ஓகோ ஆகாவென்று புகழ்ந்து தள்ளினார்.

“தம்பி... வண்டி பழசுதான். ஆனா கனத்த வண்டி. ஸ்ட்ராங்கான ஸ்பேர் சாமான்ங்க. நல்லா ஒழைக்கும். எளவட்டபுள்ளே நீ ஒன்னோட முரட்டடிக்கு இந்த வண்டிதான் ஈடுகொடுக்கும். தோதான அயிட்டம்.”

அவர்பாட்டுக்கு அள்ளி விட்டார். எதுவும் இவன் மனசில் ஒட்டவில்லை. ‘இந்த லட்சணங் கெட்ட சைக்கிளைக் கட்டி மாரடிக்க வேண்டியதாகி விட்டதே!’ என்ற அவலத்தில் சிணுங்குகிற மனசு. வேறு வழியற்று, சூழலுக்குப் பணிகிற நிர்ப்பந்தம்.

ரெங்கராசு சைக்கிளை வெவ்வேறு கோணங்களில் நின்று பார்த்தான். அடிக்கடி பெடலைச் சுற்றினான். வீல்களில் ‘ஆச்சல்’ இருக்கிறதா என்று நுட்பமாகப் பார்த்தான். பிரேக்கைச் சரிபார்த்தான். சீட்டை அமுக்கிப் பார்த்தான். உற்று உற்றுப் பார்த்தான் ஒவ்வொன்றையும். ரெண்டு மூன்று தடவை ஓட்டிப் பார்த்தான்.

சைக்கிள்காரரர் அந்த ஓட்டைச் சைக்கிளுக்கு ‘அறுநூற்றைம்பது ரூபாய்’ என்று விலையின் உச்சி முகட்டில் ஏறி நின்றார். இவன் சார்பாகத் தரகர் பேரம் பேசினார். மடித்த துண்டுக்குள் இருவரும் உள்ளங்கைகளை இணைத்து மறைத்துக் கொண்டு வாதாடினர். பெரிய வாதாட்டம்... சண்டை போடுகிற மாதிரி கோபமும் சீற்றமு மான வாதாட்டம்... தொண்டை கிழியக் கத்துவார்கள். சட்டென்று காதுக்குள் கடித்துக் கொள்வார்கள். பார்த்திருக்க குபீரெனக் கத்துவார்கள். பயங்கரமான வாதாட்டம்!

‘பேரம் பேசி ஒரு வியாபாரத்தை முடிப்பது என்றால், இத்தனை பெரிய மல்லுக்கட்டா?’—ரெங்கராசு திகைத்துக் குழம்பி விட்டான்.

வாங்கப்போகிற தரகு பத்தோ, பதினைந்தோ தெரிய வில்லை. அதற்காக இந்த ஆளிடம் இத்தனை சத்தம்! நடிப்பு, பாய்ச்சல், கொஞ்சல்... பத்து ரூபாய்க்கு ஒரு மனுஷனுக்கு இத்தனை பாடுகளா?

வாழ்க்கையின் மூர்க்கம் லேசாகத் திரைவிலக்கி முகம் காட்டுவதைப் போல அவனுக்குள் ஒரு பிரமை.

கடைசியில்...

நானூற்றி எழுபத்தைந்து என்று விலை தகைந்தது.

தரகருக்கு பதினைந்து ரூபாய். வெள்ளை பேப்பர்கள் ரெண்டு வாங்க வேண்டியிருந்தது. பத்திரம் எழுதுவதுபோல, பழகிப்போன வாசகத்தை யந்திரமாகத் தரகர் சொல்ல... இவன் எழுதினான்.

'இன்ன ஊரைச் சேர்ந்த இன்னார் மகன் இன்னார்... இன்ன வருஷம், இன்ன மாதம், இன்ன தேதியில்.. இன்னார் மூலம் இன்ன விலைக்கு... இன்ன சைக்கிளை இன்னார் மகன் இன்னாரிடமிருந்து...' என்று நீள நீளமான வாக்கியம். தரகர் உட்பட மூவர் கையெழுத்து. சாட்சிக்கு பக்கத்திலிருந்து ஒருவர்!

'களவு சைக்கிள் என்று நாளைக்கு ஒரு வம்பு வந்துவிடக்கூடாதே' என்ற வழக்கமான முன்னெச்சரிக்கை!

சைக்கிளை வாங்கி, எல்லாச் சடங்குகளும் முடிந்து புறப்படும்போது ரெங்கராசு சட்டைப் பையைத் தட்டிப் பார்த்தான். முப்பத்தைந்து பைசா மட்டுமே கிடந்தது. பூராவும் காலி.

மதியம் வந்து விட்டது. சைக்கிளின் நிழல் சக்கரங்களுக் குள்ளே இழுபட்டது. மிதித்துக் கொண்டே யிருந்தவனுக் குள் சைக்கிள் கவலைகள்.

இந்தக் கெழட்டு சைக்கிள் இன்னும் என்னென்ன செலவுகளை இழுத்து வைக்கப் போகுதோ... அய்யா கூவக்காடு (எண்ணற்ற கூப்பாடு) போடுவாரு... "இந்த ஒட்டை உடைசலுக்கா ஐந்நூறு ரூவா? இளிச்வாயன்னு நெனைச்சு ஒந்தலையிலே எவனோ மொளகா அரைச்சுட்டான்... போ" என்று 'தங்கு, புங்' கென்று குதிப்பார்.

வசவு நாறிப்போகும்.

வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான். வேறு வழி?

இந்தக் கவலைகள் ஒரு பக்கம் அரித்தாலும் ரெங்கராசு மனசில் ஒரு திருப்தி. ஒரு காரியம் முடித்த சந்தோஷம். மலையைப் புரட்டித் தோளில் சுமந்து விட்ட மாதிரியொரு சாகச உணர்வு!

**ஊ**ருக்குள் நுழைகிறபோது....

களத்தில் நிற்கிற சாம்பல் நிற வேன். 'வந்துட்டாகளா...?'

பக்கென்கிற மனசு. அய்யா கடிச்சுக் குதறிருவாரு. பதைப்புடன் சைக்கிளை மிதித்தான். வீட்டுக் கடவுக்குள் சைக்கிளை நிறுத்திவிட்டுப் பரபரக்கிற மனசோடும் துயங்கிய நிலையிலும் உள்ளே போனான். அய்யா அக்கினிப் பிழம்பாக இவனைப் பார்த்தார். நெற்றிக்கண் திறக்காத குறைதான்.

விருந்தாளிகள் வந்திருக்கிற நேரத்தில் எதுவும் சத்தம் போட முடியவில்லை அய்யாவால். ஆத்திரமாக மட்டியைக் கடித்துக் கொண்டார்.

பெண் பார்க்க நிறையப் பேர் வந்திருந்தனர். வீடு நிறைய ஜனம். ஏழெட்டுப் பெண்கள், நாலைந்து ஆண்கள், ஒன்றிரண்டு பட்டுப் பாவாடைகள்.

அக்காவைத் தண்ணீர் எடுக்கக் குடத்துடன் போகும்படிச் சொன்னாள், அம்மா. கூட ரெண்டு திருத்தங்கல் பெண்கள் (நடை பார்க்கிறார்களாம்.)

அக்காவிடம் சாங்கோபாங்கமாகப் பேச்சுக் கொடுக்கின்றனர். கூச்சத்தில் குடையைக் கண்ட பசுவாக வெருளுகிற அக்கா. பேசும்படி நச்சரிக்கின்றனர் (திக்குவாயா இல்லையா என்று பார்க்கிறார்களாம்). ஒரு சிறுமி அக்காவின் சடையை விளையாட்டுப் போல் சிரித்துக் கொண்டே இழுத்துப் பார்க்கிறாள்.

அக்காவை அவர்கள் பாடாய்ப் படுத்துவதாக இவனுள் ஒரு கொதிப்பு. சிக்கிக் கொண்ட கோழிக் குஞ்சை உயிரோடு வைத்துக் கொத்துகிற பருந்தின் குரூரம்.

இவனுக்குள், வாங்க நினைத்த சைக்கிளை அப்படியும் இப்படியுமாகச் சோதித்த ஞாபகம்.

அக்காவும் சைக்கிளும் ஒன்றா? உயிரில்லாத ஒரு பொருளைப் போலவா உயிரும் மனமும் மானமுமுள்ள ஒரு மனுஷியையும் நடத்துவது?

இவனுக்குள் பிடிபடாத குழப்பம். பீரிடுகிற கோபம். தாளமுடியாத எரிச்சல். அய்யா முகத்தைப் பார்க்கிறான். அவர் கண்களிலும் அடிபட்ட பறவையின் சோகம்.

தலையிருக்க வாலாடக் கூடாது. அய்யா இருக்கும்போது இவனாக எதுவும் பேசக்கூடாது. அய்யாவுக்குத் தெரியாத விஷயமா?

சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

கல்யாணமாகி விட்டால்... அக்கா இந்த வீட்டை விட்டு ஒரேயடியாகப் போய் விடுவாள். பிறந்து வளர்ந்து முகர்ந்த வீட்டு வாசத்தை மறந்து விடுவாள். கசப்பான நிஜம். ஓர் இழப்பு உணர்வு உள்ளுக்குள் கற்றைச் சோகமாக அறைந்தது. அக்காவைப் பரிதாபமாகப் பார்த்தான்.

அய்யா இவனைக் கடை கண்ணிகளுக்குப் போய் வரும்படி துரத்தினார். ஓடியாடி வாங்க வேண்டிய சாமான்கள்... அங்கிட்டும் இங்கிட்டுமாகப் பறந்து கொண்டிருந்தான்.

அதற்குள் பேச்சுவார்த்தை முடிந்துவிட்டது. பதினைந்து பவுன் நகை... ரொக்கத்தில்தான் இழுபறி... ஐயாயிரமா ஏழாயிரமா என்கிற பேரம். வாதாட்டம்.

இதை நேருக்கு நேராக, தன் சொந்த அக்காவுக்கே நிகழ்வதைப் பார்த்துணர்ந்தபோது... மனசின் அடியாழம் வரை அதிர்ந்து போய்விட்டது.

ஓட்டை சைக்கிளுக்கு இருக்கும் மதிப்புக்கூட உயிருள்ள அக்காவுக்குக் கிடையாதா? அக்கா என்கிற மனுஷி இழிந்தவளா?

பணத்தை எடுத்து எண்ணிக் கொடுத்த பிறகுதான் சைக்கிள்மீது கைவைக்க முடிந்தது. இங்கு என்னடா வென்றால், அக்காவைத் தரணும்னா, நாமதான் பதினைந்து பவுன் நகையும், ரொக்கமும் தரணுமா? இத்தனையும் தந்து 'தள்ளி' விட வேண்டியவளா அக்கா? இது என்னடா கொடுமை! லாப நோக்குள்ள ஏவாரத்தைவிட இழிவான விஷயமாயிருக்கே... இதுவா இங்க வாழ்க்கை முறைமை...? இது மனுசத்தன்மையா?

சமூகத்தின் குரூர முகத்தை நேருக்கு நேராகத் தரிசித்த வேதனையில்... அந்த ப்ளஸ் ஒன் பையன்.

*ஆனந்தவிகடன், 13.11.1994*

◆ ◆ ◆

# கறிவேப்பிலை

**லா**ரியை செட்டில் நிறுத்தியாயிற்று. சம்பளம் வாங்க வேண்டும். முதலாளி வரும் வரை காத்திருக்க வேண்டும். பசிக்கிறது. குழந்தைகளைப் பார்க்க மனசு ஏங்கித் தவிக்கிறது. ஏழு நாட்களாகி விட்டது. நிறை மாதமாயிருந்த மங்களம் எப்படியிருக்கிறாளோ... பக்கத்திலிருந்து கவனித்துக் கொள்ளக் கூட பொழுதில்லை. மனசு வீட்டிற்கு சிறகு விரித்து விடத் துடித்தாலும், சம்பளத்தை வாங்கணும் என்கிற பிரக்ஞை காலைப் பிடித்திழுத்தது.

'இன்னா சம்பளம்... பொல்லாத சம்பளம்... ' என்று சலித்துக் கொள்கிறபோது மனசை ஒரு சோகம் அழுத்திப் பிசைந்தது.

அரசாங்கப் பேருந்தில் டிரைவராக பணியாற்றிய போது, முதல் தேதியில் கௌரவத்துடன் வாங்கிய கை நிறைந்த அந்த சம்பளம் எங்கே? இவன் பணிந்து குழைந்து, கெஞ்சிக் கூத்தாடி வாங்குகிற இந்தப் பிச்சைச் சம்பளம் எங்கே? ச்சே!

லொடலொடத்த இரண்டு லாரிகளை வைத்துக் கொண்டு மல்லாடும் இந்த முதலாளிக்கு உலகமே

உள்ளங்கைக்குள் சுழல்வதாக நினைப்பு. அதிகாரம் பண்ண ஆசைப்படும் கர்வம்...

காக்கிச் சட்டைக்குள் கைவிட்டு பீடியை எடுத்தான். நுனிப் பல்லில் வைத்து, பீடி நுனியை கொறித்துத் துப்பிவிட்டு பற்ற வைத்து புகையை உள்ளுக்குள் இழுத்தபோது... நெஞ்சு எரிந்தது.

காய்ந்து பரட்டையாகியப் போன முடியை சுய பரிதாபத்துடன் கோதிக் கொண்டான். வேர்வையும் எண்ணெய்ப் பிசுக்குமாய் அழுக்காகி கனத்துப்போன சட்டையையும், நிறத்தையே இடிந்து போன கைலியையும் பார்த்துக் கொண்டபோது, மனசுக்குள் ஒரு கசப்பான உணர்வு கசிந்தது.

"என்ன மலைச்சாமி, இப்பத்தானே எறங்குனே, வீட்டுக்குப் போகலே?"

என்ற விசாரிப்பில் நிமிர்ந்தான். லோடுமேன் ராமசாமி தான் கேட்டது. "போவணும்" என்று சலிப்புடன் எதிரொலித்தான்.

"சம்பளம் வாங்கணுமில்லே... முதலாளியை இன்னும் காணலே" என்று விருப்பமின்றி பதிலளித்தான்.

மலைச்சாமி புக்கிங் ஆபீஸில் கிடந்த பார்சல்கள் மீது உட்கார்ந்திருநதான். அதோ, முதலாளி அறை. மேஜை, நாற்காலி, பேப்பர், பேனா. சுவரில் படங்கள். பெரிய சைஸ்களில் ஸ்வாமி படங்கள்.

இவர் எந்த ஆட்சிக் காலத்தில் சம்பாதித்து, லாரி வாங்கினார் என்பதை மவுனமாய் அம்பலப்படுத்தும் ஒரு தலைவரின் படங்கள்.

அந்தப் படத்தில் மிக சிறுசான எழுத்துக்கள். கூர்ந்து பார்த்த மலைச்சாமி, அந்தக் கடுகு எழுத்துக்களைக்கூட வாசிக்கிறான்.

இவ்வளவு கூர்மையான பார்வையுள்ள தனக்குத் தான் அப்படிப்பட்ட தண்டனை கிடைத்தது என்று நினைத்த போது, அவன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

பார்வையில் யாருக்கு கோளாறு? டாக்டருக்கா? பேருந்து நிர்வாகத்திற்கா?

மனம் கசந்து சிரித்தது. நேரம் நகர்ந்தது. அவனுக்குப் புளித்துப் போயிற்று. வீட்டுக்குப் போகணும்.

ஆபீஸ் பாயைக் கூப்பிட்டான்.

"தம்பி, நாளைச் சாயங்காலம் வந்து சம்பளம் வாங்கிக்கிறேன். முதலாளி வந்தாச் சொல்லிடு."

நகரமே வெறிச்சோடிப் போய் கிடந்ததை மலைச்சாமி யின் டிரைவர் மனம் உணர்ந்தது.

பரபரத்து அடர்ந்து காணப்படும் மனிதர்களும் கூடுத லாக ஆட்டோக்களும், லாரிகளும், கார்களும், சைக்கிள் களும், வண்டிகளும் நகரத்தையே அதிர வைத்துத்தான் ஓடிக் கொண்டிருக்கிறது.

கூட்டத்துக்கும் குறைவில்லை,. நெரிசலுக்கும் குறைய வில்லை. ஆர்ப்பாட்டமாய் சப்த பெரு வெள்ளமாய் நகரம் கொந்தளித்த போதிலும் டிரைவருக்குரிய உள்ளுணர்வு துல்லியமாய் உணர்ந்தது, வெறிச் சோடிக் கிடப்பதை!

ஆமாம், பேருந்துகள் ஓடவில்லை. சிட்டி பஸ்கள் கூட தென்படவில்லை. தெருவின் சுவர்களில், தட்டிகளில் நீள நீளமான வால்போஸ்டர்கள்.

ஸ்டிரைக்கைச் சொல்கிற போஸ்டர்கள். மக்களின் தார்மீக ஆதரவை அன்புடன் கோருகிற போஸ்டர்கள்.

மலைச்சாமியின் கண்கள் போஸ்டரிலிருந்து. வன்மத்துடன் விலகிக் கொண்டன.

வேலையிலிருந்து என்னைப் பிடரியைப் பிடித்து தள்ளியபோது இந்தப் போராட்டப் புலிகள் என்ன கிழித் தார்கள்? தட்டிப் போர்டுகளில் வெறும் கண்டனத்தைத் தெரிவித்துவிட்டு தட்டிக் கழித்தனரே... இப்போது மட்டும் போராட்டமாக்கும்?

இவங்க லட்சணம் தெரிஞ்சுதானே... எந்தப்பய சங்கத்துக்கும் அஞ்சு பைசாகூட தரமாட்டேனே! வேலையிலே இருக்கிற காலத்துலே சம்பளம் வாங்கிட்டு வெளியே வந்தபோதும் ஒவ்வொரு சங்கத்துக்காரனும் 'சந்தா,' 'நன்கொடை' என்று கலெக்ஷனில் நிப்பானுக. நா எந்தப் பயக்கிட்டேயும் சிக்க மாட்டேன். ஒரு பைசா தரமாட்டேன். எதுக்குத் தரணும்? இவங்களாலே என்ன ஆகும்?

மலைச்சாமிக்கு ஒரு டீ சாப்பிடணும் போலிருந்தது. மனசுக்குள் அப்படியோர் தாகம். வறட்சி.

டீக்கடைக்குள் நுழைந்தான். ஆர்டர் தந்தான். பக்கத்தில் ஒருவர் மாலைப் பத்திரிகையை அகலமாக விரித்துக் கொண்டு சூடாக மேய்ந்தார். மலைச்சாமி அசிரத்தையுடன் கழுத்தை நீட்டினான்.

சகஜ வாழ்வை சீர்குலைக்கும்
பஸ் தொழிலாளர்
போராட்டத்துக்கு
அரசு பணியப்போவதில்லை
முழு பலத்துடன் சந்திக்கும்!
மந்திரி ஆவேசம்.

என்ற கொட்டை எழுத்துக்கள் மலைச்சாமிக்கு குதூகலத்தை அளித்தன. ஒரு டீ குடித்த உற்சாகம் உடம்பெங்கும் பரவியது. மனம் துள்ளியது.

"இந்தாங்கண்ணே டீ" என்றான் கடைப்பையன்.

குழந்தைகளுக்கு வேண்டிய பிஸ்கட் மற்றும் தின்பண்டங்கள் வாங்கிக் கொண்டு வீட்டுக்குக் கிளம்புகிறான். திருப்தியின் நிம்மதியில் மனம் இலேசாகி விட்டது.

வன்மம் கொண்டு தாக்குவதைப் போல வெய்யில் உஷ்ணத்தைப் பொழிந்தது. உடம்பு அழுது வியர்வையைப் பெருக்கியது. நடையை எட்டிப் போட்டான். இதோ நம்ம சந்து. அதோ நம்ம வீடு...

நீரை ஊற்றித் துவட்டியதில் உடம்பின் சுமையெல்லாம் விலகி, ஒரு சுகம் தெரிந்தது. மனதில் தெம்பும், புதிதாய் பிறப்பெடுத்துவிட்ட உணர்ச்சியும் உண்டாகியிருந்தது.

மங்களம் சாப்பாடு போட்டுவிட்டு, விசிறி எடுத்து வந்தாள். மலைச்சாமி சோற்றைப் பிசைந்து உண்ண ஆரம்பித்தான்.

நாக்கு ஏதோ அபிப்ராயம் சொல்ல, அது அவனுக்குப் புரிய மறுக்க, மனைவியை நிமிர்ந்து பார்த்தான். மங்களம் உப்பிய வயிறுடன் உட்கார முடியாமல் நின்றவாறே விசிறிக் கொண்டிருந்தாள்.

"என்னங்க... நல்லால்லியா?"

"நல்லாதானிருக்கு. உப்பு, புளிப்பு, காரம் எல்லாம் சரிதான். ஆனா, என்னவோ... ஒரு குறை தெரியுது. என்னென்னு புரியலே?"

மங்களத்தைப் பார்க்க அவனுக்குப் பொங்கியது. வயிற்றில் உயிர்ச்சுமையையும், உடம்பில் சோர்வையும் சுமந்து கொண்டு புகையோடு மல்லாடி சமைத்து வைத்த சமையலில் குற்றம் காண அவன் மனம் கூசியது. ஆனால், அதை அவள் இலேசாக எடுத்துக் கொண்டு மெலிதாக சிரித்தாள்.

"ஓ... அதுவா? என்னவோ பஸ் ஸ்டிரைக்காமே. கடைகள்லே கருவேப்பிலை வரலை. அதான் அப்படியிருக்கு."

"சாப்பிடறப்போ பல்லிலே சிக்கினா உருவி கீழே தூக்கிப் போடுற கருவேப்பிலைக்கு, இத்தனை வாசமா? அட."

"அதென்ன, அப்படி லேசாச் சொல்லிட்டீக? மனுஷன்தான் மனுஷனா இருக்க மாட்டான். மத்தது கள்ளாம் அததுக்குரிய பலனை குடுக்கத்தான் செய்யும்."

அவன் மனம் வியப்பில் விம்மியது. கருவேப்பிலையின் அற்பமும், பயன்பாட்டு அற்புதமும் அவனை நுட்பமாக பாதித்து பிரமிக்க வைத்தது.

காம்பவுண்டுக்கு முன் ஒரு ஜீப் வந்து உறுமிவிட்டு நின்றது. அவனுள் திகைப்பு. இந்த ஜீப் ஏன் இங்கு வர வேண்டும்?

அரசுப் பேருந்து நிர்வாக ஜீப். கேட்டுக் கேட்டுப் பழகிப் போய்விட்ட அதே சப்தம்.

எதிரும் புதிருமாய் இரண்டு வரிசையில் அணி வகுத்திருந்த வீடுகளில் இவன் வீடு மையத்திலிருந்தது. சாப்பிட்ட கையோடு எழுந்து எட்டிப் பார்த்தான். மனம் திக்கென்றது. அதே மேனேஜர்!

ஜீப்பை விட்டு இறங்கி காம்பவுண்டுக்குள் வருகிறார். நீரும் சாக்கடையுமாக ஒழுங்கில்லாமல் கிடக்கும் பாதையில் முகச்சுழிப்புடன் நடந்து வருகிறார். ஏன் வருகிறார்? எதற்கு?

ஒரு நாள் மலைப்பொழுதில் அழைத்து, "நாளைக் காலையிலே மெடிக்கல் செக்கப்புக்கு போய்ட்டு வாங்க."

"ஏன் சார், பத்து வருஷ சர்வீசுக்குப் பிறகு எதுக்கு சார் மெடிக்கல் செக்கப்?"

"சும்மா ஒரு ஃபார்மாலிட்டிக்குத்தான். பயப்படாதீங்க. போய்ட்டு வாங்க."—

என்று நயம்பட இனிப்பான வார்த்தைகளுடன் அனுப்பி வைத்த அதே மேனேஜர்—

மறு வாரத்தில் அழைத்து டாக்டர் சர்டிபிகேட்டை காட்டி "உங்களுக்கு கண் பார்வையிலே கோளாறு இருக்குன்னு டாக்டர் சர்டிபிகேட் வந்திருக்கு... அதனாலே நீங்க டிஸ்மிஸ்."

என்று மிகச் சாதாரணமாக நெஞ்சில் வேலைப் பாய்ச்சிய அதே குரூரக் கொலைகாரன்—

ஆணிவேரில் வெட்டுண்டவனைப் போல அதிர்ந்து உள்ளுக்குள் நொறுங்கிச் சிதைந்து, "இதென்ன சார் அக்கிரமமாயிருக்கு? கண்லே கோளாறுன்னா ஆஸ்பத்திரிக்குப் போகணும். வேலையை விட்டுட்டு வீட்டுக்குப் போன்னு சொன்னா, என்ன சார் அர்த்தம்?" என்று அக்கினிப் பிழம்பாய் கேட்ட போது—

"சர்க்கார் உத்தரவுக்கு அர்த்தம் சொல்ல எங்களால் முடியாது. அமுல்படுத்தத்தான் முடியும்."

"பொழைப்புலே தீயள்ளிப் போடுறீர்களே சார்... இது நியாயமா?"

"நியாயத்தைப்பற்றி ஆராய்ச்சி நடத்த எனக்கு நேர மில்லை. ப்ளீஸ். கெட் அவுட்..."

பின்னும் தயங்கி தேம்பி நின்றபோது ராட்சஸ குரலில்—

"ஐ ஸே... யு கெட் அவுட்," என்று நெருப்பாகச் சீறி விரட்டினானே, அதே ராட்சஸ மேனேஜர்!

இப்ப எதுக்கு இங்கே வர்றான்? என்ன காரணத்துக்காக வர்றான்? இதோ.... வந்து விட்டான்!

"வாங்க சார்..."

"என்ன மலைச்சாமி, சௌகரியமாயிருக்கிறீர்களா."

"பயிரைப் பிடுங்கி எறிஞ்ச மாதிரி பாதியிலே தூக்கி எறிஞ்சிட்டீங்க. எப்படி சார் சௌகரியமாயிருக்க முடியும்?"

"சரிசரி... பழசையே நெனைச்சுக்கிட்டிருந்தா எப்படி? நாட்டுலே தெனம் ஆயிரம் புதுசு நடக்குது... உள்ளே வரலாமா...?"

வீடு நிமிஷத்திலே பரபரப்படைந்தது. மலைச்சாமி அவசரமாகக் கையைக் கழுவ— மங்களம் அவசரமாக உணவுத் தட்டுகளை ஒதுக்கி வைத்து... தூசி படிந்து பழைய நாற்காலியை தூக்கிப் போட்டு துணியால் துடைத்தாள். அவளுக்கு மூச்சிரைத்தது.

"உட்காருங்க சார்..." உள்ளே வன்மம் அக்னியாய் ஜ்வாலை வீசினாலும்... வெளியே ரொம்பக் குழைந்தான்; குளிர்ச்சியாகப் பணிந்தான்.

அந்நேரம் தான் மூத்த பையன் நுழைந்தான்.

"டேய், கரிகாலன் கடையில் ஒரு கலர் வாங்கிட்டு வா... ஓடு..."

அவன் வீசிய பந்து போல மோதிய வேகத்தில் பாய்ந்து ஓடினான்.

மேனேஜர் வீட்டைச்சுற்றி பார்வையிட்டார், மூலை முடுக்கெல்லாம் பரவிக் கிடந்த வறுமையின் தடயங்கள்.

ஓட்டுவீடு. ரொம்பப் புழுக்கமாயிருந்தது. ஏ.ஸி.க்குப் பழகிப் போன உடம்பு வியர்த்துக் கொட்டியது. உள்ளுக்குள் துரிதமானார்.

"மலைச்சாமி... ஃபஸ்ட்லே நா வந்த விஷயத்தைச் சொல்லிடுகிறேன்."

"சொல்லுங்க சார்!"

"ஒன்னோடொன்று சண்டை போட்டுக்கிட்டு, நியாய மில்லாத டிமாண்ட்ஸை வைச்சு ஸ்ட்ரைக் பண்றாங்க. எவ்வளவோ பேசிப் பார்த்தாச்சு, ரொம்ப அடம் பண்றாங்க.."

"இந்த யூனியன்காரங்களே இப்படித்தான் சார். ஏமாளி ஓர்க்கர்ஸை வைச்சுப் பொளப்பு நடத்து வாங்க, அதுலே லேசா தளர்ச்சி கண்டா, அப்ப முறுக்கேத்தி வைக்கிறதுக்காக... காரணமில்லாம ஸ்டிரைக் பண்ணி ரொம்ப வீரமா பேசிக்கிட்டு இருப்பாங்க."

"யெஸ். யு ஆர் வெரி கரெக்ட், வண்டிகள் எல்லாம் அப்படியே டிப்போவிலே கெடக்கு. ஜனங்க பஸ் போக்குவரத்து இல்லாம ரொம்ப அவஸ்தைப் படுறாங்க. சர்க்கார் எப்படியும் ஜனங்களுக்கு உதவி செய்ய ஆசைப்படுது. அதனாலே எப்படியாச்சும் ஓர்க்கர்ஸை

கன்வின்ஸ் பண்ணி, மொபலைஸ் பண்ணி, ஒரு சில ரூட்ஸ்லேயாவது வண்டிகளை விடணும்னு முடிவு."

"பேஷாச் செய்யலாம் சார்."

"இந்த முயற்சிக்கு ஒத்துழைக்குற ஒர்க்கர்ஸை பர்மனன்ட் பன்றதா சர்க்கார் உறுதி சொல்லியிருக்கு... நீங்களும் வரணும். வர்ரீங்களா?"

"ஓஹோ.. அப்படியா சங்கதி! யானைக்கு வந்த காலம் முடிந்து, இப்போது பூனைக்குக் காலம் வந்திருக்காக்கும்? ஊஹு¯ம்... இப்பத்தான் இந்த மலைச்சாமி உங்க கண்ணுக்குத் தைரிய வந்தானாக்கும்...?"

"என்ன சொல்றீங்க, மலைச்சாமி?"

"சார் எனக்கு கண்பார்வை சரியில்லைன்னு நீங்க தானே சொல்லி வீட்டுக்கு அனுப்பினீங்க."

"அதையே திரும்பித் திரும்பி சொன்னா, எப்படி மலைச்சாமி? நானே உங்க வீடு தேடி வந்து கேட்டப் புறமும் நீங்க அதைச் சொல்லலாமா...? ஒரு கேரண்டி சொல்றேன்... ஸ்டிரைக் முடிஞ்ச பிறகு உங்க வேலையை பர்மனன்ட் பண்றதுக்கு நா சொந்த முறையிலே பொறுப்பு எடுத்துக்கறேன்... என்ன சொல்றீங்க?"

"சார், இப்போ தனியார் லாரியிலே ஓடிக்கிட்டிருக்கி றேன். இந்த வேலையை எப்படி சார் விடுறது? அப்புறம் வவுத்துப் புள்ளையை நம்பி, மாடு மேய்ச்சிக்கிட்டிருந்த பையனைக் கொன்ன கதையாப் போயிடுமோன்னு பயமாயிருக்கு."

"வீணா பயப்படாதீங்க. என்னை நம்புங்க. உங்க வேலையை பர்மனன்ட் பண்றதுக்கு நான் பொறுப்பு. உங்க

வீட்லே பழைய வெளிச்சம் வர்ரதுக்கு, நா ஏற்பாடு பண்றேன். சரின்னு சொல்லுங்க."

"யோசிச்சிச் சொல்றேன் சார்..."

"ஓ.கே. நாளைக் காலையே ஜீப் அனுப்பறேன். அதுக்குள்ளே யோசிச்சி ஒரு முடிவுக்கு வாங்க. அது நல்ல முடிவாயிருக்கட்டும்... வர்றேன் மலைச்சாமி..."

அவர் புறப்பட்டுப் போய்விட்ட பின், மூத்த பையன் கலருடன் வந்து சேர்ந்தான்.

மலைச்சாமி வசந்தமாயிருந்த பழைய நாட்களின் போதையில் ஆழ்ந்தான். டெரிக்காட்டான் காக்கி ஸர்ட் உடலை மென்மையாய் கவ்வ... என்ன கம்பீரமாய் வண்டியில் ஏறுவான்.

வெளிச்சத்தில் நிரம்பிய வீட்டில் குழந்தைகள் சிட்டுகளாக என்ன குதூகலமாக இருந்தனர். மங்களம் அப்போது என்னமாய் இருந்தாள்...

இப்போது—

நல்ல சேலையில்லை. நல்ல சோறு இல்லை. கைக்கு எட்டினால் வாய்க்கு எட்டமாட்டேன் என்கிறது. 'வாழ்க்கையின் நல்ல நிலையில் இருக்கிறோம்' என்கிற அந்த மனநிறைவு சரிந்து... இப்போது அவலமாய்... தாழ்மையாய்... நிம்மதியின்மையாய்... கனத்த சுமையேறிய ஊனப்பட்ட மனசாய்... பிச்சுப்பிடுங்கும் வறுமையாய்...

இந்த அவலத்திற்கு ஒரு முடிவு வருகிறதா? இந்த மானேஜர், சொன்னபடி நடந்து கொள்வானா?

அவன் நாற்காலியில் அமர்ந்தான். மனசில் அலைபாயும் நினைவுகள். ஒன்றன் பின் ஒன்றாய்த் தோன்றித் தொடரும்

நினைவுகள். நிஜத்தின் கரையைத் தொட்டுத் தொட்டு திரும்பி உள்வாங்கும் நினைவுகள்... பின்னும் ஏதோ ஒரு புதிய எல்லையைத் தொட்டுவிடப் போகிற ஆவேசத்தில் பாய்ந்து வரும் நினைவுகள்...

“என்ன யோசிக்கிறீக...”— மங்களம்தான் கேட்டாள். அவள் முகத்தில் ஒரு நிழல் படிந்திருந்தது. சம்மதமின்மை யில் மனசுக்குள் புழுங்கிக் கொண்டிருந்தாள். சம்பவிக்க இருக்கிற உடன்பாடற்ற காரியத்தை தடுக்க முடியாத தர்மசங்கடமும், வருத்தமும் அவள் முகத்தில் தெரிந்தது.

“என்ன செய்யறதா உத்தேசம்?” மீண்டும் கேட்டாள். குரலில் உயிரில்லாமல்... ஒரு திகில்தான் இருந்தது.

“வீட்டுக்கு வர்ர வெளிச்சத்தை வேண்டாம்னு எதுக்குச் சொல்லணும்?” கனவு நிலையில் பேசுகிறவனைப் போல எங்கோ பார்த்துக் கொண்டு கூறினான்.

“அதுக்கா... கருங்காலியாவா மாறுகிறது?”

“கருங்காலி செங்காலிங்கிறதெல்லாம் அர்த்தமில்லாத பினாத்தல். அவனவன் பொழைக்கிறதுக்கு வழியைப் பார்க்கணும். வாய்ச்ச வழியை கச்சுன்னு பிடிச்சிக்கணும்...”

“அதுலே நியாய அநியாயம் பார்த்துதானே செய்யணும்?”

“ஸ்டிரைக் பண்றவங்க ஞாயமாவா போறாங்க? வம்புதானே பண்றாங்க?”

“ஸ்டிரைக்குங்கிறது விளையாட்டா? பொழைப்பை பணயம் வைக்கிற சமாச்சாரமாச்சே. அப்பேர்பட்ட காரியத்தை வம்புக்கு பண்ணமாட்டாங்க, வேற வழியில்லாமத்தான் செய்வாங்க.”

"என்னை அநியாயமா டிஸ்மிஸ் செஞ்சாங்களே, அப்ப இந்த வில்லாதி வில்லன்ங்க... வீரப்பத்திரன் பேரன்ங்க எங்க போனாங்களாம்...? என்ன செஞ்சாங்களாம்?"

"நீங்க அவங்களைப் பொருட்படுத்தலே; நம்பலே. அலட்சியம் பண்ணுனீங்க... அவங்களும் உங்களை காப்பாத்த நினைக்கலே..."

"என்ன இது... நீ என்னையே குத்தம் சொல்லிப் பேசிக்கிட்டிருக்கே? நீ எனக்கு பெண்டாட்டியா, இல்லை..."

பொறுமையிழந்து போன ஆத்திரத்தில் வார்த்தைகள் நெருப்பாய் சீறின.

அவள் பெரிய மனுஷித்தனமாக சிரித்தாள். தாய்மை நிறைந்த சிரிப்பு; சீண்டல்களை மவுனமாக உள்வாங்கிக் கொண்டு மென்மையாய் வெடித்த சிரிப்பு.

**சொ**ன்னபடி 'மொபலைஸ்' பண்ண மேனேஜரால் முடியவில்லை. இருபது பேர்கள் தான் தயாராகியிருந்தனர். அதில் மலைச்சாமிதான் கொஞ்சம் இளவயசு. மீதியெல்லாம் கிழட்டுக்கட்டைகள். மாஜி ராணுவத்தினர், ரிட்டையர்டான டிரைவர்கள்.

மேனேஜர் மிகவும் தைரியம் சொல்லி டிப்போவுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்தார். அவரிடமிருந்த ஒரே மந்திரச் சொல் 'பெர்மனன்ட் பண்ண நா உத்தரவாதம்."

'பெர்மனன்ட்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு சக்தி அதிகம்தான். தயக்கத்தை துரத்தியது. அச்சத்தைப் போக்கியது.

டிப்போவுக்கு வர நெருங்கினர். அங்கே வெள்ளைப் பிசாசுகளாக போலீஸ் வேன்கள் நின்றன. காக்கி மரங்களாக இரும்புத் தொப்பிகளின் வரிசை...

இடது பக்கத்தில் போராடும் தொழிலாளிகளின் வீட்டுப் பெண்கள்... குழந்தைகள்... நிறைய. சில பெண்கள் முறைப்படி கோஷமிட்டனர். மற்றவர்கள் மனசின் அக்கினியை அப்படியே துப்பினர்.

"அடப்பாவிகளா... நாசமாய்ப்... போய்டுவீக..."

"எங்க பொழைப்புல மண்ணள்ளிப் போட வந்த பாவிகளா... நீங்க ஒரு நாள் பேதியிலே ஒரு சேரப் போயிடுவீக..."

"உங்க பொண்டாட்டி புள்ளைக வெளங்காமப் போக..."

"பாவிகளா... உங்க பரம்பரையிலே இடி விழுந்து பொசுங்கிப் போவீக..."

தொழிலாளர் குடும்பப் பெண்களின் ஆவேசச் சொற்கள், அடிவயிற்றிலிருந்து பீறிட்டெழுந்த ஜ்வாலை களாகச் சுட்டன. பதற்றமும் கோபமுமாக அப்பெண்கள் உணர்ச்சிப் பிழம்பாக கொந்தளித்துக் காணப்பட்டனர்.

மலைச்சாமிக்கு மனசில் ஒரு கூச்சம். மலத்தை மிதித்து விட்ட அசூயை.

பெண்களை அடுத்து தொழிலாளர்களின் கூட்டம். காக்கி மதில்களுக்கு அப்பால், கொதி நிலையில் கோஷங்கள் உணர்ச்சி முழக்கங்களாக ஒலித்தன. வானத்தில் எதிரொலித்தன.

"சட்ட விரோதமாக கருங்காலிகளைப் பயன்படுத்தாதே..."

"கூட்டுப்பேர உரிமையை அவமதிக்காதே..."

"அதிகாரிகளின் ஆணவப் போக்கு ஒழிக..."

"அரசே, தலையிட்டு தீர்வு காணுக!"

தர்மத்தின் குரலாக கோஷங்கள் உயர்ந்து ஒலித்தன... போலீஸ் அதிகாரிகள் அங்கும் இங்குமாக உலவினர்.

'ஏதோ நடக்கப் போகுது' என்கிற திகிலான எதிர்பார்ப்பு களுடன் திரண்டு நின்ற பொது ஜனக் கூட்டம். வேலைக்குப் போகும் இந்த இருபது பேரை ஏதோ அதிசயப் பிராணிகளைப் போல பார்த்தனர்.

வண்டியில் ஏறினர். மலைச்சாமிக்குத்தான் முதல் வண்டி. ஸ்டீயரிங்கைப் பிடிக்கிறபோது மனசும், கையும் நடுங்கின, அச்சமும், கூச்சமும் மனசைப் பிசைந்தன.

தூரத்தில் ஜீப்பிலிருந்து மேனேஜர் கண்ணசைக்க, மலைச்சாமி சங்கடத்துடன் ஸ்டார்ட் செய்தான்.

பெண்களில் சிலரும், தொழிலாளர்கள் சிலரும் வண்டியின் முன் வரிசையாகக் கைகோர்த்து குறுக்காக நின்றனர். அதில் ஒரு பெண், நிறைமாதக் கர்ப்பிணி. 'மங்களத்தின் வயதுதானிருக்கும்' என்று ஏனோ அவன் மனம் யோசித்தது.

ஸ்டீயரிங்கைப் பிடித்திருந்த உள்ளங்கைகள் புழுங்கின. மனசும்தான். மேனேஜர் மறுபடியும் கண்ணசைக்க... மனசு ஊசலாட வண்டியை நகர்த்தினான்.

போலீசார் விரைந்தனர். குறுக்காக நின்ற மனித வரிசையை அப்புறப்படுத்த முயன்றனர்.

"மறியல் போராட்டம் வாழ்க."

"ஒன்றுபடுவோம், போராடுவோம்."

"போராடுவோம், வெற்றி பெறுவோம்."

"மறியல் போராட்டம் வெல்க."

கோஷங்கள் பூமியை அதிரச் செய்தன.

போலீஸ் அதிகாரி முன்னுக்கு ஓடி வந்தார்.

"வாட் இஸ் திஸ்?"

குறுக்காக நின்ற வரிசை தைரியமாகக் கூறியது. பிசிரற்ற குரலில் ஒலித்தது. "நாங்கள் மறிக்கிறோம்..."

"ஐஸீ... அப்போ அரஸ்ட் பண்ணுவோம்..."

"நாங்க தயார்..."

தொழிலாளர்களும், பெண்களும் ஒரே குரலில் உரத்துக் கோஷமிட, மறியல் வீரர்கள் வெள்ளைப் பிசாசில் ஏற்றப்பட்டனர்.

பதினைந்து நாட்கள் பறந்தன. பேராட்டம் மென்மேலும் உக்கிரமடைய சிறைக்கூடம் நிரம்ப, மலைச்சாமியின் வீட்டிலும் புழுக்கமும் இறுக்கமும் நிலவ... தொழிலாளிகள் சரித்திரத்தை எழுதிக் கொண்டிருந்தனர்.

பேச்சு வார்த்தையில் தீர்வு காண... தொழிலாளர்களின் கோரிக்கைகள் சிலவற்றை நிர்வாகம் ஏற்றுக் கொள்ள, போராட்டம் வாபஸ் பெறப்பட்டு... நாளை தொழிலாளர் கள் பணிக்குத் திரும்ப இருக்கின்றனர்.

மலைச்சாமி ஆபீசிற்குள் நுழைந்தான். மேனேஜர் இருந்தார்.

"சார்... சார்..."

நிமிர்ந்தார்.

"என்ன மலைச்சாமி?"

"நாளைக்கு வேலைக்கு வரலாமா சார்?"

"அதெப்படி முடியும்? ஸ்டிரைக் முடிஞ்சு போச்சே... ஓர்க்கர்ஸ் வேலைக்குத் திரும்பப் போறாங்களே..."

"என்ன சார் இப்படி சொல்றீக? பெர்மனன்ட் பண்றேன்னு சொன்னீக..."

"சொன்னோம். இல்லேங்கலே. ஆனா... இப்ப சர்க்கார் உத்தரவு வேற மாதிரியிருக்கே. நா என்ன செய்றது?"

"என்ன சார், இப்படி அநியாயமா கைவிரிக்கிறீக?"

"நான் சொல்றதை புரிஞ்சுக்கிட மாட்டேங்ககிறீகளே! ஸ்டிரைக்கை ஒடைச்சிடலாம். சில பேரை பழி வாங்கிட லாம்னு நாங்க நெனைச்சோம். சில பேரை டிஸ்மிஸ் பண்ணிட்டு, அந்த இடத்துலே உங்களை அப்பாயிண்ட் மென்ட் செய்ய நெனைச்சிருந்தோம். அதுதான் முடியாம போயிடுச்சே..."

"உங்க பேச்சை நம்பி இருந்த வேலையும் விட்டுட்டேனே சார்..."

"எனக்காகவா விட்டீங்க?"

மலைச்சாமிக்கு நெஞ்சுக்குள் தேள் கொட்டியது போலிருந்தது.

நெஞ்சு 'கபகபா' வென்று தகித்தது. மேனேஜரை கூர்ந்து பார்த்தான். பாய்ந்து கடித்துக் குதறிவிட மனம் ஆசைப்பட்டது. மனசுக்குள் குமைந்த கோப மெல்லாம் திரண்டு வார்த்தைகளாகி...

"அடப்பாவி, நீ... உருப்படுவியா...?"

"நாகரீகமா நடந்துக்க படிக்கணும். முதல்லே வெளியே போங்க."

அவனுக்கு சர்வாங்கமும் கோபத்தில் அதிர்ந்து நடுங்கியது. மேனேஜரின் குரல் செருப்படியாய் செவியில் மோதி, நெஞ்சில் நெருப்பைக் கொட்டியது.

"சார், இது ரொம்ப அநியாயம் சார்... தெய்வத்துக்கே பொறுக்காது சார்...."

"தெய்வத்துக்கிட்டே சம்பளம் வாங்கலே... சர்க்கார் சொல்றபடிதான் நாங்க நடக்க முடியும் வெளியே போங்க... எனக்கு வொர்க் இருக்கு.'

"சார்..."

"நீ... போறீயா, ப்யூனைக் கூப்பிடவா...?" மேனேஜரின் குரல் உறுதியுடன் ஒலித்தது.

குப்பையில் வீசப்பட்டட பழஞ்செருப்பாக வீதிக்கு வந்தான் மலைச்சாமி.

அதே வீடு அதே இருட்டு. மூலைமுடுக் கெல்லாம் பதுங்கி இருக்கும் வறுமை இருட்டு. அதே மங்களம்... அதே சாப்பாடு...

"சாப்பிடுங்க..." வேதனையோடு சொன்னாள் மங்களம்.

சாப்பிட மனமில்லாமல் சோற்றைக் கிளறிக் கொண்டிருந்தான். குழம்பில் வெந்து கருகிக் கிடந்த கருவேப்பிலையை பிரக்ஞையற்ற வெறுமையுடன் எடுத்துக் கீழே போட்டான்.

*போக்குவரத்து தொழிலாளி, 1984*

◆ ◆ ◆

# 13

# ஊர்ச்சோறு

"**ய**ம்மோ...வ், சோ...று போடுங்கம்மா... ஆ...வுடைச்சி வந்திருக்கேன்..."

வாசல்படிக்குக் கீழே ஓரமாக நின்னு ராகம் போட்டுச் சத்தம் கொடுத்தாள். இடுப்பில் எவர் சில்வர் குத்துச் சட்டி. அதில் கலர் கலராய் சோறு. பழுப்பும், மஞ்சளும், வெள்ளையுமாய் பல வீட்டுச் சோறு.

"என்ன... ஆவுடைச்சி, இன்னிக்குக் கொஞ்சம் சீக்கிரமா வந்துட்டே போலிருக்கே."

உள்ளிருந்து வந்த குரலைத் தொடர்ந்து வலது கை நிறைய சோற்றுடன் வீட்டுக்காரி.

"ஆமம்மா... மூத்தபய சாப்டுட்டு காட்டு வேலைக்குப் போகணும்னு பறக்கான்லே? கால்லே கொதி வெந்நியை ஊத்திக்கிட்டு நிப்பான்."

"காட்டு வேலைக்குத்தான் போறானா?"

"ஆமம்மா..."

"ராக்கப்பன் வேலையை கத்துக்கிடலியா? அவனுக்கும் வயசாகுதுலே? அவனுக்குப் பின்னாலே ஒம்மவந்தானே குடிவேலை செய்யணும்?"

"நானும் அந்த மனுசனும் படிச்சுப் படிச்சுச் சொல்லிட்டோம்மா. கேக்குற வழியில்லே. மாட்டேன்னு பிடிசாதனையா நிக்கான்."

"ஏனாம்?"

"இது... ஊருக்கு அடிமைப்பட்ட வேலையாம். வீடு வீடா பிச்சைச் சோறு எடுத்துப் பொழைக்கிற பொழைப்பு அவனுக்குப் பிடிக்கலையாம்."

"ஊர்ச்சோறு அவனுக்குப் பிச்சைச் சோறா?"

"அப்படித்தான் சொல்லுதாம்மா... விலாவுலே வெடிச்ச பய. தாய் தகப்பன்மார்க. நீங்க, உங்க சோத்தை பிச்சைச் சோறுன்னு சொன்னா... அவன் உருப்படுவானாம்மா? ஊரை மதிக்காத அம்பட்டையன், சீப்புக்குப் படியாத ரோமந்தானம்மா? சிலுப்பிக்கிட்டிருக்கிற ரோமம் கத்தரிப்பான் வாய்லே கடிபடத்தானே செய்யும்?"

"கூரை நிழல்லே உக்காந்து ஊருக்கு முடி வெட்டுறதை விட, வாட்டியெடுக்கிற காட்டு வெயில்லே கெடந்து சீரழியுறது... உசத்தியாக்கும்? என்னமோ... அந்தச் சாமிதா ஒம் மவனுக்கு நல்ல புத்தியை குடுக்கணும்..."

"என்னத்தை நல்ல புத்தி வரப்போகுது...! நா வாரேம்மா... இன்னும் பத்துவீடுக கெடக்கு. சோறு எடுக்கணும்."

பெருமூச்சோடு நகர்கிற ஆவுடைச்சியை அனுதாபத் தோடு பார்க்கிறாள் வீட்டுக்காரி.

ஆலமரத்தடியில் முடிவெட்டிக் கொண்டிருந்தான், ராக்கப்பன். குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருக்கிற அவன் கையில் கத்தரிக்கோல் ஒரு பரபரப்போடு இயங்கியது. பசியெடுத்த மைனாவைப்போல 'கர்ரீச்... கர்ரீச்... கர்ரீச்'சென்று பதற்றமாகக் கூவியது.

அவன் நிழலில் ஒரு சிறுவன், கழுத்தும் தலையும் சாய்ந்து கொண்டே போயிற்று. அழுது சிணுங்கி அடங்கிய விம்மல். "நேர... இரும்மையா" என்று எரிச்சலோடு நிமிர்த்து வைத்தான். இடது கையில் இரும்புச் சீப்பு, 'வருட், வருட்'டென்று இழுத்தான். சீப்புக்குள் படியாமல் சிலுப்புகிற ரோமத்தை யெல்லாம் 'கர்ரீச், கர்ரீச்' சாக்கினான். சீப்பும் கத்தரியும் அவன் கைகளில் முளைத்த விரல்களைப் போல ஒன்றிப் போயிருந்தன.

ராக்கப்பனுக்கு இந்த நாலைந்து நாளாய் ஓர் ஆசை. சிறுபிள்ளைத்தனமான சபலம். ஒரே மாதிரியான கஞ்சியை குடித்துக் குடித்துச் சளைத்துப்போன ஏழ்மையின் நோய், இன்றைக்கு இந்த ஆசை உச்சத்தில் போய் ஏறிக் கொண்டது.

இட்லிக்கடையில் சட்னியும் சாம்பாருமாய் சுடச்சுட நாலு இட்லியாச்சும் திங்கணும் என்று நாக்கு அலைபாய்ந்து வந்தது. முறுகலாய் தாளித்த சட்னியில் கிடக்கும் கடுகு வாசனை, அவனுக்கு ரொம்பப் பிடிக்கும்.

எட்டு மணிக்கு மேலாகி விட்டால் இட்லி விற்றுத் தீர்ந்து போகுமே என்கிற ஏக்கம். அவனுக்கு அந்தப் பரபரப்பு. சட்னியின் தாளித்த வாசம் மனசைச் சுண்டியிழுக்கிறது. அடிமனசின் நரம்புகளெல்லாம் அதிர்கிறது. இட்லியின் மிருதுச் சூட்டை நுனிவிரல் உணர்கிற பிரமை.

இறக்கை கட்டிப் பறக்கிற மனசு. மனசுக்கு முந்திக் கொண்டு 'கீச், கீச்' சென்று பறக்கிற கத்தரி.

தக்கென்று வந்து நிற்கிற ஒரு நிழல். ராக்கப்பன் கழுத்தைத் திருப்பி நிமிர்ந்தான். அவனுக்குள் பரவுகிற வெக்கை. பற்றிக்கொண்டு வருகிற எரிச்சல்.

முனியசாமிதான் வந்து நிற்கிறான். மூத்தபயல். கைலியை மடித்துக் கட்டியிருந்தான். கையில் சோற்றுத் தூக்குச் சட்டி. தலையில் வட்டக்கட்டாகத் துண்டு. தோளுக்கு மேல்

வளர்ந்த பயல். கை மீறிப் போனவன். தனது நிழலாக இருக்க மறுக்கிறவன். ரத்த நிழல்தான். புத்தி நிழலில்லை.

மனசின் வேக்காடு வார்த்தையின் கடுப்பில்.

"என்னலே? எங்கே கௌம்பிட்டே?"

"விறகு வெட்டப்போறேன்."

"முடி வெட்டுறது ஒனக்குக் கேவலமாப் போச்சோ? வெறகு வெட்டுறது பெருமையோ? கிரீடமா வைச்சு விடுவாக?"

பயத்தின் மவுனத்தில் முனியசாமி, தரையைப் பார்க்கிறான். எங்கோ பார்க்கிறான். அப்பனின் கண்களை எதிர்கொள்ள முடியாமல் அலை பாய்கிற பார்வை.

"எனக்குப் பிடிக்கலே." முணுமுணுப்பாக மகன்.

"ஏம்லே?"

"உங்க காலம் வேற. இப்பக் காலம் வேற."

"காலம் என்னடா... காலம்? அடைஞ்ச பொழுது விடியுது, நாளும் பொழுதும் நகருது. இதுலே எதுடா மாறிருச்சு? அப்பன் மாமனாயிருவானா? ஆத்தா அத்தையாயிருவாளா? இல்லே... நீங்கதான் தலையை தரையிலே ஊனி நடந்துருவீகளா?"

கனன்று சீறுகிற ராக்கப்பனின் கண்களை மோதுகிற அந்த இளவட்டப் பார்வை. அந்த இளங்கண்களின் ஒளித்தெறிப்பு. அதில் விம்மி விடைத்து ஒளிர்கிற மறுப்புகள். சத்தமாகிவிடாத மறுப்புகள். மவுனக் கவசத்துக்குள் மறைந்து நிற்கிற மறுப்புகள்.

"இங்கே எதுக்குலே இப்ப வந்தே?"

"நாகர்கோவிலுக்குப் பக்கத்துலே ஆரல்வாய் மொழி யிலே அணைக்கட்டு வேலை நடக்கு. நம்மூர்லேயிருந்து

நெறைய பேரு வேலைக்குப் போறாக. என்னையும் கூப்புடுதாங்க. நாப்பது ரூவா சம்பளமாம்."

"அதெல்லாம்... வேண்டாம். எங்கேயும் போய்ச் சீரழிய வேண்டாம். இங்கேயிருந்து எந்தொழிலைக் கத்துக்க. ஊருக்குப் புள்ளையாயிருந்தீன்னா... ஒரு கொறையுமில் லாமப் பாத்துக்குவாக."

"இந்தத் தொழிலையா...? இந்த ஊர்லேயா?"

"ஆமா... இந்தக் 'குடிவேலை' யிலேதா உங்கப்பன் காலம் போயிருக்கு, உங்க தாத்தன் காலம் போயிருக்கு. தாத்தனுக்குத் தாத்தனெல்லாம் இந்த ஊர்லேதான் இருந்துருக்காக? என்ன கொறைச்சல்? வீடு குடுத்துருக்காக. கல்யாணம் காட்சியை பாத்துக்கிடுவாக. நல்லது பொல்லதுன்னாலும் கவனிச்சுக்கிடுவாக. அவுக வீட்டுப் புள்ளையா நம்மளை மதிப்பாக. அவுக சாப்புடுறதை நமக்குப் போடுவாக."

"அந்தக் காலமெல்லாம்... போயிருச்சு."

"என்னடா சொல்லுதே?"

"இப்ப இருக்கற ஊரு... பழைய ஊருல்லே."

மறுத்து மறுத்து எதிர்வாதம் செய்கிற சின்னப் பயல், நேற்று முளைத்த சிறுகீரை. எல்லாக் காலத்தையும் அளந்து முடிச்சிட்ட அறிவாளி மாதிரி...

ராக்கப்பனுக்குள் சண்டாளமாய் வந்தது.

"பூராவும் தெரிஞ்சிட்டீயோ... தேவடியா மவனே? மப்பேறிப் போன ராஸ்கல், போடா... அங்குட்டு. மூஞ்சியிலே முழிக்காதே... போடா... நாயி."

ராக்கப்பனின் ரத்தச்சூடும் சத்தமும் சட்டென்று அதிகரிக்க... கண்களில் கனல். கோபத்தின் அழுத்தத்தில் மட்டியை கடித்தான். நாசித்துளை விடைத்தது.

தழைந்து தழைந்து நிமிர்கிற மகனின் பார்வை. கண்ணீர் மல்குகிற பார்வையில் மறுப்புச் சத்தங்கள். எது எதுவோ சொல்ல வேட்கைப்படுகிற உதடுகள். வெறுமனே, முணுமுணுப்பில் நகர்ந்து விட்டான்.

அடங்க மறுத்துப் பீறிடுகிற ஆத்திரம் ராக்கப்பனுக்குள்.

“வந்து பொறந்துருக்கான் பாரு... வவுத்துலே மூத்த பிள்ளையா, மயிர்கணக்கா, அப்பன் காலடி வாழையா அனுசரிச்சு வளருவான்னு ஆசைப்பட்டா... இவன் என்னடான்னா... தலைமுறை தத்துவமாயிருந்து வர்ற வழமுறையை அறுக்குற பயலா வந்து வாய்ச்சிருக்கான். எடுபட்ட பய. தலைக் கொழுப்பு ஏறித் திரியுதான்...”

இன்னும் நீளம் நீளமாகத் தெறிக்கிற மனப் பொறிகள். உள் கொதிப்பை உளறிக் கழித்தான். வேலை வேலையாகவுமிருந்தது.

சிறுவனுக்கு முடிவெட்டி முடித்தான். கத்தியை எடுத்து நிமிர்த்தி சுற்று வழிப்பும் முடித்து, முதுகில் ஒட்டியிருந்த ரோமக் கற்றைகளை தட்டி உதறினான்.

வேலை முடிந்த நிறைவில்... மனசுக்குள் பழைய இழை. இட்லி சாப்பிடப் போகிற ஆசை. தாளித்ததில் பொறிந்த கடுகுவாசம். கருகிச் சுருண்ட கருவேப்பிலை மணம்.

வேட்டியிலும் பனியனிலும் ஒட்டியிருந்த ரோமத்துகள் களை அடித்து உதறிக் கொண்டு எழுந்தான். முழங்கால் மூட்டுக்களின் நெறுநெறுப்பு, பொழுதுக் காலை பார்த் தான். மணி எட்டை நெருங்கும்.

இட்லிக் கடையில் இலை போட்டுச் சாப்பிடுகிற சுகம். இட்லியைப் பிய்த்துப் பிய்த்து சட்னியில் குழைத்து... அடடா!

அந்நேரம் பார்த்தா... நாட்டாண்மை வந்து மறிக்க வேண்டும்? இட்லி சாப்பிடணும் என்று அவரிடம் போய்ச் சொல்லவா முடியும்? “ஏண்டா, அம்பட்டைப் பயலுக்கு

இந்நேரம் இட்லி கேக்குதோ?" என்று நாலு வசவு நாறவசவாக வைய்யவா?

"என்ன மோலாளி..."

"முடிவெட்டணும்பா."

இவனுக்குள் பூரான் ஊர்கிற உணர்வு. ஈர்க்கிற இட்லிச் சபலம். வழி தேடித் தவிக்கிற கூண்டெலியின் யத்தனிப்பு.

"வீட்லே ஒரு சின்ன வேலை. போனதும் வந்துருதேனே மோலாளி."

"நா ஒம்பது மணிப் பஸ்ஸுக்கு குளிச்சிட்டு, சாப்ட்டுட்டுப் போகணும்பா, இப்பவே லேட்டா யிடுச்சு."

"அப்படியா மோலாளி..."

"ஆமப்பா... போய்ட்டு சாயங்காலம் வண்டிக்கு வந்தாகணும்லே? இன்னிக்குப் பவுர்ணமியில்லே? ஊர்க்கூட்டம் இருக்குல்லே?"

"ஆமா... நெசந்தா."

"நீயும் சாயங்காலம் வீடு வீடாப் போய் ஊர்க் கூட்டம்னு சொல்லிரு."

"ஆட்டும் மோலாளி."

நாட்டாண்மையின் சொற்கள் எதுவும் மனசில் ஒட்டவேயில்லை, அவர்மீது இவனுக்குள் எரிச்சல் எரிச்சலாக வந்தது. இப்படிக் காலடிச் செருப்பாகக் கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டியிருக்கிறதே என்று கசந்து வந்தது. நேரங்கெட்ட நேரத்தில் வந்து கழுத்தறுக்கிறாரே என்கிற கடுப்பு.

எட்டு மணியாகி விட்டால்... இட்லி காலியாகிப் போகும். இட்லியின் மிருதுச்சூடு மனசுக்குள் சோகமாக ஆவி பிரிந்தது. உள் ஒடுங்கிய உணர்வலைகளுடன் சுருட்டி யிருந்த கத்திப்பையை மீண்டும் விரித்து உட்கார்ந்தான்.

அவர் சம்மணம் போட்டு உட்கார, இவன் குத்துக்கால் வைத்து உட்கார்ந்தான். கிண்ணியிலிருந்து தண்ணீரையள்ளி அவரது பிடறிப் பக்கம் தெளித்துத் தேய்த்தான்.

“என்ன ராக்கப்பா... மூத்த பய கையிலே கத்தரியைத் தரக்கூடாது? ஒனக்கும் வயசாகுது. அவனையும் வசக்கணும்லே?”

“எனக்கும் நெனைப்புத்தான். அவந்தா வசங்கி வரமாட்டேங்கான்.”

“ஏனாம்?”

“அவுக முகரைக்கு இந்தத் தொழிலு பிடிக்கலையாம்.”

“வரட்டும். பயலை நா சத்தம் போட்டு அரட்டிவிடுதேன். சின்ன நாய், நம்மளை மிஞ்சியா போயிரும்?”

மறந்து போயிருந்த மனசில் மீண்டும் புண் வேதனை. முனியசாமி படிய மறுக்கிற அவனது அறியாமை. கட்டுப் பட்டு வாழ்கிற வாழ்வுக்குள் இருக்கிற சுகத்தையும் பாதுகாப்பையும் உணராமல்... புத்தி கெட்டுத் திரிகிற பொசை கெட்டபயல்.

ரண அதிர்வாய் நினைவலைகள்.

இரும்புச்சீப்பும், கத்தரியும் கற்றை கற்றையாக நரை முடியை வெட்டித் தள்ள... நாட்டாண்மையிடம் வாய் வாயாக இருக்க... மனசு மட்டும் எங்கோ எங்கோ....

ஆவுடைச்சியை கல்யாணம் ‘மூய்த்து’க் கொண்டு வந்த அன்றைக்கு அப்பன் முனியன்தான் சொன்னான்: “ஏலேய் ராக்கா, ஊர் மோலாளிமார்க காலிலே விழுந்து திருநூறு பூசச் சொல்லுடா.”

மாலையும் கழுத்துமாய் வீடு வீடாகப் போனான். ஆவுடைச்சியைக் கூட்டிக் கொண்டு காலில் விழுந்து எழுவார்கள், ஜோடியாக. திருநீறுத் தட்டை நீட்டுவார்கள்.

எடுத்து இருவர் நெற்றியிலும் பூசுவார்கள். கும்பிட்ட கைக்குள் ரெண்டோ ஐந்தோ ரூபாயை திணிப்பார்கள். வந்த வரவு ஜாஸ்தி.

கல்யாணச் செலவு முழுவதையும் சரிக்கட்டி, மிஞ்சி நின்ற பணத்தில் ஆவுடைச்சிக்கு ஒரு சேலையை எடுத்தான்...

...பங்குனிப் பொங்கல். ஊரெல்லாம் ஓலைக் கொழுக் கட்டை அவிப்பார்கள். பச்சரிசிமாவும், கருப்பட்டிப்பாலும் பிசைந்து, அறுபட்ட குருத்தோலைகளில் மாவை வைத்து வேக வைத்து எடுப்பார்கள். கத்தி போல இருக்கும். கடித்தால் தித்திப்பும் வாசமும் மனசைக் கிறங்கடிக்கும்.

அவித்த வீடுகளில் ரெண்டு நாளைக்கு இருந்தால்... அதிகம். எல்லா வீட்டார்களும் குடி மகன், ஏகாலிக்கும் கொழுக்கட்டை போடுவார்கள். பிள்ளைகளுக்குத் தருகிற பாங்கில்.

இவன் வீட்டில் வந்து நிறைந்து போகும். பத்து நாளைக்குப் பிறகும் மிஞ்சிக் கிடக்கும். காயக்காய ருசி. காய்ந்த கொழுக்கட்டையையும், தேங்காச் சில்லையும் கடித்துக் கடித்துத் தின்றால்.... அந்த ருசியே... தனீ.

...ஆடி தீபாவளி என்றால் ஊர்ப்பட்ட தோசை இட்லியெல்லாம் இவன் வீட்டில். கறிக்காசு வேறு தனியாகத் தந்துவிடுவார்கள்.

—ஊரில் எந்த வீட்டில் கல்யாணம், இழவு என்றால் இவன் காரியம் இல்லாமல் போகாது. இவனையும் வீட்டுப்பிள்ளையாகக் கருதி வேட்டித் துண்டு அரிசி பருப்பு காய்கறியெல்லாம் தந்து, மேற்கொண்டு 'சுதந்திரப் பணமும்' உண்டு.

நாவிதர் தானே என்று இளப்பமாக நினைத்து அடுத்த சாதிக்காரர்கள் யாரும் நாக்கில் பல் போட்டு ஒரு சொல்

கூட பேசி விட முடியாது. தப்பித் தவறி யாராச்சும் பேசிவிட்டால்... அம்புட்டுத்தான். ஊரே கொதித்துவிடும்.

“எங்க சாதி நாவிதனை பேசுறதும், எங்க சாதியை வையுறதும் ஒண்ணுதான், பைசல் பண்ணாம விடமாட்டோம்”னு வரிந்து கட்டிக்கொண்டு ஒத்தைக்ககாலில் நிற்பார்கள்.

இம்புட்டுச் சௌகர்யம்... வாஞ்சை... பாதுகாப்பு... இத்தனையையும் அத்து விட்டுட்டுப் போகணும்னு மழைக்காட்டுத் தவளைக்கணக்கா கத்துதானே... இந்தத் தறுதலைப்பய... இதெல்லாம் இவனைப் பிடிச்ச ஏழரை நாட்டான்தானே? இவனைப் பிடிச்ச ஏழரை நாட்டான் இவனோட போகுமா? குடும்பத்தையும் பிடிச்சு ஆட்டத் தானே செய்யும்?...

ராக்கப்பனுக்குள் கவலைப் பின்னல்களாய் நினைவுச் சுழல்கள்.

நாட்டாண்மைக்கு முடிவெட்டி முடித்து, முகச் சவரம் செய்து, மீசையை சரிபண்ணி, நாசிரோமங்களைக் கத்தரித்து, கம்மங்கூடும் வழித்து முடித்த போது, முள் ளெடுக்கணும் என்று காலை ஏந்திக் கொண்டு ரெண்டு பேர்.

ஆக... ‘அந்தா, இந்தா’ என்று நேரமாகி, எழுந்திருக்க மணி ஒன்பதரை. கடையில் இட்லி விற்றுத் தீர்ந்து போயிற்று.

ராக்கப்பன் மனசுக்குள் சப்பென்று அறைகிற ஏமாற்றம். முன்பே உணர்ந்ததுதான். எதிர் கொள்கிறபோது ஏற்படுகிற சலிப்பு, ஏக்கம், எரிச்சல். காய்ந்து கிடந்த இட்லித் தட்டுகளை ஏக்கமாய்ப் பார்த்தான்.

சாயங்காலம். பொழுதடைந்துவிட்டது. மேலடி வானத்துச் சாரல். மேகங்களில் மட்டும் சூர்யமிச்சம். கன்றிச் சிவந்த மேகத்து வெளிச்சம்.

ராக்கப்பன் வீடு வீடாகப் போய்ச் சொன்னான்.

"யம்மோ...வ்"

"என்ன ராக்கப்பா?"

"மோலாளி இருக்காகளா?"

"புஞ்சைக்குப் போயிருக்காக. இன்னும் வல்லே."

"இன்னிக்கு மடத்துலே ஊர்க்கூட்டம். ராக்கப்பன் சொல்லிட்டுப் போறான்னு மோலாளி கிட்டே சொல்லிருங்கம்மா."

நூற்றியெட்டு தலைக்கட்டு, அத்தனை வீடுகளுக்கும் நடையாய் நடந்து செத்தான். நாலைந்து வீடுகளின் முன்னால்... ஆட்டுரலில் உளுந்தம் மாவு போட்டு ஆட்டிக் கொண்டிருந்தனர். பக்கத்தில் ஊறி நனைந்த அரிசி. உரல் முழுக்க வெள்ளை வட்டமாய் குழையும் மாவு.

'இப்ப என்ன?... பண்டிகை தீவாளின்னு ஒன்னு மில்லியே... இவுக வூடுகள்லே மட்டும் 'ஆசை'க்கு போடுதாகளோ...'

ராக்கப்பன் மனசுக்குள் இட்லி தோசை சபலம், சவலைப் பிள்ளையாய் சிணுங்கியது.

விடிந்தது. ராக்கப்பனுக்கு ஆலமரத்துக்குப் போகவே மனசில்லை. போர்வையை இழுத்து மூடிப் படுத்துக் கொண்டான். முடி வெட்டணும், முகச்சவரம் பண்ணணும் என்று தேடி வந்த ரெண்டொருவரிடமும் "காய்ச்சல்" என்று பாவலா பண்ணிவிட்டான்.

ஆலமரத்தடிக்குப் போய் விட்டால்... வேலை நாறிப்போகும். சாப்பிட முடியாது. பத்து மணிக்குமேல் தான் சாப்பாட்டை நினைக்க முடியும்.

இன்றைக்கு அப்படி இருக்க முடியாது, ராக்கப்பனால். வறுத்த கறி இருக்கிற உரியைச் சுற்றிச் சுற்றி வருகிற

பூனை மாதிரி... அவன் மனசு வாலாட்டிக் கொண்டே யிருந்தது.

முற்றம் தெளிக்க, வீடு பெருக்க என்று வழமையான வீட்டு வேலையாக இருந்த ஆவுடைச்சியை விடாமல் நச்சரித்தான். 'சீக்கிரம் சோறு எடுக்கப் போ' என்று.

ஆவுடைச்சிக்கு புருஷன் புதுசாகத் தெரிந்தான். புதிராகவும் தெரிந்தான், "என்ன மனுசா, இன்னைக்கு ஒனக்கு என்னாச்சு? என்னை இந்தப் பாடு படுத்துறே?"

சலிப்போடு எரிந்து விழுந்த பெஞ்சாதியிடம் "ஒன்னு மில்லை" என்று அப்பாவித்தனமாய் சொல்லி விட்டு, பூனையாகச் சுருண்டு முடங்கிக் கொண்டான்.

சோறெடுக்க தெருவுக்குப் போயிருந்த ஆவுடைச்சி வருவதற்குள், அடுப்புச் சாம்பலில் பல்தேய்த்துக் கொண்டான். போர்வையை இழுத்து மூடிக்கொண்டு கையில் கிளாஸுடன் இட்லிக் கடைக்கு ஓடினான். 'குற ஜாலம்' போட்டு ஓசிச் சட்னி வாங்கிக் கொண்டு வந்தான்.

பாலுக்குத் தாயை எதிர்பார்த்து ஏங்கித் தவிக்கிற சோனிப் பிள்ளையாய்... மனசு.

ஆவுடைச்சி வீடு நுழையவும், ராக்கப்பன் 'தடபுடா' வென்று எழுந்தான். பரபரத்தான்.

"சரி... எடுத்துவை."

"என்ன?"

"சாப்புடணும்லே?"

"இந்நேரத்துலேயா?"

"சாப்புட்டுடுத்தான் ஆலமரம் போவணும்."

"என்ன... இன்னைக்கு எல்லாமே புது வழமை யாயிருக்கு."

இடுப்பிலிருந்த குத்துச்சட்டியை இறக்கிவைத்தாள். சின்னப்பிள்ளை மாதிரி ஆவல் பறப்போடு சட்டியை எட்டிப் பார்த்தான், ராக்கப்பன். கலர் கலராய்ச் சோறு. சோறுகள்.

விருட்டென்று நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவன் கண்களில் கோப வெக்கை. சீறிவிடைக்கிற நாசி. முகம் முழுக்க ஆத்திர விறைப்பு.

"எல்லா வீடுகள்லேயும் சோறு எடுத்தீயா?"

"ஆமா?"

தெற்குத்தெருவில் மாவாட்டிக் கொண்டிருந்த அந்த நாலைந்து வீட்டுக்காரர்களின் பெயர்களைச் சொன்னான், படபடவென்று.

"அங்கெல்லாம் போனீயா?"

"ஆமா?"

"என்ன போட்டாக?"

"பழைய சோறுதான்."

"எல்லாமே சோறுதானா?"

"ம்."

"வெறொன்னுமில்லே...?"

"இல்லே. என்ன இப்படி கேக்கே? சோறு போடாம, தங்கக் கட்டியா தூக்கிப் போடுவாக?"

கோப விறைப்பில் விம்மிக் கிடந்த அவன் முகத்தில் சட்டென்று ஒரு தளர்வு. சுருங்கி இடுங்கிய கண்கள். முகத்தில் துல்லியமாய் துடித்து நின்ற ஏமாற்றம். நம்பிக்கையின் ஆணிவேரையே சுட்டுக் கருக்கி விட்ட கொடிய ஏமாற்றம். கோபமும், வாட்டமுமாய் குலைந்து கிடக்கும் புருஷனின் மனநிலை புரியாமல், அவனையே ஓர் அதிர்வோடும் பரிவோடும் பார்த்தாள்.

அவனது கண்ணிலிருந்த கற்றைச் சோகம், அவளுள் திணறடித்தது. மனப்பிசைவோடு கேட்டாள்:

"ஏன்யா... என்னாச்சு ஒனக்கு?"

உடைந்த குரலில் கரகரத்த அவளை நிமிர்ந்து பார்த்தான். அவன் முகத்தில், அடிபட்ட பறவையின் வலி.

"தாய் தகப்பன்மார்க தோசை இட்லியை தின்னுட்டு, புள்ளைகளுக்கு பழைய சோறு போடுவாகளா?"

"எதுக்கு இப்படிக் கேக்கே?"

"இல்லே ஆவுடை, நம்ம ஊரு முந்தி மாதிரியில்லே. தலைகீழாப் போயிருச்சு."

அவன் குரலில் எல்லையற்ற கனத்த சோகம். தன்னையே இழந்து விட்ட மாதிரி– தானே இழிவு படுத்தப்பட்ட மாதிரி அவன் முகத்தில் அப்படியோர் அவமான அவஸ்தை.

"என்னய்யா... சாப்புடலியா?"

"இல்லே..."

"எங்க கெளம்பிட்டே?"

"வாயெல்லாம் கசந்து கெடக்கு. கடையிலே போய் காசக்குடுத்து நாலு இட்லி சாப்புடணும்."

"ஏன்... நெசமாவே காய்ச்சலா?"

"ம்."

வாசலுக்குப் போய் திரும்பிப் பார்த்தான்.

"மூத்தபய முனியசாமி அணைக்கட்டு வேலைக்குப் போவணும்னு சொன்னான்லே?"

"ஆமா!"

"போவச் சொல்லு. போவட்டும்" என்றான்.

**– புதியபார்வை...**

கங்கை

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794